
லாத
சமுதாயம்
காண்டர்பரி டீன்
டி. என். பிரிட்

ஒப்பிலாத சமுதாயம்

ஆசிரியர்கள் :

டி. என். பிரிட் (பார்லிமெண்ட் அங்கத்தினர்)

ஹியூலெட் ஜான்ஸன் (காண்டர்பரி பாதிரியார்)

மொழி பெயர்ப்பு:

நா. வானமாமலை M. A.

ஜனசக்தி பிரசுராலயம்,

1/6, டேவிட்ஸன் தெரு,

ஜி. டி., சென்னை.

விலை 4 அணா.

~~விலை 8 அணா~~

ஜூலை 1945]

சென்னை "ஜனசக்தி" பிரஸில் பி. ராமமூர்த்தியால் அச்சிடப்பட்டு, இந்திய கம்யூனிஸ்டுக் கட்சியின் தமிழ் மாகாணக் கமிட்டியின் சார்பாகப் பிரசுரிக்கப்பட்டது.

முன்னுரை

இந்த யுத்தத்தில் மாபெரும் சக்தியாக மலர்ந்துள்ளது ஸோவியத். அதைப்பற்றி அறிந்துகொள்வதற்கு அன்பு கடந்த ஆவல் நம்முடைய நாட்டு மக்களிடம் ஏற்பட்டிருப்பது இயல்பே. ஸோவியத் யூனியனைப்பற்றி பற்பல கதைகள் உலவி வருகின்றன. ஆனால் அவை அனைத்தும் சரியானவையா, அங்குள்ள நிலைமையைக் கூடிய அளவுக்கு சரிவர எடுத்துக் கூறுகின்றனவா என்பது வேறுவிஷயம்.

இந்த மொழிபெயர்ப்பில் இரண்டு கட்டுரைகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. முதற்பாகம் டி. என். பிரிட் எழுதியது. பிரிட் ஒரு தீவிரவாதி. பார்லிமெண்ட் அங்கத்தினர். 1939-ம் வருஷம் சேம்பர்லேன் சர்க்கார் ஸோவியத்துடன் பேச்சு வார்த்தை நடத்தி போலி நாடகம் நடத்தியதை அம்பலப்படுத்திய அறிஞர். மாஸ்கோவின் அயல்நாட்டுக் கொள்கையை விளக்கமாக எடுத்துரைக்கும் நூலை எழுதியவர். இங்கு தந்துள்ள கட்டுரையில் ஸோவியத் சமுதாயத்தின் பற்பல அம்சங்களைப்பற்றி அறிய பல விஷயங்களைச் சுருக்கமாக அளித்திருக்கிறார்.

இரண்டாம் பாகம் காண்டர்பரி பாதிரியார் எழுதியது. அவர் எழுதியுள்ள "உலகில் ஆறிலொரு பங்கு ஸோஷலிஸ்ட் சமுதாயம்" என்ற நூல் லக்ஷக்கணக்கில் விற்பனை

யாகி யிருக்கிறது. ஸோவியத் ருஷ்யாவைப் பற்றியுள்ள பல சந்தேகங்களை நிவர்த்தி செய்துள்ள நூல் அது. தனி மனிதனின் தன்மையை மறைத்துவிடுகிற மெஷின் அமைப்பு ஸோவியத் என்ற கூற்றுக்கு சரியான பதிலை இக்கட்டுரையில் அவர் கொடுத்திருக்கிறார்.

இவ்விரண்டு கட்டுரைகளும் சேர்ந்து ஸோவியத் யூனியனைப்பற்றி ஒரு திட்டவட்டமான காட்சியைப் படிப்பவர் மனதில் பதியவைக்கும்; பல சந்தேகங்களைத் தீர்க்கும் என்றே இச்சிறு நூலை வெளியிட்டுள்ளோம்.

சென்னை,
20-7-45.

ஜனசக்தி பிரசுராலயத்தார்.

ஒப்பிலாத சமுதாயம்

••••••••••••

சோவியத் குடியரசு தோன்றி இன்று 25 வருஷங்கள் தான் ஆகின்றன. இந்தக் குறுகிய காலத்திற்குள் பல நூற்றுண்டுகளில் பெற முடியாத வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் சோவியத் அடைந்துவிட்டது. உலகின் வல்லரசுகள் என்ன செய்வதென்று அறியாது திணறிக் கொண்டிருந்த காலத்தில் ருஷ்யா மட்டும் இத்தகைய மகத்தான வளர்ச்சியடைந்தது எவ்வாறு என்று அறிய அதன் சரித்திரத்தைத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். முன்னேற்ற சக்திகள் ஒன்றுசேர்ந்து ஒரு பெரும் போரில் ஈடுபட்டிருக்கும் தற்காலத்தில் சோவியத் ருஷ்யாவின் போர் வலிமையின் காரணம் என்னவென்று உணரவேண்டியது அவசியம். புது ருஷ்யாவின் சரித்திரம், விடாமுயற்சியோடு பல இடைஞ்சல்களை எதிர்த்துப் போராடி ஒரு இலட்சிய சமூகத்தை நிர்மாணித்த மக்களின் கதையைச் சொல்லுகிறது. அதனைச் சுருக்கமாகத் தெரிந்துகொள்வோம்.

ஜார் மன்னன் ஆட்சியில்

ஜார் மன்னனது ஆட்சியில் ருஷ்ய மக்களது வாழ்க்கை எவ்வாறு இருந்தது? ஐரோப்பாவிலே வாழ்க்கை நிலையில் ருஷ்யாதான் மிகவும் பிற்போக்கானது. ருஷ்யர்

களில் 100-க்கு 97 பேர் தற்குறிகள். கொடுங்கோன்மை தலைவிரித்தாடும் ஆட்சி-இயந்திரத்தின் கீழ் ஏழை மக்கள் வாயில்லாப் பூச்சிகளாக வாழ்ந்து வந்தார்கள். விவசாயம் தான் அக்காலத்தில் ருஷ்யாவின் அடிப்படைத் தொழில். ருஷ்யர்கள் பின்பற்றிய விவசாய முறைகள் விஞ்ஞான வளர்ச்சிக்கேற்ப புதிதாக்கப்படவில்லை. நாட்டிற்கு வேண்டிய தேவைப் பொருள்களை உற்பத்தி செய்யப் போதுமான தொழிற்சாலைகளில்லை. இந்நிலைமையை நேரில் உணர்ந்தவர்கள் ருஷ்யா முன்னேற்றப் பாதையில் முதற்படி ஏறுவதற்கே நீண்டகாலம் செல்லுமென்று எண்ணினர்கள். புதிய ருஷ்யா என்ற மாளிகை எந்த அடிப்படைக் கொள்கைகளின்மீது கட்டப்படப் போகிறது என்பதை உணர்ந்த ஒரு சிலரே அதன் வருங்காலப் பெருவாழ்வில் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

போரின் மத்தியில் புனர் நிர்மாணம்

சென்ற உலக யுத்தத்தின் மத்தியில் ருஷ்யத் தலைவர்கள் பெருவாரியான நிர்மாண வேலையைத் தொடங்க வேண்டியிருந்தது. யுத்தத்தின் காரணமாக ருஷ்யப் பொருளாதார நிலை ஒரே அடியாகக் குழப்பமடைந்திருந்தது. ஜனங்கள் வறுமையிலும் அறியாமையிலும் துன்பத்திலும் மூழ்கியிருந்தார்கள். இவை முன்னேற்றத்திற்குத் தடையாக நின்றன. ருஷ்யா ஒரு சமாதான ஒப்பந்தத்தின் மூலம் யுத்தத்திலிருந்து விலகிக்கொண்டது. ஆனாலும் யுத்தம் ருஷ்யாவை விட்டபாடில்லை. ஏனெனில் ருஷ்யப் புரட்சியை எதிர்த்து அயல்நாட்டு முதலாளிகளின் பண உதவியால் பிற்போக்காளர்கள் நடத்திய கிளர்ச்சிகள் நான்கு வருஷங்கள் வரை நீடித்தன. அவற்றை வெற்றிகரமாகச் சமாளித்த பின்னரே நிர்மாணத் திட்டங்களை ஆரம்பிக்க முடிந்தது.

புதிய ருஷ்யா இடையூறுகளைப் பொருட்படுத்தவில்லை. மக்களுக்குத் தங்கள் வருங்கால இன்ப வாழ்விற்காக உழைப்பதில் உற்சாகம் தோன்றியது. வெளிநாடுகளிலிருந்து அவர்கள் பண உதவியோ இயந்திர உதவியோ எதிர்பார்க்கவில்லை. சில தொழில் நிபுணர்கள் மட்டும் அயல் தேசங்களிலிருந்து வரவழைக்கப்பட்டார்கள். இவ்வளவு இடைஞ்சல்களின் நடுவே ருஷ்யத் தொழில் திட்டம் வெற்றி பெற்றதற்கு பொதுமக்களின் ஆர்வமும் ஆதரவுமே காரணங்கள்.

நிர்மாண வேலை 20 வருஷங்கள் தொடர்ந்து நடைபெற்றது. வெளிநாட்டார்கள் ருஷ்யர்களுக்குப் பிரமாதமான உதவி எதுவும் செய்யவில்லை. உபத்திரவம் எதுவும் செய்யாமல் விட்டதே பெரிய காரியம். இந்த 20 வருஷ முயற்சியின் பலனை இப்பொழுதுகூட ருஷ்யர்கள் அனுபவிக்க முடியவில்லை. இதற்குக் காரணம் யுத்த பீதியும் யுத்தமுமேதான். 1933-ம் வருஷம் ஹிட்லர் ஜெர்மனியில் அதிகாரத்தைக் கைப்பற்றியவுடனேயே சோவியத் தலைவர்கள் ஒரு பெரிய யுத்தம் வந்துதான் தீரும் என்று கண்டார்கள். அதிலிருந்து உலோகச் செல்வத்தின் பெரும் பான்மையையும் தங்கள் உழைப்பின் பயனில் பெரும் பகுதியையும் வரப்போகும் யுத்தத்திற்காகச் சேமித்து வைக்கத் தொடங்கினர்கள். ஹிட்லரின் எழுச்சியோடு தலைதூக்க ஆரம்பித்த பாஸிசம் தங்கள் கொள்கைகளுக்கு முரணனது என்பதையும், அதை ஒழிக்க இராணுவ பலத்தைத் தவிர வேறு வழி கிடையாதென்பதையும் நன்குணர்ந்து செம்படையின் இயந்திர சாதனங்களைப் பெருக்க ஆரம்பித்தார்கள். இதைச் சாத்தியமாக்கத் தங்கள் நாட்டையே இயந்திர மயமாக்க அவர்கள் முனைந்தார்கள். இவ்வாறு ருஷ்யர்கள் தாய்நாட்டைப் பலப்படுத்திப் பொதுவுடைமை சுதந்திரத்தை ஸ்திரப்படுத்த எல்லாத் தியாகம்

களுக்கும் தயாரானுர்கள். இன்றைய யுத்தத்தில் ருஷ்ய வெற்றியின் இரகசியம் இதுதான்.

பாசிஸத்தை எதிர்க்க பாதுகாப்புத் திட்டங்கள்

நிர்மாண வேலை இருபது வருஷங்கள் மும்முரமாக நடைபெற்றது. துன்பம், போர், வறுமை, வெளிநாட்டு மறியல், உள்நாட்டுக் குழப்பம் ஆகிய எல்லாத் தடைகளையும் ருஷ்ய மக்கள் ஏககாலத்தில் எதிர்த்து வெற்றி கொண்டார்கள். மேலும், இன்னது இப்படிச் செய்யவேண்டுமென்று திட்டம் போட்டு, அதற்கேற்ற வேலை நடத்தினர்கள். ஒவ்வொரு துறையிலும் ஐந்து வருஷத் திட்டங்கள் போட்டு மும்முறை நிறைவேற்றினுர்கள். இவற்றின் மூலமாகவே தங்கள் கடற் படையையும், தரைப் படையையும், விமானப் படையையும், பன்மடங்காகப்பெருக்கி வலிவுள்ளதாக்கினுர்கள். ஹிட்லரது எழுச்சிக்குப் பின் எப்பொழுதும் போருக்கு ஆயத்தமாக இருக்கவேண்டுமெனக் கருதித் தங்கள் தற்காப்பு வசதிகளைக் கவனமாகப் பலப்படுத்திக் கொண்டார்கள். 1932-ம் வருஷத்தில் தற்காப்புக்காக ஒதுக்கப்பட்ட பணத்தைவிட 1942-ம் வருஷம் ஒதுக்கப்பட்ட பணம் 41 மடங்கு அதிகம். தனி மனிதனது தேவைகளைக் குறைத்து, பொது நன்மைக்காக சக்தியையும், பொருள்களையும் சேமித்து வைக்கவேண்டியிருந்தது. அதனுல்தான், சென்ற இருபது வருஷகாலமாக ருஷ்யர்கள் வாழ்க்கை நிலையை உயர்த்திக்கொள்ள முடியவில்லை. டாங்கிகள், துப்பாக்கிகள், விமானங்கள் இவற்றை உற்பத்தி செய்யத் தேவையான எஃகு, மின்சாரம், மனித சக்தி இவைகளையெல்லாம் டிராக்டர்கள், வீடுகள், மேஜை நாற்காலி முதலிய சாமான்கள் செய்வதற்குப் பயன்படுத்தலாம். ஆனுல் பாஸிஸத்தை எதிர்த்துப் போராடுவதற்கு இன்றியமையாதது. தேவையான பொருள்களை உற்பத்தி

செய்வதே யுத்த காலத்தில் முக்கியம். யுத்தத்தில் வெற்றி பெற்று சுதந்திரத்தை ஸ்திரப்படுத்திக் கொண்ட பின்பு தேவையான பொருள்களைச் சாவதானமாக உற்பத்தி செய்துகொள்ளலாம். பிற்காலச் சுகவாழ்வுக்காக யுத்த காலத்தில் ருஷ்யா எவ்வளவோ தியாகங்களுக்குத் தயாராகவேண்டி வந்தது. ஆனால் அது எதற்கும் பின்வாங்கவில்லை. இதைக் குறித்து எவனிகிரீகர் என்னும் ஆசிரியர் பின்வருமாறு எழுதுகிறார்:—

"வாழ்க்கையை இன்ப மயமாக்க நாங்கள் விடாமல் உழைத்தோம். வருஷா வருஷம் செஞ் சதுக்கத்தில் நடைபெறும் ராணுவ அணிவகுப்பும், கொடி வணக்கமும் வெறும் அடையாளமாக மாத்திரமில்லாமல், வரப்போகும் பாஸிஸ எதிர்ப்புப் போரை ஞாபகமூட்டும் சின்னங்களாக மாறின. தலைவிரிகோலமாக உலகத்தை ஆக்கிரமிக்கக் கிளம்பிய பாஸிஸம் என்னும் அசுரனை வீழ்த்த நாங்கள் தயாரானோம்."

தொழில் வளர்ச்சியும் தொழிலாளர் பெருவாழ்வும்

ருஷ்யாவின் புனர்நிர்மாண முயற்சியின் பலனை இன்றுதான் உலகம் ஒருவாறு அறிகிறது. ஆழ்ந்து நோக்கினால்தான் அதன் விளைவு முழுவதையும் நாம் மதிப்பிட முடியும். முதன்முதலில் தொழில் துறையில் ருஷ்யா அடைந்துள்ள முன்னேற்றத்தைப்பற்றி அறிந்துகொள்ளுவோம்.

முப்பது வருஷங்களுக்கு முன் ருஷ்யாவில் தொழிலாளிகளது நிலை மகா மோசமாயிருந்தது. நாளுக்குப் பத்து மணி நேரம் மூச்சுவிடாமல் அவர்கள் உழைத்தபோதிலும் அரைவயிற்றுக் கஞ்சிக்குக்கூட போதிய வருவாய் கிடைக்காமல் திண்டாடி வந்தார்கள். வேலை நேரத்தைக் கட்டுப்

படுத்தவோ, இலவச வைத்திய உதவி செய்து கொடுக்க வேண்டுமென்று நிர்ப்பந்தப்படுத்தவோ சட்டமெதுவும் கிடையாது. ஆனால், இன்றைக்கு அவர்களது வாழ்க்கை நிலை முற்றிலும் மாறிவிட்டது. அவர்களே இன்று ருஷ்ய நாட்டின் பெருந் தொழில்களனைத்தையும் நிர்வகித்து நடத்துகிறார்கள். அவர்களது வேலை நேரம் உலகத்திலுள்ள மற்ற எல்லா உழைப்பாளிகளது சராசரி உழைப்பு நேரத்தைவிடக் குறுகியது. முதன்முதலில் முன்பின் பழக்கமில்லாத நாட்டுப்புற வாலிபர்களைக் கொண்டு எல்லாத் தொழில்களிலும் அமர்த்தவேண்டி யிருந்தது. அதனால் உற்பத்தித் தரம் குறைவாகவே இருந்தது. ஆனால் நாள் செல்லச் செல்ல உழைப்பாளியின் கல்வி நிலையும், வாழ்க்கை நிலையும் உயர்ந்தது. அவ்விதம் உயரவே, உற்பத்தித் தரமும் அமெரிக்காவினதைப்போல உயர்ந்துவிட்டது. இதை வெண்டல் வில்கி போன்றவர்கள் பார்த்துப் புகழ்ந்திருக்கிறார்கள். மாரிஸ் டாப் என்ற ஆசிரியர் இதைக் குறித்துக் கீழ்க்கண்டவாறு எழுதியிருக்கிறார் :—"நெசவுத் தொழிலில் ஒரு ஆங்கிலத் தொழிலாளியின் உற்பத்தி அளவைவிட ருஷ்யத் தொழிலாளியினது உற்பத்தி அளவு 50 சதவிகிதம் அதிகமாயிருக்கிறது. மின்சார அடுப்புகளின் மூலம் ஒரு நாளைக்கு 38 டன்தான் உயர்ந்தபட்சம் உலோகம் உருக்கி எடுக்க முடியுமென்று ஐரோப்பிய என்ஜினியர்கள் கருதினார்கள். ஆனால் இன்று ருஷ்யாவில் நாள் ஒன்று 48 டன் உருக்கி எடுக்கிறார்கள். 'போர்டு' மோட்டார் தொழிற் சாலையில் செய்து முடிப்பதைவிட 50 சத விகிதம் அதிக வேகத்தில் 'கார்க்கி' தொழிற்சாலையில் மோட்டார் பாகங்கள் செய்து முடிக்கப்படுகின்றன.

இயந்திரப் பெருக்கத்தால் தொழில் பெருக்கம் ஏற்படுவதைப் பல தேசங்களின் சரித்திரத்தில் கண்டிருக்கிறோம். ஆனால், தொழில் பெருக்கத்தால் அத் தேசங்களில் ஒரு

சிலரே நன்மை யடைவார்கள். தொழிலுக்கு ஜீவாதார மான தொழிலாளி மீள முடியாத வறுமைப் படுகுழியில் ஆழ்ந்து கிடப்பான். ருஷ்யாவில் மட்டும் தொழில் பெருக் கத்தால் பொதுமக்களனைவருமே நன்மை யடைந்திருக்கிறார் கள். இதற்குக் காரணம், பிறர் உழைப்பின் பயனைப் பறித்து லாபம் பெறும் முதலாளி சமூகம் அங்கே கிடை யாது. "முதலாளி மூலதனம் போட்டு சிரத்தை யெடுத்து நடத்தா விட்டால் தொழில் முன்னேற்றமே இராது" என்ற கொள்கை ருஷ்யா விஷயத்தில் பொய்யாகி விட்டது. பொதுமக்களில் பெரும்பான்மையோரின் உழைப்புச் சக்தியை சில பணக்காரர் விலைக்கு வாங்கித் தொழில் நடத்துவதால் உண்டாகும் தீமைகளெதுவும் இன்று ருஷ்யா வில் கிடையாது. சோவியத் குடிகளில் ஆண், பெண் அடங்கலும் தங்களது தொழிற்சாலைகளில் பொது நன் மைக்கு உகந்தவாறு தங்களுக்கு வேண்டிய பொருள்களை உற்பத்தி செய்து கொள்ளுகிறார்கள்.

ருஷ்யாவின் தொழில் முன்னேற்றத்தில் சில முக்கிய மான விவரங்களை கீழேக் குறிப்போம். முப்பது வருஷங் களாக எஃகுத் தொழிலில் ருஷ்யா ஈடுபட்டிருக்கிறது. 1913ல் இருந்த எஃகு உற்பத்தியைவிட 1939ல் நான்கு பங்கு அதிகம். அதேபோல நிலக்கரித் தொழிலும் 5½ மடங்கு அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. நிலக்கரி வாயு, அதிலிருந்து கிடைக்கும் எண்ணெய் ஆகியவற்றில் 4½ மடங்கு அபிவிருத்தி. இவ்வளவுக்கும் தொழிலாளி வேலை செய்யவேண்டியது 7 மணி நேரம் தான். உற்பத்தி வேகம் 1918ல் இருந்ததைவிட 1939ல் 3½ மடங்கு அதிகமாயிருக் கிறது. இதற்குக் காரணம் இயந்திரசாதன முன்னேற்றம். ருஷ்யா இன்றைய யுத்தத்திலிறங்கியதன் பின் உற்பத்தி அளவு மேலே காட்டிய புள்ளி விவரங்களைத் தாண்டிப் பல மடங்கு அதிகமாகி யிருக்கிறது.

விவசாயத்தில் புதுமை, கிராமங்கள் செழித்தன.

இனி விவசாயத் துறையில் ருஷ்யா அடைந்திருக்கும் மகத்தான வளர்ச்சியை நோக்குவோம். ஜார் மன்னர்களது ஆட்சியில் விவசாயிகளுக்கு சிறு சிறு துண்டு நிலங்களே சொந்தமாக இருந்தன. அவற்றில் பயிர் செய்து பிழைப்பது லாபகரமாக இருக்கவில்லை. பெரும்பான்மையான விவசாயிகளுக்கு சொந்த நிலமே கிடையாது. அவர்கள் பெரிய நிலச்சுவான்தார்களது நிலங்களில் பயிர் செய்து ஜீவித்து வந்தார்கள். அவர்களது வாழ்க்கையின் பரிதாபத்தைச் சொல்லி முடியாது. சொந்த நிலத்தில் விவசாயம் செய்தவர்களும் சரி, கூலிக்குப் பயிர்த் தொழிலில் ஈடுபட்டவர்களும் சரி விஞ்ஞான ரீதியாகப் பயிர் செய்யவில்லை. ஒரு கோடி மரக் கலப்பைகளும், அவைகளை இழுப்பதற்கு எலும்பும் தோலுமான மாடுகளுமே அவர்களது தொழிற் சாதனங்கள். இன்று சாகுபடிக்குத் தகுதியான நிலமனைத்தும் 2 லட்சத்து 50 ஆயிரம் கூட்டுறவுப் பண்ணைகளாகப் பிரிக்கப்பட்டு, குடியானவர்களால் பயிர் செய்யப்படுகின்றன. இக் குடியானவர்கள் கல்வியறிவிலும், உடல் நிலையிலும், இயந்திரப் பயிற்சியிலும் எந்த நாட்டு விவசாயிகளையும்விடச் சிறந்தவர்களாகவே இருக்கிறார்கள். அவர்கள் 7 லட்சம் இயந்திரக் கலப்பைகளையும், அறுவடை இயந்திரங்களையும் உபயோகித்து வருகிறார்கள். ஜார் காலத்தைவிட தற்காலத்தில் மூன்று மடங்கு அதிகப் பரப்புள்ள நிலம் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இப்பொழுது முன்னாட்களைவிட 5 கோடி டன் தானியம் அதிகமாகக் கிடைக்கிறது. பழமையான நீர்ப்பாசன வசதிகள் 188 புதுப்பிக்கப் பெற்றிருக்கின்றன; 148 புதிதாக அமைக்கப்பட்டிருக்கின்றன. கன்றுகாலிகளின் சாவு மிகவும் குறைந்து, அவற்றின்

தரம் உயர்ந்திருக்கிறது. புரட்சிக்கு முன் அடிக்கடி தலை காட்டி வந்த பஞ்சத்தைப்பற்றி இன்று ருஷ்யக் குடியான வனுக்குக் கொஞ்சமும் பயமில்லை. ஆனால், இன்று போரின் காரணத்தால் சற்று நெருக்கடி ஏற்பட்டிருப்பது உண்மை தான். இந் நெருக்கடி தங்களுக்குப் பிரியமான ஒரு சமூக அமைப்பைக் காக்க ருஷ்யா எந்த அளவிற்குத் தியாகம் செய்யக்கூடும் என்பதைப் பிரத்தியட்சமாக்குகிறது.

விவசாய முன்னேற்றமும், தொழில் முன்னேற்றமும் ருஷ்யாவைப்பற்றியவரை கைகோர்த்துச் செல்லுகின்றன. முதலாளித்துவ நாடுகளில் இருப்பதுபோல அவற்றுள் முரண்பாடு இல்லை. ஏக காலத்தில் இவை யிரண்டும் வளர்ச்சி யடைந்து வந்ததால் ருஷ்யக் கிராமங்களோடு நகரங்கள் இணைக்கப்பட்டன. விவசாயத்தில் இயந்திர சாதனங்கள் உபயோகிக்கப்படுவதால் எளிதாகவும், மலி வாகவும், உணவுப்பொருள்கள் கிடைப்பதுமல்லாமல், முன் னர் விவசாயத்தில் ஈடுபட்டு வந்த பலர் இப்பொழுது வேறு தொழில்களில் பிரவேசிக்க முடிகிறது. இயந்திரத்தொழில் களில் உழைக்க ஏராளமான உழைப்பாளிகள் கிடைக்கவே செய்பொருள்களை மலிவாகச் செய்து குவிக்க முடிகிறது. கிராமம் மலிவான உணவுப் பொருள்களை நகரத்திற்கு அளிக்கிறது. நகரம் மலிவான செய்பொருள்களை கிராமத்திற்கு அளிக்கிறது. இவ்வாறு நகரத்திற்கும் கிராமத்திற்குமிடையே இருந்துவந்த முரண்பாடுகள் நீங்கி விட்டன.

எல்லோரும் படித்தவர்கள்! எங்கும் ஆராய்ச்சிக் கழகங்கள்!!

விவசாய முன்னேற்றமும், தொழில் முன்னேற்றமும் எல்லோருக்கும் வாழ்க்கை வசதிகள் கிடைக்கும்படி செய்

கின்றன. முன்னேற்றத்திற்குக் காரணமான இயந்திர சாதன அபிவிருத்திக்கு வழிகாட்டுவது அறிவியல் ஆராய்ச்சிகள். இத்துறையில் ருஷ்யாவின் ஸ்தானம் என்ன? முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளிக்கும் கல்வி, அறிவியல் ஆராய்ச்சி இவை யிரண்டிற்கும் ஒரு சம்பந்தமுமில்லை. ருஷ்யாவிலும் புரட்சிக்கு முன், அறிவியல் ஆராய்ச்சி படித்த சமூகத்தாரின் தனி உரிமையாக இருந்தது. அவர்கள் சர்க்கார் உதவியால் தங்கள் ஆராய்ச்சிகளை நடத்தி வந்தபடியால், கொடுங்கோண்மையை ஆதரித்து வந்தார்கள். பொது நன்மையைப்பற்றிய அக்கரையே அவர்களுக்குக் கிடையாது. ஆனால், இன்று அறிவியல் ஆராய்ச்சி எல்லோருக்கும் பொதுச் சொத்து. படித்த சமூகம், படிக்காத கூட்டம் என்ற பிரிவினைக்கு இன்று இடமே யில்லை. எல்லோருமே படித்தவர்கள்தான். இன்றைய ஆராய்ச்சிக்காரர்கள் பொது நன்மைக்காகவே உழைப்பவர்கள். அவர்களது சகோதர சகோதரிகள் விவசாயத்திலோ, இயந்திரத் தொழில்களிலோ, ராணுவ சேவையிலோ ஈடுபட்டிருப்பார்கள். அவர்களுக்குப் பக்க பலமாக இருப்பதே இவர்களது நோக்கம். இப்பொழுது நடக்கும் போரில் ஜெர்மானியர்களை எதிர்க்கத் தேவையான, டாங்கிகள், புதுமாதிரியான துப்பாக்கிகள், குண்டுகள் எல்லாவற்றையும் உற்பத்தி செய்யத் திட்டம் தயாரித்தவர்கள் இவர்களே. ருஷ்ய விஞ்ஞானிகள் பனி மூடிக்கிடக்கும் வட துருவத்தில்கூட பயிர் செய்வதற்கு வேண்டிய சாதனங்களைத் தயார் செய்து கொடுத்திருக்கிறார்களென்றால் அவர்கள் பெருமைக்கு வேறு என்ன அத்தாட்சி வேண்டும்?

இந்த ஆராய்ச்சியாளர்கள் ருஷ்யாவின் புதிய கல்வித் திட்டத்தின் சிருஷ்டிகள். புதிய கல்வித் திட்டம் அமுலுக்கு வந்த பின்பு ருஷ்யாவின் தற்குறித்தன்மை இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டது. இன்று "வீடு தோறும்

கலையின் விளக்கம்" சுடர் விட்டெரிகிறது. ஐரோப்பிய தேசங்களில் எதையும்விட ருஷ்யாவிலுள்ள சர்வகலா சாலை மாணவர்களின் சதவிகிதம் அதிகம். 1914ம் வருஷம் 1950 உயர்தரப்பள்ளிகளிருந்தன. அவற்றில் படித்துவந்த மாணவர்களின் தொகை 6 லட்சத்து 35 ஆயிரம்; வேலை பார்த்துவந்த ஆசிரியர்கள் 42 ஆயிரம் பேர். இவ் விபரங்களோடு 1939ம் வருஷத்துப் புள்ளி விபரங்களை ஒத்துப் பார்ப்போம். உயர்தரப்பள்ளிகளின் தொகை 15,800. மாணவர்கள் 1 கோடியே 9 லட்சத்து 35 ஆயிரம் பேர். ஆசிரியர்களது எண்ணிக்கை 3 லட்சத்து 77 ஆயிரம். 1914ம் வருஷம் 91 கல்லூரிகளே இருந்தன. 1939ம் வருஷத்திலோ 700 ஆகப் பெருகி விட்டன. இவற்றுள் 91 விவசாயக் கல்லூரிகள். எல்லாக் கல்விச் சாலைகளிலும் பயில்வோர் தொகை இந்த 25 வருஷங்களுக்குள் ஐந்து மடங்காக உயர்ந்திருக்கிறது.

சிறுபான்மைத் தேசீய இனங்கள்

சோவியத் முன்னேற்றத்தில் ஒரு பாதியைப்பற்றி இதுவரை எழுதி முடித்திருக்கிறேன். இரண்டு முக்கியமான விஷயங்களைப்பற்றி இன்னும் பிரஸ்தாபிக்கவேயில்லை. அவை மைனாரிட்டிப் பிரச்சினையும், மாதர் முன்னேற்றமும். மைனாரிட்டிப் பிரச்சினையை வேறு எந்த தேசமும் இவ்வளவு நன்முக பரிசீலனை செய்து தீர்க்கவில்லையென்று சொல்லலாம்.

ஜார் மன்னர்களது ஏகாதிபத்திய ஆட்சியின் கீழ் ஏறக்குறைய 200 மைனாரிட்டி ஜாதியார்கள் ருஷ்யாவின் பல பாகங்களிலும் இருந்தார்கள். இவர்களது நலன்களும் உரிமைகளும் கவனிக்கப்படாதது மட்டுமன்றி, காலின் கீழ் அழுத்தி நசுக்கப்பட்டன. இந்தக் கைங்கரியத்தை ருஷ்யர்களே செய்து வந்தார்கள். மைனாரிட்டி வகுப்பினருக்கு

தங்கள் தாய்மொழியில் கல்வி பயிலவோ, தங்கள் பண்பாடு களை வளர்த்துக்கொள்ளவோ உரிமை யில்லாதிருந்தது. இந்த நிலைமை இன்றும் எல்லா ஏகாதிபத்திய நாடுகளிலும் காணப்படுகிறது. ஜாரின் ஆதிக்கத்தோடு மைனாரிட்டி களின் அவதியும் போய் விட்டது. ஒரு ஜாதிக்கு மற்றொரு ஜாதி அடிமையா யிருப்பது அநீதியானது. இந்த அநீதி யின் காரணமாகவே யுத்தங்கள் தோன்றுகின்றன. மண் ணாசை பிடித்த தேசங்கள் தங்கள் செய்பொருள்களை விற்கச் சந்தைகள் தேடுவதற்காகச் சில வேளை யுத்தம் தொடங்கு கின்றன. அடிமைத்தளையிலிருந்து மீண்டு விடுதலை பெற நசுக்கப்பட்ட தேசங்கள் யுத்தம் தொடங்குகின்றன. யுத்தத் திற்குக் காரணம் சமூக வேறுபாடுகளும், அநீதிகளுமே. இந்த அநீதிகளை நிவர்த்திக்க ஒரே ஒரு வழிதானுண்டு. அது ஆளுவோர், ஆளப்படுவோர் என்ற பேதம் செயல் முறையில் ஒழியவேண்டும். எல்லோரும் சமம் என்பது உறுதியாக வேண்டும். சமத்துவம் இன்று ஜனநாயக நாடு களில் இருப்பதுபோலப் பெயரளவில் இருந்தால் போதாது. உண்மையில் ஒரு முதலாளித்துவ நாட்டில் ஒரு தொழிலா ளிக்கு இருக்கும் சுதந்திரம், ஒரு யானைக் கூட்டத்தில் கோழிக் குஞ்சுக்கு இருக்கும் சுதந்திரம்தான். நசுங்கிச் சாகத் தாராளமாகச் சுதந்திரம் உண்டு. சம உரிமையோ, வசதியோ இல்லை. ருஷ்யாவிலோ மைனாரிட்டிகளுக்கு செயல் முறையில் சம உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. சமத்துவமும் வழங்கப்பட்டிருக்கிறது. இதனால் என்ன பயன் விளைந்திருக்கிறது? பல தேசிய இனங்களைக் கொண்ட ருஷ்யா ஒரே முகமாக பாஸிஸத்தை எதிர்த்துத் தீரமாகப் போர் புரிகிறது. கல்வி, தொழில், விவசாயம் ஆகிய துறைகளில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றத்தின் பயனை ஜாதி, மத பேதமில்லாமல் ருஷ்ய மக்களனைவரும் அனுபவிக்கின்றனர். உதாரணத்திற்கு 'உஸ்பெக்கிஸ்தான்'

என்ற ஒரு மாகாணத்தை எடுத்துக்கொண்டால் போதும். அது ஒரு மைனாரிட்டி ஜாதியார் வாழும் பிரதேசம். பாலை வனங்களின் மத்தியில் காணப்படும் சோலைகளில் இவர்கள் வாழ்ந்து வந்தார்கள். ஜார் ஆட்சியின்போது இப்பிரதேசத்தில் கல்வி ஸ்தாபனங்களோ, தொழிற்சாலைகளோ கிடையாது. விவசாயமும் அதிகமாகக் கிடையாது. இப்பொழுது, பருத்தி உற்பத்திக்கும், 'FUR' என்ற உரோமத்திற்கும் ருஷ்யாவில் முதன்மையாக நிற்பது இப்பிரதேசமே. இங்கிருந்து உலக முழுமைக்கும் பருத்தியும், உரோமமும் அனுப்பப்படுகிறது. நெசவு, இரும்பு, எஃகு ஆகிய தொழில்கள் இங்கு தற்பொழுது நடந்து வருகின்றன. புதிய நீர்ப்பாசன வசதிகளின் மூலம் தண்ணீரைத் தேக்கி முன்பு தரிசாகக் கிடந்த நிலங்களில் 25 கோடி சதுர மீடர் பரப்புள்ள பகுதியில் கோதுமை பயிர் செய்யப்படுகிறது. அங்கு உயர்தரக் கல்வியைப் பரப்ப 33 உயர்தரக் கல்லூரிகள் இருக்கின்றன. தொழிற்கல்வி ஸ்தாபனங்களும் பல உண்டு. இவைகளில் 10,000 ஆசிரியர்கள் கல்வி புகட்டும் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இப் பிரதேசம் முழுவதிலும் ஆயிரத்திற்கு மேற்பட்ட நூல் நிலையங்களும், நூற்றுக்கு மேற்பட்ட நாடகசாலைகளும் இருக்கின்றன. மூடி முக்காடிட்டு படிப்பு வாசனையற்றிருந்த முஸ்லிம் மாதர் இன்று நாகரிகம் பெற்று ஐரோப்பிய ருஷ்யர்களோடு சரிசமமாக வாழ்கிறார்கள்.

யூதர்

யூதர்கள் மைனாரிட்டியாக வாழும் தேசங்களில் எல்லாம் ஆளும் வர்க்கத்தார் ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லிக்கொண்டு அவர்களை நசுக்குவதைக் காண்கிறோம். ஜாரின் அரசாட்சியில் பல பொய்ச் சாக்குகளையும் குற்றச் சாட்டுகளையும் சிருஷ்டித்து யூத சமூகத்தை ஒழித்துவிடப்

பல முயற்சிகள் நடந்தன. அதைப் பின்பற்றி சில வருஷங்களுக்குமுன் ஹிட்லரும், அவரது சகாக்களும் யூதவேட்டையில் இறங்கியதும் தெரிந்த விஷயமே. இன்று சோவியத் ருஷ்யாவில் யூதர்களின் பிரச்சினையே கிடையாது. மைனாரிட்டிகளது பிரச்சினைகளில் ஒன்ருக அது தீர்க்கப்பட்டுவிட்டது. யூதர்களுக்கு ருஷ்யக் குடிகளுக்குரிய உரிமைகளனைத்தும் உண்டு. என்றைக்குக் கழுத்துக்குக் கத்தி வருமோ என்று பயந்து நடுங்கவேண்டிய காலம் மாறிவிட்டது.

பெண்களின் உரிமை

இன்று சோவியத் ருஷ்யாவில் ஆண்களோடு பெண்களும் சமமாக வாழ்கிருர்கள். இந்த சமத்துவம் சட்டபூர்வமாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆண் பெண் சமத்துவத்தினுல் கல்வி, பொருளாதாரம், தொழில் எல்லாத் துறைகளிலும் முன்னேற்ற மேற்பட்டிருக்கிறது. முன்பெல்லாம் பெண்களுக்குத் தொழிற்சாலைகளில் குறைந்த கூலி கொடுத்தாற் போதும். இந்த வசதியை உபயோகித்து முதலாளிகள் மிகுதியான பெண்களை வேலைக்குக் கொண்டு வருவதாகப் பயமுறுத்தி, ஆண்களின் கூலியைக் குறைக்க முயல்வர். இப்பொழுது ஆணுயினும் சரி பெண்ணுயினும் சரி வேலையினளவைப் பொறுத்துக் கூலி கிடைத்துவிடும். இது நியாயம்தானென்பதை யாரும் ஒப்புக்கொள்வர். இதை நிறைவேற்றுவது கடினமில்லை என்று மேற்பார்வைக்குத் தோன்றும். உண்மையில் ருஷ்யாவைத் தவிர வேறு எங்கும் இச்சமத்துவத்தை எளிதில் அமுலுக்குக் கொண்டுவர முடியாது. உடல் அமைப்பால் ஏற்படும் சக்தி வேறுபாடுகளைக் கவனித்தும், போட்டியை விலக்கியும் ஸ்திரீகளுக்கு எல்லா உரிமைகளிலும் சமத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது.

இதுதான் சமத்துவம், இதுதான் ஜனநாயகம்

வேலையின் தரத்தைக் கவனியாமல் எல்லா உழைப்பாளிகளுக்கும் ஒரே அளவான ஊதியம் கிடைக்கும்படி செய்வதுதான் சோஷலிஸக் கொள்கை என்று பலர் நினைக்கிறார்கள். அது தவறு. உண்மையில் சோஷலிஸத்தின் நோக்கம், சமத்துவம் என்ற பெயரால் நடக்கும் முதலாளித்துவ அநீதிகளைக் களைந்து எல்லா உழைப்பாளிகளுக்கும் சமமான வாய்ப்பு வசதிகளை யளிப்பதே. ஒரு சோவியத் சமூகத்தில் கல்வி, கலை, விஞ்ஞானம், தொழில் துறைகள் எல்லாம் ஒரு சில பணக்காரர்களுடைய தனியுடமைச் சொத்தாக இரா. மக்களனைவருக்கும் பொதுச் சொத்தாக இருக்கும். சுருங்கச் சொன்னால், சோவியத் சமூகத்தில் வாழும் குடிகளனைவருக்கும் உடல் வலிமையையும், மனோ வளர்ச்சியையும் பெறுவது பிறப்புரிமையாகும்.

'மனிதனுக்கு மனிதன் சமம்' என்ற கொள்கை நடைமுறையில் பல நாடுகளில் கேலிக் கூத்தாகவே யிருக்கிறது. ஒரு சிறு குழுவினரிடம் நாட்டின் செல்வம் முழுவதும் குவிந்து கிடக்கும் வரை, எப்படிப் பெரும்பாலரான உழைப்பாளிகள் அவர்களோடு சமத்துவம் பாராட்ட முடியும்? சமத்துவமில்லாத நாடுகளில் ஜனநாயகம் வெளிப் பூச்சாகத் தானே இருக்க முடியும்? சோவியத்தில் அமுலிலிருக்கும் ஜனநாயகம் உண்மையான குடியரசு. ஜனநாயக முறையில், (அதாவது வயதுவந்த ஒவ்வொரு ஆண் பெண்களின் வாக்குகளால்) தேர்ந்தெடுக்கப்பட்ட சோவியத்துகளே கிராமங்களிலிருந்து நகரங்கள், ஜில்லாக்கள், மாகாணங்கள், ஐக்கிய ருஷ்ய நாடு வரை எல்லாவற்றையும் ஆட்சி புரிகின்றன. தன் மனசாட்சியின்படி வாக்களித்ததற்காகவோ, அல்லது தேர்தல் பிரசாரத்தில் கலந்துகொண்டதற்காகவோ, ஒரு தொழிலாளிக்கு வேலை போய்விடும்

என்ற பயம் கிடையாது. தன்னிடம் விளம்பரம் கொடுத்து ஆதரித்துவரும் பணக்கார அபேட்சகர்களை வானத்தில் தூக்கிவைத்து எழுதி வாக்காளர்களது மனதை மயக்கும் பத்திரிகைகளும் அங்கே கிடையாது. ருஷ்யாவிலுள்ள 'பிராவ்டா', அல்லது 'இஸ்வெஸ்தியா' என்ற பத்திரிகைகள், அபேட்சகர்களைப் பற்றியோ, தேர்தல் கொள்கைகளைப் பற்றியோ எழுதினால் அது பொதுஜன நன்மைக்கு உகந்ததாகவே இருக்கும். ஏனெனில் ருஷ்யாவில் பத்திரிகாசிரியர்கள் பணக்காரர்களது கையாட்களல்ல. பொதுஜன அபிப்பிராயத்தை உள்ளபடி பிரதிபலிப்பவர்கள்.

ருஷ்யாவில் ஏதாவது ஒரு புதிய மசோதா சட்டமாவதற்கு முன் அது பொது ஜனங்களது பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கப்படுகிறது. அதிலுள்ள குறைகளை எடுத்துச் சொல்லவும், அவற்றை நிவர்த்திக்கத் திருத்தங்களைப் பிரேரணை செய்யவும் ஜனங்களுக்கு உரிமையுண்டு. இந்த உரிமையை ருஷ்ய மக்கள் நன்றாகப் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள். இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய முதலாளித்துவ நாடுகளில், முன்னேற்றமான திட்டங்களை நிறைவேற்ற முயற்சி நடக்கும்போது, அதனால் பாதிக்கப்படும் சில பணக்காரர்கள் பத்திரிகைகளைக் கூலிக்கமர்த்தி எதிர்ப்பிரசாரம் நடத்துவார்கள். ஆளும் வர்க்கம் தன்னாலானதைச் செய்து, தன்னைத்தாங்கி நிற்கும் முதலாளி வகுப்பிற்கு ஆதரவளிக்கும். ருஷ்யாவில் பொதுஜன நன்மைக்குகந்த திட்டங்களை எதிர்க்க முதலாளியும் கிடையாது; பத்திரிகையும் கிடையாது. ஆளும் வர்க்கம் உழைப்பாளிகளது பிரதிநிதித்துவம் வாய்ந்தது. ருஷ்யாவில் உண்மையான பேச்சு சுதந்திரம் உண்டு. அப்பெயரால் இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் நடக்கும் அக்கிரமங்கள் கிடையாது.

ஊணில்லை, உடையில்லை என்ற ஒப்பாரி அங்கில்லை

பஞ்சமும், பிணியும் பிடுங்கித் தின்ன, வாழ்க்கை வசதிகளெதுவுமின்றிக் குடிசைகளில் குற்றுயிராக நடமாடி வந்த ருஷ்யக் குடியானவன், இன்று உடலுறுதியும், பண்பாடும் நிறைந்த முழு மனிதனாக மாறிவிட்டான். எப்படி? அவனது பழைய வாழ்க்கை நிலைக்கும், இன்றைய வாழ்க்கை நிலைக்கும் உள்ள வித்தியாசமே இம்மாறுதலுக்குக் காரணம். இன்று ருஷ்யாவில் நிறத்திமிர், ஆண் பெண் வித்தியாசங்கள், வேலையில்லாத் திண்டாட்டம், பட்டினி ஆகிய கொடுமைகள் கிடையா. ஒருவனுக்கு உணவில்லை என்ற பேச்சே அங்கு கேட்க முடியாது. மனிதர் உணவை மனிதர் பறிக்கும் வழக்கம் அங்கில்லை. இதன் மூலம், ருஷ்ய மக்களுக்குள் ஒற்றுமை யுணர்ச்சியும், தோழமைப் பண்பும் உண்டாகின்றன. ஏனெனில் அவர்களது நலன்கள் பொதுவானவை. அரசாங்கம், சமூகத்துக்குப் புறம்பான ஒரு அமைப்பல்ல. அது மக்களுடைய ஸ்தாபனம். அவர்களது சேவைக்காகவே அமைக்கப்பட்டது. 'ஆளுவோரும்' ஆளப்படுவோரும் ஒரே வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களுடைய நலன்களில் முரண்பாடு இல்லை. ஸ்டாலின் போன்ற தலைவர்கள் தகுதியினாலும், ஜனங்களுக்கு வழிகாட்டும் சக்தி படைத்திருப்பதாலும், தைரியமும், புத்திக் கூர்மையும் உடையவர்களா யிருப்பதினாலுமே ஜனங்களது பிரதிநிதிகளாக அதிகாரத்தில் இருக்கிறார்கள்.

இதை உணர்ந்து கொண்ட பின்னர், நமக்கு நமது சோவியத் நண்பர்கள் என்னென்ன காரணங்களால் பாஸிஸத்தை எதிர்த்து வெற்றிபெற முடிகிறது என்பது தெளிவாகும். ஒவ்வொருவனுக்கும் தன்னுட்டின் தொழிற்சாலையிலும், விவசாயத்திலும் அக்கரை இருப்பதால் சிருஷ்டி

சக்திகளைப் பயன்படுத்துவதிலும், அவற்றை விஸ்தரிப்பதற்கான ஆராய்ச்சிகளிலும் சிரத்தை காட்டுகிறான். தொழில்கள் தன்னுடைய நன்மைக்கான தொழில்களென்று அவன் உணர்கிறான். அதற்கான திட்டங்கள் போட்டு நிறைவேற்றும் அரசாங்கம், தன்னுடைய நன்மையைத் தேடும் அரசாங்கம் என்பதில் அவனுக்கு உறுதியான நம்பிக்கை யிருக்கிறது. ஆகவே, முழுமனதோடு தேசப் பாதுகாப்புக்கும், சுகவாழ்க்கைக்கும் தேவையான பொருள்களைச் செய்வதில் மனப்பூர்வமாக ஊக்கம் காட்டுகிறான்.

சோவியத் உழைப்பாளிகள் வக்கில், டாக்டர், செம்படை வீரன், தொழிலாளர் சங்கத் தலைவன், மந்திரி முதலிய எந்தப் பதவியில் இருந்தாலும், உயர்ந்த பண்பு, புத்திக் கூர்மை, விஷயஞானம் முதலியவைகளில் ஒரே தரமா யிருக்கிறார்கள். 'பிராவ்டா' என்ற பத்திரிகையில் சமீபத்தில் வெளியான கட்டுரையில் அவர்களைக் குறித்துக் கீழ் வருமாறு எழுதியிருக்கிறது:

"சோவியத் எஃகு—மனிதர்கள் யார்? இவர்களது உயர்ந்த பண்பிற்கும், உறுதியான இச்சா சக்திக்கும் காரணம் யாது? தாய்நாட்டின் பாதுகாப்பிற்காக உயிரையும் பணயம் வைக்கத் தயாரா? செம்படை வீரர்களும், தலைவர்களும் யாவர்? இவர்கள் நவயுகத் தொழிலாளர்கள்; நவயுக விவசாயிகள். இவர்கள் தங்களது சமூக வாழ்விலும், குடும்ப வாழ்விலும், பள்ளி வாழ்விலும், உடல் உழைப்பின் உயர்வை நன்கு உணர்ந்தவர்கள். போல்ஷிவிக் கட்சியும் சோவியத் அரசாங்கமும் இவர்களைத் தாய் தந்தையர்களைப்போல் பராமரித்து வந்திருக்கிறது. சரித்திரத்தில் முதன் முதலாக முழு வளர்ச்சியடைந்த மனிதன் தோன்றியிருப்பது இதுவே முதல் தடவை."

வாழ்க்கையின் வழிகாட்டி அரசியல் அமைப்பு

புதிய சோவியத் அமைப்பு 1936-ஆம் வருஷம் அமுலுக்கு வந்தது. அவ்வருஷம் வரைக்கும் பொதுவுடைமை வளர்ச்சி யடைந்த நிலையை அது சட்ட பூர்வமாக்கிற்று. இந்த அரசியலமைப்பு பிறரால் சோவியத் மக்கள்மீது சுமத்தப்பட்டதல்ல. மக்களே தங்கள் சுதந்திரத்தையும், கடமைகளையும், தேசத்தின் பொருளாதார அமைப்பையும் நிர்ணயிப்பதற்காக வகுத்துக் கொண்டது. மேலும் இன்றைய அரசியலமைப்புச் சட்டத்தைப் பரிசீலனை செய்து, திருத்தங்களைச் சேர்த்தும், தேவையான இடங்களில் புதிப்பித்தும் சட்டமாகச் செய்தது அவர்களது உண்மையான பிரதிநிதிகளே. இச்சட்டம் பொதுவுடைமையின் முழுப் பொருளையும் உணர்த்துகிறது. அதன்படி மக்களே தேசத்தின் மன்னர். "பொதுவுடைமை ருஷ்யாவில் சர்வ அதிகாரமும் தொழிலாளருக்கே. அவர்களுடைய பிரதிநிதிகளின் மூலம் அது பிரயோகிக்கப்படுகிறது."

பொது ஜனங்களது சுதந்திரத்துக்கு இச்சட்டம் எல்லை கோலுகிறது. சட்டத்தின் ஷாத்துகளை இங்கே பெயர்த்தெழுதுவதற்கிடமில்லை. அவற்றின் சுருக்கம் "மாஸ்கோ நியூஸ்" என்னும் பத்திரிகையில் வெளியாகி இருக்கிறது. அதனை அப்படியே இங்கே எழுதுவோம்:—

" சோவியத் குடியரசில் வேலையில்லாத் திண்டாட்டம் கிடையாது. பொருளாதாரக் குழப்பங்களும் இல்லை. ஆண் பெண் என்ற வித்தியாச மில்லாமல் எல்லோருக்கும் தொழில் செய்ய உரிமையுண்டு. அது போலவே முழுமனே வளர்ச்சிக்குரிய கல்வி பெறவும் உரிமை உண்டு. சோவியத்தில் ஓய்வும், சுகவாசமும் சிலருக்கே உரியவையல்ல. ஒவ்வொரு உழைப்பாளிக்கும் ஓய்வு பெறவும், சுகவாசஸ்தலங்களுக்குச் செல்லவும் உரிமை யுண்டு.

"வேலை செய்யும் சக்தியை இழந்துவிட்டாலும், வேலை செய்ய முடியாத வயோதிக நிலையை அடைந்து விட்டாலும் நோய்க் காலங்களிலும் ஜீவனம்சம் பெறுவதற்கு ஒவ்வொரு சோவியத் தொழிலாளிக்கும் உரிமையுண்டு.

"சோவியத் தொழிலாளி ஒவ்வொருவனுக்கும் இலவச வைத்திய உதவி பெற உரிமை இருக்கிறது

"வாழ்வின் எல்லாத்துறைகளிலும் ஆண்களுக்கு நிகரான உரிமைகள் பெண்களுக்கும் உண்டு. கல்வி, அரசியல், பொருளாதாரம் ஆகிய எல்லாத்துறைகளிலும் சோவியத்தைச் சேர்ந்த சகல நாட்டினருக்கும் சகல ஜாதியினருக்கும் சம உரிமைகள் வழக்கப்பட் டிருக்கின்றன."

போரிலே வளர்ந்த தேசம்

இந்த யுத்தத்தில் ருஷ்யா இழுக்கப்படுவதற்கு முன் ஐரோப்பாவில் அதனைப்பற்றி பரவியிருந்த பொய் வதந்திகளுக்குக் கணக்கில்லை. யுத்தம் வந்த பிறகு தான் ருஷ்யாவின் உண்மையான ஸ்திதியை ஐரோப்பிய நாடுகள் அறிந்துகொள்ள முடிந்தது. 1941ம் வருஷம் ஜூன் மாதம் 22ந் தேதி, ருஷ்யாவின் மீது ஜெர்மனி போர் தொடுத்தது. முதலாளித்துவ நாடுகளெல்லாம் யுத்தம் தொடங்குவதற்கு முன்பு, போல்ஷிவிக் பூச்சாண்டியைத் தொலைக்க நாஜி அரக்கனால் தான் முடியுமென்று கருதி அவனது சக்தியை வளர்த்து வந்தன. வளர்த்த கடா மார்பில் பாயும் என்று அவர்களுக்கு. அப்போது தெரியவில்லை. நாஜி முறை ஒரு கோரமான யுத்தத்தில் கொண்டுவிடும் என்று பிற்பாடு தான் தெரிந்தது. ஜெர்மனி பொதுவுடமையை வேரோடு பொசுக்கிவிடும் நோக்கத்தோடு தனது கடற்படை, தரைப் படை, ஆகாயப்படை இவற்றில் பெரும் பகுதி ருஷ்யப் போர் முனைக்குத் திருப்பியது. இந்தப் பிரம்மாண்டமான தாக்குதல் ருஷ்யாவுக்கு ஒரு பெரிய சோதனை.

இச்சோதனையில் தோற்றிருந்தால், ருஷ்யாவின் விரோதிகள் சொல்லிவந்ததெல்லாம் உண்மையாகிவிடும். ருஷ்யக் குண்டுகள் வெடிக்காதென்றும், அவர்களது டாங்கிகள் அட்டைகளால் செய்யப்பட்டவை யென்றும், யுத்தம் செய்வதுபோலச் சிலநாட்கள் பாசாங்கு செய்து விட்டு அவர்கள் சரணடைந்து விடுவார்களென்றும் மனம் போனவாறு சொல்லிக் கொண்டிருந்தவர்கள் இன்று ருஷ்யாவின் மகத்தான வெற்றியைக் கண்டு வாயடைத்துப் போனார்கள். அவர்களது கதைகளையும் இன்று நம்புவாரில்லை.

இன்று யாருடைய கூற்று உண்மையாயிற்று? ரகசிய ஒற்றர்கள், பிரிட்டிஷ் பிற்போக்காளர்கள், முதலாளித்துவ ராஜதந்திரிகள் ஆகியோரது கட்டுக் கதைகளா, அல்லது பல வருஷங்களாக சோவியத் முறைகளை ஆதரித்து வந்த நண்பர்களது கூற்றுகளா?

முதலில் ருஷ்யர்கள் ஆயிரக்கணக்கான மைல்கள் நீளமுள்ள போர் முனைகளில் பின்வாங்கினார்கள். ஆனால் தோல்வியின் காரணத்தால் அவர்களது அணி வகுப்புகள் சிதையவோ, மன உறுதி குலையவோ இல்லை. கட்டுப்பாடு குலையவில்லை. சப்ளைகள் நிற்கவில்லை. ருஷ்ய டாங்கிகள் உண்மையிலேயே டாங்கிகள்தான் என்றும் ருஷ்யக் குண்டுகள் வீறிட்டு வெடித்து எதிரிகளைப் பெய்த்தெறிவது உண்மைதானென்பதும் சந்தேகத்துக் கிடமில்லாமல் வெளியாயிற்று. ருஷ்யாவிலுள்ள சிறுபான்மை இனங்களை ருஷ்யாவிலிருந்து தன் கட்சிக்கு இழுக்க, ஜெர்மனி செய்த சூழ்ச்சி பலிக்கவில்லை. முன்பு தங்களது எஜமானர்களாக விருந்த வெள்ளை ருஷ்யர்களோடு சேர்ந்து எல்லா தேசிய இனங்களும், நாஜி முறையை வீழ்த்தப் போரிடுகின்றன. ஹிட்லர் ருஷ்யாவில் இறக்கிய கருங்காலிகள் நிர்மூலமாக்கப்

பட்டனர். மூலபலம் போலத் திரண்டு வந்த ஜெர்மனியப் படை இன்று சிதறிவிட்டது. சோதனையில் ருஷ்யா மகத்தான வெற்றி பெற்றுவிட்டது.

செஞ்சேனை—ஜனங்களின் சேனை

இன்று ஹிட்லரைத் திணற அடிக்கும் செம்படையின் வரலாறு யாது? 1918-ம் வருஷம், ருஷ்யப் புரட்சியை எதிர்க்க ஜெர்மனி ருஷ்யாவின்மேல் படையெடுத்தது. அப்பொழுது உள்நாட்டுக் குழப்பத்தை அடக்குவதில் வெகு தீரமாகப் போரிட்டு வந்த "ரெட்கார்ட்ஸ்" (Red Gaurds) என்ற தொழிலாளர் படைகளை ருஷ்ய சர்க்கார் செம்படையாக அமைத்தார்கள். அப்பொழுது அவர்களுக்கு சிறந்த பயிற்சியோ, இயந்திர சாதனங்களோ கிடையாது. படையெடுப்பு பயம் நீங்கியதற்கப்புறம், நவீன யுத்த முறைகளில் பயிற்சியும், நல்ல இயந்திர சாதனப் பயிற்சியும், உயர்ந்த கல்வியும் அவர்களுக்கு அளிக்கப்பட்டன. செம்படையின் தலைவர்கள் தொழிலாளி வர்க்கத்தைச் சேர்ந்தவர்களே. உலகிலேயே சிறந்த கல்விப் பயிற்சியும் பண்பாடும் உள்ள படைவீரர்கள் செம்படை வீரர்களே.

இந்த யுத்தம் தொடங்குவதற்கு சில வருஷங்களுக்கு முன்னாலேயே ருஷ்யா தனது செம்படையைப் பலப்படுத்தி வைத்திருந்தது. டாங்கிகளையும், ஆகாய விமானங்களையும் போரில் பயன்படுத்தப் பயிற்சி யளித்திருந்தது. புதுப் புது முறைகளைப் போரில் பயன்படுத்த ஆராய்ச்சிகளை விடாமல் நடத்தி வந்தது.

இப்படை தொழிலாளர்களது படை. உலகிலேயே முதன் முதலாகத் தோன்றிய பொதுவுடமை நாட்டின் வீர சைன்யம். சண்டை நடக்கும்போதும், சமாதானம் நிலவியிருக்கும்போதும் ருஷ்ய மக்கள் அதன் நன்மைக்கா

எத்தகைய தியாகத்திற்கும் தயாராயிருக்கிறார்கள். அதற்குத் தேவையான உணவு, உடை முதலிய சகல சௌகரியங்களையும் செய்து கொடுப்பதற்காக இரவும் பகலும் மகிழ்ச்சியோடு உழைக்கிறார்கள். தங்களது நலன்களைப் பாதுகாக்கும் செம்படை வீரர்களுக்காக அவர்கள் எந்தக் கஷ்டத்தையும் பொருட்படுத்துவதில்லை. "ராணுவமும், மக்களும் எங்கள் நாட்டில் ஒரே குடும்பத்தில் பிறந்த இரு சகோதரர்கள். செம்படை மக்களது சைன்யம்." இவ்வாறு பிடாராவ் என்ற ஆசிரியர் எழுதுகிறார்.

செம்படையில் அதிகாரிகளுக்கும், போர் வீரர்களுக்குமிடையே காணப்படும் சகோதரபாவத்தைப்போல் உலகில் வேறு எந்த சைன்யத்திலும் பார்க்கமுடியாது. இதன் காரணமாகக் கட்டுப்பாடு நெகிழ்வதில்லை. ஜாதிய உயர்வினாலும், பயத்தினாலும் புகுத்தப்படும் வெளிக் கட்டுப்பாடு ருஷ்யப் படையில் இல்லை என்பது உண்மைதான். ஆனால் பரஸ்பர நம்பிக்கையினாலும், பொது நோக்கினாலும், பொது இலட்சியத்தினாலும் இங்கே கட்டுப்பாடு தானாகவே உண்டாகிறது.

"நாம் செத்துவிட்டால் நம் பிள்ளை குட்டிகள் கதி என்னாகுமோ" என்ற கவலை செம்படை வீரர்களுக்குக் கிடையாது. தான் எதை எதிர்த்துப் போராடுகிறான் என்பதும், எந்த இலட்சியத்துக்காகப் போராடுகிறான் என்பதும், இந்தக் கொள்கைப் போராட்டத்தில் தோற்றுவிட்டால் தனக்கு என்ன கதி வாய்க்கும் என்பதும் அவனுக்குத் தெளிவாகத் தெரியும். சில வருஷங்களுக்கு முன் 'மாக்ஸிம் கார்க்கி' என்ற ஆசிரியர் எழுதிய வார்த்தைகளை இன்று செம்படை உண்மையாக்குகிறது.

"நாம் எதற்காகப் போராடுகிறோம்? யார் உண்மையான எதிரி என்பதைத் தெளிவாகப் புரிந்துகொண்டு

போராடும் ஒரு சைன்யம் இனிமேல் தான் முதன்முதலாகத் தோன்றப்போகிறது. அந்த சைன்யத்திலுள்ள ஒவ்வொருவனும் தனது எதிரியான முதலாளி வர்க்கத்தின் படைவீரர்களை சரித்திர பூர்வமாக அழியவேண்டியவர் என்ற திட நம்பிக்கையோடு போராடுவான்", என்ருர் கார்க்கி.

இந்தப் பண்புகளையும் வசதிகளையும் கொண்ட செம்படையின் துணையினுல், நேசநாடுகள் பாசிஸத்தை மூலநாசம் செய்துவிடமுடியும் என்பதற்கு ஐயமில்லை. பெரும்பான்மையான தொழிலாளரும், விவசாயிகளும் தங்களது நன்மைகளைப் பாதுகாக்கவே செம்படை போராடுகிறது என்பதை உணர்வார்கள். தங்கள் கொள்கை வெற்றி பெற்ருல், நாகரிக வளர்ச்சியினுலும் மனித முயற்சியினுலும் உண்டாகும் நன்மைகளைத் தாங்களும் தங்கள் குழந்தைகளும் அனுபவிக்கலாம் என்பதும் அவர்களுக்குத் தெரியும். இப்படிப் பொதுமக்களின் நல்லெண்ணத்தைப் பெற்ற பொதுமக்களது சைன்யத்தை உலகிலுள்ள அசுர சக்திகளனைத்தும் சேர்ந்து-வந்தாலும் வெல்ல முடியாது": இருபத்தைந்து வருஷங்களுக்கு முன் செம்படையின் வருங்காலத்தைக் குறித்து லெனின் கண்ட கனவு இது.

போராடும் விதம்

செம்படை தீரமாகப் போரிடுகிறது என்று சொல்லிவிட்டால் போதாது. அது அசாத்தியத் திறமையோடும், ஊக்கத்தோடும், சாதுரியத்தோடும் யுத்தம் செய்கிறது. அவர்கள் யுத்த ஆரம்பத்தில் பின் வாங்க நேர்ந்தபோது தாங்கள் பெருஞ் செலவில் நிர்மாணம் செய்திருந்த கட்டிடங்களையும், பாலங்களையும், நீபர் அணை உள்பட பல அணைகளையும் நொறுக்கி நாசம் செய்துவிட்டுப் பின்வாங்கிய பிரதேசங்களில் கொரில்லாப் படைகளை நிறுவிச் சென்ருர்கள். எதிரியை முறியடித்து முன்னேறியபொழுது மறுபடி

யும் அவற்றைப் புனர் நிர்மாணம் செய்துவிட்டார்கள். எவ்வளவு நஷ்டங்கள் நேர்ந்தபோதிலும் அவற்றைப் பொருட்படுத்தாமல் தங்கள் சக்திகளைத் திரட்டிக்கொண்டு எவ்வளவு சீக்கிரம் எதிரியைத் தாக்கமுடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் தாக்குதலுக்குத் தயாரானார்கள். மாஸ்கோ, லெனின்கிராடு, செபாஸ்டபோல், ஸ்டாலின்கிராடு முதலிய நகரங்களில் மாதக் கணக்காக நீடித்த முற்றுகைகள் சரித்திரப் பிரசித்தி பெற்றுவிட்டன. உணவு சப்ளை ரஸ்தாக்களனைத்தும் அடைபட்டுப்போன பிறகும் செபாஸ்டபோல் எட்டு மாதங்களுக்கு ஜெர்மன் முற்றுகையைச் சமாளித்து நின்றது; எதிரிகளின் ஆயுத பலம் செம்படையினரது பலத்தைவிடப் பன்மடங்காக இருந்தது. பீரங்கிகளின் தொகையில் ஐந்துமடங்கு; டாங்கிகளின் எண்ணிக்கையில் 15 மடங்கு; ஏரோப்ளேனின் தொகையில் 17 மடங்கு. நகரின் பரப்பில் ஒவ்வொரு சதுர மீடருக்கும் 1½ டன் குண்டுகள் விழுந்திருக்கிறது. ஸ்டாலின்கிராடு, ஆயிரம் விமானங்களால் இடைவிடாமல் ஏழுவாரங்கள் வரை தாக்குண்டது. போக்குவரத்து வசதிகளும், தந்தி, ரேடியோ முதலிய செய்தியனுப்பும் வசதிகளும் எதிரி கைவசமாகிவிட்டன. ஆயினும் ஸ்டாலின்கிராடு பணிந்து விடவில்லை. ருஷ்யப்படைகள் தாக்குதலுக்குத் தயார் செய்து கொண்டு ஜெர்மன் படைகளை எதிர்க்கும் வரை ஸ்டாலின்கிராடு பெரும் சேதங்களையும், கஷ்டங்களையும் சமாளித்துக்கொண்டது. ருஷ்யத் தாக்குதல் ஆரம்பித்ததும் ஜெர்மன் படைகள் முற்றுகையைக் கைவிட்டும் போர்முனை முழுவதிலும் பின்வாங்க வேண்டிவந்தது. இல்லாவிட்டால் ஜெர்மன் படையின் பெரும் பகுதியை ருஷ்யர்கள் சூழ்ந்து கொண்டு அழித்திருப்பார்கள்.

இருபது மாதங்களுக்குச் செம்படை 240 எதிரி டிவிஷன்களை எதிர்த்துப் போராடி வெற்றி பெற்றிருக்கிற

தென்றல் செம்படையின் எதிர்ப்புச் சக்தி எத்துணை மகத்தானது என்பது தெரியவரும். ஜெர்மனியோடு அதற்கு வால் பிடிக்கும் டல நாடுகளும் தங்கள் சேனைகளை அனுப்பி வைத்தது நமக்குத் தெரிந்ததுதான். 1914ல் ருஷ்யாவிலிருந்த படை பலத்துக்கு இருமடங்கு அதிகமான எதிரியின் சக்தியை எதிர்த்து செம்படை போராடவேண்டி வந்தது. அது மட்டுமல்ல; இரண்டு வருஷத்துக்கு முன் ஐரோப்பாவின் இயந்திர பலம் முழுவதும் ஹிட்லரின் ஆணைக்குட்பட்டிருந்தது. அதையும் எதிர்த்துச் சமாளிக்க வேண்டியிருந்தது. 1941—42ல் முறியடிக்கப்பட்ட ஜெர்மன் டிவிஷன்கள் எண்பதுக்கு அதிகம். இது ஜாரின் காலத்தில் ருஷ்யாவை எதிர்த்த படைகளின் எண்ணிக்கையை விட இருமடங்கு.

இது செம்படையின் சரித்திரத்தில் ஒரு பகுதி. ருஷ்யாவுக்கு ஒரு செங்கடற்படையும் உண்டு. அதைப்பற்றி அதிகமாக வெளியில் தெரியாது. ஏனெனில் போர்க் காலத்தில் அதைக் குறித்து எதிரிகளுக்குத் தெரியக் கூடாது என்பதற்காக, அதன் நடவடிக்கைகளை இரகசியமாக வைத்திருக்கிறார்கள். ருஷ்யக் கடற்படை வீரனும் தீரத்திலும், சாமர்த்தியத்திலும் செம்படை வீரனுக்குச் சரிசமானமானவனே. பால்டிக் கடலையும், ஆர்க்டிக் கடலையும் எதிரி வசப்படாமல் காத்து வருவது இக்கடற்படைதான். செபாஸ்டபோல் முற்றுகையின்போது கடைசி வரை செம்படைக் கப்பல்கள் தீவிரமாகப் போராடின. எதிரியின் பலம் மிகுதியாக இருக்கவே, அவை வெடிமருந்துக்குத் தீ வைத்துத் தற்கொலை செய்துகொண்டன. இதைக் குறித்து 'டைம்ஸ்' நிருபர் "செபாஸ்டபோலுக் கருகில் நின்ற கப்பல்களில் சரணாகதியைக் குறிக்கும் வெள்ளைக் கொடி ஒருபொழுதும் பறக்கவில்லை" என்று எழுதினார்.

போரும் பொருளுற்பத்தியும்

போர் தொடங்கிய பின்னர் தொழிற்சாலைகளில் பல பிரச்சினைகள் தோன்றின. அவை யாவும் வெற்றிகரமாகச் சமாளிக்கப்பெற்றன. பெரிய அடிப்படைத் தொழில்கள் நடைபெறு மிடங்கள் கிழக்கு ருஷ்யாவில்தானிருக்கின்றன. ஆயினும் எதிரியின் கைவசமான பிரதேசங்களிலுள்ள தொழிற்சாலைகள் அவர்களது கைகளில் சிக்கிவிடாதபடி இயந்திரங்களை பாகம் பாகமாகப் பிரித்து உள்நாட்டிற்குள் அனுப்பி வைத்துவிட்டார்கள். வேலை செய்வதற்கு வேண்டிய தொழிலாளர்களும் உள்நாட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். சில இயந்திரசாலைகள் போர்க்காலத்தில் 1000 மைல்களுக்கு அப்பால் சென்று மறுபடி வாழ்வு தொடங்கின. இதற்குப் பிறகு எதிரி கைப்பற்றியவை தொழிற்சாலைகளது அழிவுச் சின்னங்களே மட்டுமேதான். கிவ், கார்க்காவ் ஆகிய இரண்டு நகரங்களிலிருந்து மட்டும் 10 லக்ஷம் பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் இடம் மாற்றப்பட்டிருக்கிறார்கள். 'நீப்ரோ பீட்ராவ்ஸ்க்' நகரிலிருந்து கொண்டு செல்லப்பட்ட பெரிய தொழிற்சாலையொன்றின் சாதனங்கள் ஒரு மாதத்திற்குள் மறுபடி இணைக்கப்பட்டன. அடுத்த மாதத்திற்குள் அதன் உற்பத்தி முன்னைக் காட்டிலும் இரு மடங்காயிற்று. ஒரு விமான உற்பத்தித் தொழிற்சாலை 'யூரல்' பிரதேசத்திலிருந்து, கிழக்கு ஆசியாவிற்குக் கொண்டுவரப்பட்டு ஐந்து வாரங்களுக்குள் மறுபடியும் வேலை தொடங்கிற்று. மற்றொரு புதிய விமான உற்பத்திச் சாலை 27 நாட்களுக்குள் கட்டி முடிக்கப் பெற்றது.

ஒப்பற்ற தியாகம்

ருஷ்யாவின் தியாகம் ஒப்பற்றது. உடற்பயிற்சியும், உள்ளப் பயிற்சியும் பெற்ற லட்சக்கணக்கான சுதந்திர

இளைஞர்கள், பாஸிஸப் பேயின் பசிக்குப் பலியாகிவிட்டனர். அடிபட்டவர்களில் 40 சத விகிதத்துக்குமேல் உடலுழைப்பிற்குத் தகுதியற்றவர்களாகி விட்டார்கள். உலகத்திலேயே சிறந்தது எனக் கீர்த்தி பெற்ற ருஷ்ய வைத்திய இலாகா அடிபட்டவர்களில் 60 சத விகிதத்துக்குமேல் காப்பாற்றிவிட்டது. ஆயினும் சேதம் அபாரமானதுதான். ராணுவ சேதத்தைத் தவிர, எதிரி கைவசப்பட்ட பிரதேசங்களில் சிவிலியன்களது நிலைமை சகிக்க முடியாததாக இருக்கிறது. 1942-ல் செஞ்சேனை ஒரு கிராமத்தை விடுவித்தது. ஒரு செம்படை வீரன், தலை நரைத்து முகமெல்லாம் சுருக்கம் விழுந்த ஒரு ருஷ்யப் பெண்ணைக் கண்டான். அவள் ஒரு கோலின் உதவியால் தள்ளாடித் தள்ளாடி நடந்தாள். வீரன் அவளருகிற் சென்று, "பாட்டி பயப்படாதே. ஜெர்மானியர்களைத் துரத்திவிட்டோம்" என்றான். அவள் அவனை நோக்கி, "ஏனப்பா என்னைப் 'பாட்டி' என்றழைக்கிறாய். எனக்கு வயது 28 தானே ஆகிறது?" என்றாள். இந்த ஒரு சம்பவத்திலிருந்து நாஜிகளது கொடிய ஆட்சியின் விளைவுகளை ஒருவாறு ஊகித்துக் கொள்ளலாம்.

போரின் நடுவிலும் கலை ஆர்வம்

பொதுவாகப் போருக்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்வதற்கே அரசாங்கம் முதன்மை தருகிறது. இதனால் பொதுஜனத் தேவைகள் புறக்கணிக்கப்படுவதில்லை. இசை, இயல், நாடகம், சிறு கதை ஆகிய கலைகள் என்றும் போல இன்றும் போற்றப்படுகின்றன. கல்வித் துறையில் ஆகும் செலவில் சிக்கனம் அனுஷ்டிக்கப்படுவதில்லை. 1942-ம் வருஷம் ஜனவரி மாதம் முதல், ஏப்ரல் மாதம் முடிய மாஸ்கோ நகரில் 842 அறிவியற் சொற்பொழிவுகள் நடைபெற்றிருக்கின்றன. இவற்றை 1 லட்

சத்து 74 ஆயிரம் பேர் கேட்டுள்ளனர். செப்டம்பரி லிருந்து டிசம்பர் முடிய நடைபெற்ற சொற்பொழிவுகளின் எண்ணிக்கை 1970. கேட்டு இன்புற்றவர்கள் 5,50,000. ஸர். ஐசக் நியூட்டனது மூன்ருவது நூற்ருண்டு விழா 1942-ம் வருஷம் டிசம்பர் மாதம் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. யுத்த காலத்தில் எதிரி வசமான பிரதேசங்களைத் திரும்பக் கைப்பற்றியபோது பல கல்விச்சாலைகள் புதுப் பிக்கப்பெற்றன. அவற்றின் தொகை 2000-த்துக்கு மேலும் இருக்கும்.

ஜன சக்தி

மனிதனது மிருகத் தன்மையால் விளையும் கொடுமை களையும், அழிவையும் எதிர்த்து சாதாரண மனிதன் எவ் வளவு சாதிக்கக்கூடும் என்பதை நினைக்க நினைக்க நமக்கு வியப்பு மிகுகின்றது. சோவியத் மக்கள் தங்களது உற்சா கத்தாலும், சகிப்புத்தன்மையாலும், தங்களது ஒப்புயர் வற்ற தியாகத்தினுலும் ஒரு புதிய உலகத்தைச் சிருஷ்டி செய்து வருகிருர்கள். அவர்களது ஜனங்களில் மூன்றி லொரு பகுதி எதிரியால் அடக்கப்பட்டிருந்தபோதிலும், ஒவ்வொரு குடும்பத்தையும் ஆள் சேதம் பாதித்துவிட்ட போதிலும், அவர்கள் ஊக்கம் தளரவில்லை. வலிமை குன்ற வில்லை. 25 வருஷங்களாக ருஷ்யா அடைந்துள்ள முற் போக்கையும், 1941 ஜூன் 22-ந்தேதிக்குப் பின் அவர்கள் தங்கள் நாட்டையும், தங்கள் நாகரிகத்தையும் பாதுகாப்ப தற்காக எவ்வாறு போரிடுகிருர்கள் என்பதையும் நேரில் கண்ட பின், விடுதலை பெற்ற ஜனசக்தி எத்தகைய மகத் தான வலிமையுள்ளது என்பது நமக்குத் தெளிவாகிறது. உண்மையில் வருங்கால உலக முற்போக்குக்கு சோவியத் மக்களே வழிகாட்டிகள். 1942-ம் வருஷப்பிறப்பு தினத் தன்று செய்த பிரசங்கத்தில் கான்டர்பரி ஆர்ச்பிஷப்

டாக்டர் லாம் துரை, "புயலின் நடுவே ஒரு கலங்கரை விளக்கம் தோன்றுகிறது. அதுதான் சோவியத் ருஷ்யா" என்று சொல்லியிருக்கிறார்.

இரண்டாம் பாகம்

மார்க்ஸீயமும் தனி மனிதனும்

....

ருஷ்யா உலகத்துக்கு ஒரு புதிய வழி காட்டுகிறது. சில வருஷங்களுக்கு முன்னால் தோன்றிய புதிய நாகரிகம், இன்று முடிவான உருப்பெற்று வருகிறது. இந்த யுத்தத்தின் தாக்குதல் தான் அதன் வலிமையையும் வேகத்தையும் உலகிற்கு விளக்குகிறது. ஏனெனில், யுத்தம் தான் ஒரு தேசத்தின் சக்தியையும், வலிமையையும் அளவிட சரியான சோதனை. சிறந்த பயிற்சியுடைய ஜெர்மன் படைகள் ஐரோப்பாவின் இயந்திர பலம் முழுவதையும் உபயோகித்து நடத்திய தாக்குதலை 18 மாதங்களுக்குத் தன்னந் தனியாக நின்று சமாளித்த தேசம் ருஷ்யா ஒன்றுதான். ருஷ்யாவில் நுழைந்த நாஜிப்படைகள் படும் உதையையும், ஓடும் ஓட்டத்தையும் கண்டு நாம் வியப்பும் மகிழ்ச்சியும் அடைகிறோம்.

பெறுதற்கரிய மகத்தான வெற்றிகளை அடைந்துவரும் ருஷ்ய அரசாங்கம், மார்க்ஸீய இலட்சியத்தை அடிப்படையாகக்கொண்டு கட்டப்பெற்றது. மார்க்ஸ், இலட்சியக் கண்ணால் விஞ்ஞான ரீதியாக சிருஷ்டித்த மனக்கோட்டையின் ஸ்தூல ரூபந்தான் ருஷ்யா. புதிய ருஷ்யாவின் ஜனனத்துக்கு முன்பு, மார்க்ஸீயம் ஏட்டுச் சுரைக்காயாகத் தானிருந்தது. ஆனால் இன்று அப்படியல்ல. உலகப் பரப்பில் ஆறில் ஒருபாகம் இன்று மார்க்ஸீயக் கொள்கையைக் கடைப்பிடித்து ஓர் புதிய சமூகத்தை அமைத்திருக்கிறது. 19½ கோடி மக்களின் பிறப்பகமான ருஷ்யா இன்று மார்க்ஸீய நடைமுறையில் எவ்வாறு ஜீவசக்தி ததும்பும் ஒரு சமூகத்தை உருவாக்கக்கூடும் என்பதைக் காட்டுகிறது.

மார்க்ஸின் திட்டம் யாது? அது எவ்வகையில் ருஷ்யாவில் பரிணமித்திருக்கிறது?

ஒழுங்காக, அறிவுக்குப் பொருத்தமாக சமூகம் அமைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு மனிதனுக்கும் அரசியல், பொருளாதார சமத்துவம் பூரணமாக இருக்க வேண்டும். சமூகத் தன்மைக்குட்பட்டுத் தனி மனிதனது நலன்களும் பாதுகாக்கப்படவேண்டும்.

சுருங்கச் சொன்னால் இதுதான் மார்க்ஸின் கொள்கை. தனி மனிதனது நன்மைக்காகவே சமூகம் அமைக்கப்பட வேண்டுமென்பது மார்க்ஸியத்தின் சிறப்பான கோட்பாடு. மார்க்ஸியத்தை விஞ்ஞான ரீதியான ஸோஷலிஸம் என்றும் சொல்வதுண்டு. அது மிகவும் பொருத்தமான பெயரே. சரித்திரத்தை விஞ்ஞான ரீதியாகத் தீர ஆராய்ந்து, சமூகத்தை ஒழுங்கும் கட்டுப்பாடு முள்ளதாகவும், ஒவ்வொரு மனிதனது நலனைப் பாதுகாக்கும் தன்மை வாய்ந்ததாகவும் அமைக்கவேண்டும் என்று மார்க்ஸியம் சொல்லுகிறது.

மார்க்ஸிய சமூகத்தில் சுரண்டலுக்கு இடமில்லை. ஒவ்வொரு மனிதனுக்கும் மதிப்பும், மரியாதையும் உண்டு. மனிதனுக்கு மனிதன் கையாளாவது கிடையாது. தனி மனிதன் பல துறைகளிலும் முழு வளர்ச்சியை யடைய உதவிசெய்ய வேண்டிய பொறுப்பு சமூகத்தினுடையது. தனி மனிதனது அந்தஸ்து உயர்ந்தால், சமூகத்தின் நாகரிகமும் உயரும் என்பதைப் பொதுவுடமை சமூகம் உணருகிறது. ஒவ்வொரு பிரஜைக்கும் தேவையான உணவு, உடை, வைத்திய உதவி, கல்வி வசதி, கலைப் பயிற்சிக்கான வசதிகள் அனைத்தையும் தேடிக்கொடுக்க வேண்டியது சமூகத்தின் பொறுப்பே.

[விஞ்ஞான ரீதியான சோஷலிஸக் கொள்கையில், நிறத்திமிருக்கே இடமில்லை. அரசாங்கத்தில் எந்த இனத்தைச் சேர்ந்த ஆணாயினும் சரி, பெண்ணாயினும் சரி வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் உரிய சம வசதிகள் எல்லோருக்கும் அளிக்கப்படவேண்டும். அவ்வாறு பொது மக்களது சக்தி விடுதலைபெற்று ஆக்க முயற்சிகளில் பயன்படுத்தப்படும்பொழுது மகத்தான நன்மைகள் விளைவது நிச்சயம்.]

மார்க்ஸிஸம் அமுலிலிருக்கும் ருஷ்யா

சோவியத் ஐக்கிய நாடுகளில் எவ்வளவு தூரம் மார்க்ஸீயக் கொள்கை நடைமுறையில் பின்பற்றப்படுகிறது என்று பார்க்கலாம்.

ருஷ்யா போகபூமியாகிவிட்டது என்றோ, ருஷ்ய மக்கள் தேவர்களாகி விட்டார்களென்றோ நினைப்பது தவறு. அங்கு சென்று பார்த்தவர்கள் சோவியத் வாழ்க்கையிலும், அரசாங்க அமைப்பிலும் அனேக குற்றங் குறைகளைக் கண்டு அவற்றை வெளிப்படுத்தி இருக்கிறார்கள். (குறைகளை விட்டுவிட்டுக் குணங்களைக் கவனிக்கும்போது சோவியத் முன்னேற்றத்தையும், வளர்ச்சியையும் புகழாமலிருக்க முடியாது). செஞ்சேனையின் வெற்றிகளும், தொழில் வளர்ச்சியும், கல்விப் பரப்பும் கற்பனையையும் கடந்து நிற்கின்றன. இதுவரை உலகம் கண்டிராத ஒரு சமூக அமைப்புச் சோதனையில் ருஷ்ய சமூகம் பெற்ற பயன்களை உலகம் வியப்போடு கவனித்து வருகிறது.

புதிய ருஷ்யாவை நிர்மாணிப்பதற்கு சோவியத் அரசாங்கம் மார்க்ஸீயக் கொள்கைகளை அஸ்திவாரமாக உபயோகித்திருக்கிறது. இந்த ஆக்க வேலைக்கு மூளையாகவும், ஜீவசக்தியாகவும் விளங்கியவர் லெனின். லெனி

னுக்குப் பின் இவ்வேலையைத் தொடர்ந்து நடத்துபவர் ஸ்டாலின். அவர் தமது திறமைகளையும், சக்திகளையும் தமது தலைவரான லெனினது இலட்சியங்களை உருவாக்கவே அர்ப்பணித்து வருகிறார். தாமாகவே உலகிற்கு அவர் ஒரு துறையில் புதிய வழியைக் காட்டியிருக்கிறார். அது ருஷ்ய தேசிய இனங்களின் பிரச்சினையை சரிவரத் தீர்த்து வைத்ததே.

சிந்தனையின் விளைவாக எழுந்த கொள்கைகளை அடிப் படையாகக்கொண்டு கட்டப்பெற்றதே சோவியத் சமூக அமைப்பு. இவ்விஷயத்தில் இதனை ஒக்கும் சமூகம் உலகில் வேறெங்கும் இல்லை.

மார்க்ஸியத்தின் முதல் ஆசிரியர்களுக்கு ஈவிரக்கம் கிடையாதென்றும், ஒரு கட்டுப்பாட்டின் அமைப்புக்குள் உழைப்பாளிகளைப் பலவந்தமாக இழுத்து வந்து அடிமைப் படுத்த முயற்சி செய்தார்களென்றும் சிலர் விஷமப் பிரசாரம் செய்கிறார்கள். முதலாளித்துவ சமூக அமைப்பில் தனி மனிதனுக்குப் பொருளாதார சுதந்திரமும் நன்மையும் இருப்பதுபோலவும் இவர்கள் பேசுகிறார்கள். உண்மையோ இவர்கள் கூற்றுக்கு நேர்மாறாக இருக்கிறது. ருஷ்யாவில் காணப்படும் நிலைமை இதற்கு சாட்சி. முதலாளித்துவப் பெருக்கத்தால் உண்டான பயங்கரமான வறுமையையும், குழப்பத்தையும் உணர்ந்த மார்க்ஸும், எங்கெல்ஸும் மனம்நொந்து, அவற்றின் காரணங்களை ஆராய்ந்தார்கள். அவ்வாராய்ச்சிகளின் விளைவே மார்க்ஸியம்.

மார்க்ஸ் வாழ்க்கை

மனிதனது கஷ்ட நஷ்டங்களைக்கண்டு அனுதாபப்படும் பண்பு மார்க்ஸுக்கு உண்டு என்பது அவர் வாழ்க்கைச் சரித்திரத்தை அறிந்தவர்களுக்குத் தெரியும். அவர் சுற்றி லும் ஏழைகள் படும் அவதியையும், அடக்கப்பட்டோர்

படும் கஷ்டங்களையும் கண்டு மனமுருகினார். இதற்குக் காரணமான சமூக அமைப்பின் வளர்ச்சியைத் தீர ஆராய்ந்தார். ஆராய்ந்து சமூக வளர்ச்சியைக் குறித்த சில பரிணாம உண்மைகளைக் கண்டு பிடித்தார். சார்லஸ் டார்வின் "வாழ்க்கை வளர்ச்சி பற்றி" வெளியிட்ட பரிணாமத்தைப்போல மார்க்ஸும் சமூக வளர்ச்சியின் படிகளை ஆராய்ச்சியாலும், கற்பனையாலும் கட்டினார். அவரைப்போல வாழ்க்கையில் கஷ்டப்பட்டவர்கள் ஒரு சிலரே.

கார்ல் மார்க்ஸின் தந்தை படித்தவர். பண்பாடு மிகுந்தவர். வக்கீல். கூரிய புத்தியும், ஆராய்ச்சி மனப்பாங்கும் வாய்ந்த மகனுக்கும், தத்துவ ஞான அறிவும், சிந்தனைச்சக்தியும் படைத்த தகப்பனுக்குமிடையே நடந்த கடிதப் போக்குவரத்து, அவர்களது பரஸ்பர அன்பையும் நம்பிக்கையையும் காட்டுகிறது. இக் கடிதங்கள் ஒன்றில் கார்ல் தன்னைவிட நான்கு வயது மூத்தவரும் பிரபுக்கள் வம்சத்தில் வசித்தவருமான ஒரு பெண்ணைக் காதலிப்பதாகத் தகப்பனுக்கு எழுதியிருக்கிறான். தகப்பனும் சம்மதிக்கவே, அவ்வருஷமே திருமணம் நிகழ்ந்தது.

குடும்ப வாழ்வின் பொறுப்பு காதலைக் குலைத்துவிடவில்லை. கணவரும் மனைவியும் தங்கள் முடிவுவரை அன்னியோன்னியமாக வாழ்ந்தார்கள். சாவதற்குச் சில தினங்களுக்கு முன்பு கூட இருவரும் இளம் தம்பதிகள் போல் அன்போடு பழகினார்கள். இதைக்குறித்து அவர்களது குமாரி தனது குறிப்புப் புத்தகத்தில் எழுதிவைத்திருக்கிறாள்.

மார்க்ஸ் இளவயதில் ஒரு பத்திரிகை நடத்திவந்தார். அதில் எழுதிய ஒரு கட்டுரைக்காக அவர் நாடு கடத்தப்பட்டார். பத்திரிகையும் நின்றுவிட்டது. அதை நடத்து

அவன் அன்பு நிறைந்த உள்ளத்தோடு தனது சோதனைகளது பயன்களை பொது நன்மைக்கு உபயோகிக்க வழி வகைகளைத் தேடுகிறான். மார்க்ஸின் போக்கும் இதுதான். சமூகத்தைப்பற்றிய ஆராய்ச்சிகளில் அவர் சிந்தனையே உருவமாகி விடுவார். உலக வியவகாரங்களில் அன்புருவமாகி விடுவார்.

அவரது 'மூலதனம்' என்னும் நூலைப் படித்துப் பார்த்தால் அவரது உள்ளப் பண்பு எத்தகையது என்பது விளங்கும். ஒரு வகுப்பார் மற்றொரு வகுப்பாரை அடிமைப் படுத்தி வைத்திருப்பது பணத்துக்காகவே. குழந்தைகளையும் பெண்களையும் வறுத்தி வேலை வாங்குவது முதலிய குரூரமான செயல்களையும் வழக்கங்களையும் அழுத்தமாகக் கண்டித்திருக்கிறார். இது அவரது உள்ளம் அன்பால் நிறைந்திருந்தது என்பதைக் காட்டுகிறது.

*　　　　*　　　　*

லெனின் கண்ட உண்மை

மார்க்ஸுக்குப் பல சிஷ்யர்களுண்டு. அவர்களில் அறிவிலும், தீரத்திலும் இணையற்றவர் லெனின். லெனினது வாழ்க்கை மார்க்ஸினது வாழ்க்கையைப்போலவே கரடுமுரடானது. அவரும் பண்பாடுள்ள குடும்பத்தில் பிறந்தவர். கல்வியில் சிறந்தவர். தாழ்த்தப்பட்டோர்மீது பொங்கும் அன்புடையவர். வறுமையை அறிந்தவர். குழந்தைகளின்மீது வாஞ்சையும், அனுதாபமும் உடையவர்.

மார்க்ஸீயம் லெனினது உயர்ந்த பண்பைக் கவர்ந்தது. சூழலில் அவர் கண்ட துன்பம், அவர் உள்ளத்தைக் கனிவித்தது. மார்க்ஸின் சமூக வளர்ச்சியைப்பற்றிய ஆராய்ச்சிகளும், சமூக முன்னேற்றத்தைத் துரிதப்படுத்தும் அரசியல் வேலைத் திட்டங்களும் லெனினுக்கு மிகவும் பிடித்திருந்தன.

லெனினது தகப்பனுர் ஒரு ஆசிரியர். தாயார் உயர்ந்த கல்விப் பயிற்சியும், ஜனநாயக மனப்போக்குமுடையவர். சிறு பையனுக இருக்கும்போது லெனினுக்கு உடற்பயிற்சி கல்விப் பயிற்சி இரண்டிலும் நல்ல தேர்ச்சி உண்டு. தனது சகோதரர் அலெக்சாண்டரிடமிருந்து அவர், தொழிற்சாலேகளிலும், சுரங்கங்களிலும் வேலே செய்யும் தொழிலாளரது கஷ்ட நிஷ்டுரங்களேப்பற்றி அடிக்கடி கேட்டறிந்து கொள்வார். அலெக்சாண்டர் புரட்சிவாதி. ஜார் சர்க்கார் அவரைப் பிடித்துப் பெயருக்கு விசாரணேயொன்று நடத்தி அவரைக் கொலே செய்துவிட்டது. அதிலிருந்து லெனின் தமது சகோதரரின் அரசியல் வேலேகளேத் தொடர்ந்து நடத்தத் தொடங்கினுர். தாமும் புரட்சிக் கட்சியில் சேர்ந்தார். மார்க்ஸின் நூல்களே ஆராய்ந்து கற்ருர். இவரது போக்கு சர்வகலாசாலேயாருக்குப் பிடிக்கவில்லே. அதனுல் அவரைக் கல்லூரியை விட்டு வெளியேற்றினுர்கள். ஆயினும் அவர் படிப்பை விட்டுவிடாமல், நான்கு வருஷங்களில் முடிக்க வேண்டிய படிப்பை வீட்டிலிருந்தே இரண்டு வருஷங்களில் கற்று பரிட்சையில் தேறிப் பட்டம் பெற்ருர்.

தமது இருபத்து மூன்ருவது வயதில் லெனின் பீட்டர்ஸ்பர்க் நகரத்திற்குச் சென்ருர். அங்கே தொழிலாளரது நிலேமையை நேரில் கண்டு உணர்ந்தார். அவர்களே ஒன்று திரட்ட அவர் பல பிரசங்கங்கள் புரிந்தார். சர்க்கார் இம்முயற்சிகளேக் கவலேயோடு கவனித்து வந்தது. கடைசியில் அவரைக் கைது செய்து * சைபீரியாவுக்கு அனுப்பி விட்டது.

விடுதலேயானவுடன் அவர் லண்டனுக்குச் சென்று, அங்கே போல்ஷிவிக் கட்சியின் தலேமையை ஏற்ருர். அவர் தலேமையில் புதிய கம்யூனிஸ்டு கட்சி வலிமை பெற்றது.

---

* அந்தமான் போன்ற தண்டனே ஸ்தலம்.

மார்க்ஸியக் கொள்கையை நடைமுறைக்குக் கொண்டுவர லெனின் திட்டம் வகுத்தார். மார்ஸீய இலட்சியத்தை ஸ்தூலமாக உருவாக்கியது லெனின்தான்.

1924ல் லெனின் உயிர் நீத்தார். ருஷ்யா முழுதும் அவரை உத்தம புருஷராகக் கொண்டாடுகிறது. அவரைப் பற்றிய கதைகளும், பாடல்களும் ஏராளம். அவரது உருவப்படம் திரைச்சீலைகளிலும், ஜமக்காளங்களிலும் சித்தரிக்கப்படுகிறது. அவர் ஜனங்களை நேசித்ததால், அவர்கள் இன்றும் அவரைநேசிக்கிறார்கள். அவர் அன்புருவமாகவே வாழ்ந்த கார்ல் மார்க்ஸைப் போலவே அவரும் நிறையின்வரம்பை மீறியதில்லை. பெண்ணுக்கும் ஆணுக்குமுள்ள தொடர்பு உடல் பழக்கம் மட்டுமல்ல, ஆத்மீக உறவாகவும் இருக்கவேண்டும் என்பது அவருடைய கொள்கை.

லெனினுக்குக் குழந்தைகள் என்றால் உயிர். அவர்களோடு விளையாடுவதிலும், அவர்களுக்குக் களிப்பூட்டுவதிலும் லெனினுக்கு அபார மகிழ்ச்சி.

லெனினது எளிமை, அனுதாபம், அன்பு, பெண்மையினிடத்து மரியாதை, கல்வியில் ஆர்வம், கலைப்பற்று, மனித வாழ்க்கையில் பிடிப்பு இவையெல்லாம் ஒரு புதிய சமூக அமைப்பை நிறுவ அவருக்கு உதவி யளித்தன. "கார்பியாஸ்கி" என்னும் பேராசிரியர் லெனினைப்பற்றி கீழ்க்கண்டவாறு எழுதியிருக்கிறார்: "லெனின் தலை சிறந்த தலைவர். எளிமை, வினயம், சிந்தனைசக்தி, அடக்கம் ஆகிய பண்புகளில் அவரை ஒப்பார் யாரும் இல்லை. அவர் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற வேறுபாடு இல்லாமல் எல்லோரிடமும் ஒரே மாதிரியாகவே பழகுவார். இப் பண்புகளின் சின்னங்களை, சோவியத் கல்வி முறை, சோவியத் இளைஞர் இயக்கங்கள், சோவியத் மாதர் முன்னேற்ற இயக்கம், சோவியத் விஞ்ஞான முன்னேற்றம், சோவியத் பொருளா

தாரத் திட்டம் ஆகிய எல்லாத் துறைகளிலும் இன்று காண முடியும்.''

* * *

அறிவு வன்மையிலும் லெனின் மார்க்ஸுக்குக் குறைந்தவரல்ல. எங்கெல்ஸ், மார்க்ஸ் இருவரது நூல்களைக் கற்று, சமூக வளர்ச்சி விதிகளையும், அவைகளை அனுசரித்து அரசியல் வேலைத்திட்டத்தை அமைக்கவேண்டிய அவசியத்தையும் அவர் நன்கு உணர்ந்திருந்தார். உணவுப் பொருள்களையும், வேறு தேவைப் பொருள்களையும், உற்பத்தி செய்யும் முறைகள் மாறுவதைப் பொறுத்து சமூக உறவுகளும், அமைப்பும் மாறுபடும் என்பது அவருக்குத் தெளிவாக விளங்கியது. குடிசைத்தொழில் சிதைந்து இயந்திரத் தொழில் தலையெடுத்தவுடன் சமூக உறவில் ஒரு பெரிய மாறுதல் உண்டாயிற்று. இயந்திரத்தொழில் திறமையாக நடைபெற, இயந்திர சாலையிலுள்ள பல்வேறு தொழிலாளிகளுக்குள்ளும் கூட்டுறவு அவசியமாயிற்று. இது புதிது. அதனல் வேலைப்பிரிவு தோன்றிற்று. உற்பத்தி செலவைக் குறைப்பதற்காக ஒரு பெரிய இயந்திரத்தின் உதவியால் பல தொழிலாளரது உடலுழைப்பைக் கட்டுப்படுத்த வேண்டியதாயிற்று. ஆகவே தொழிலாளர் கூட்டுறவு இன்னும் பலப்பட்டது. இவ்வாறு கூட்டுறவு முறையால் நடைபெறும் தொழிலில் முதலாளி அவசியமில்லை. தொழிலாளர் கூட்டுறவுக்கே இயந்திரசாலை சொந்தமாக இருக்கவேண்டும். ஏனெனில், அவர்களது உழைப்பினல் தான் பொருள் உற்பத்தி நடக்கும் தொழிலகும்.

இது தான் நியாயமானது. மறுக்க முடியாதது. ஆனல் பேரறிவு படைத்தவர்களுக்குதான் இது முதன் முதலில் தென்படும். மார்க்ஸும், எங்கெல்ஸும் இந்த உண்மை

மையக் கண்டுபிடித்து வெளியிட்டதோடு நில்லாமல், இயற்கையாக நடைபெறக்கூடிய இந்த மாறுதலைத் துரிதப் படுத்தத் தொழிலாளிகள் தங்களது சக்தியை உணர்ந்து, 'தங்களுக்கே தொழிற்சாலை சொந்தம்' என்ற உரிமையை நிலைநாட்டப் போராட வேண்டுமென்று விரும்பினார்கள். மார்க்ஸ் தனது பொருளாதார நூல்களில் இக்கொள்கையை விவரித்து எழுதியிருக்கிறார். அது பொருளாதார நிபுணர்களுக்கு மட்டுமே விளங்கும். ஆகவே எல்லோருக்கும் விளங்கும்படி 'கம்யூனிஸ்டு அறிக்கை' என்ற சிறு நூலில் தெளிவுபடுத்தி யிருக்கிறார்.

இன்று அரசியல் ஆதிக்கம் பணக்கார வகுப்பாரிடம் இருக்கிறது. அது உழைப்பாளிகளிடம் வரவேண்டும். ஒரு போராட்டமின்றி அரசியல் ஆதிக்கம் கைமாறாது. சரித்திரம் கற்பிக்கும் பாடம் அது. புரட்சி ஒன்றுதான் வகுப்பு முரண்பாட்டை நீக்கக் கூடும் என்று மார்க்ஸ் உபதேசித்தார். முதலாளி வர்க்கம் தனது நலன்களைப் பாதுகாக்கப் போராடியே தீரும். போராட்டமின்றி ஒரு சிறுபான்மை வகுப்பார் தங்கள் உடமைகளை விட்டுக் கொடுத்ததாக சரித்திரத்தில் நாம் கேட்டதில்லை. (ஆகவே வர்க்கப் போராட்டம் தடுக்க முடியாதது. இயற்கையானது. மனித முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது.) மார்க்ஸ் இவை யனைத்தையும் நன்குணர்ந்து, வர்க்கப் போராட்டத்தைக் குறித்து விரிவாக எழுதிவைத்தார்.

இனி, வர்க்கப் போராட்டத்தைப்பற்றி அவர் கருத்துகள் எவை என்று காண்போம்.

வர்க்கப் போராட்டம் என்ற சொற்றொடரின் உட்பொருள் என்ன? தனி மனிதர்களுக்குள்ளே காணப்படும் உறவையோ, பூசலையோ இது குறிப்பதில்லை. பொருள் உற்பத்தி சம்பந்தப்பட்ட மட்டில் இரு வர்க்கங்கள் இருக்-

கின்றன. அவற்றுள் ஒரு வர்க்கத்தாருக்கு நிலம், இயந்திரசாலைகள் முதலிய உற்பத்திச் சாதனங்கள் சொந்தம். இதனால் உற்பத்தியைக் கட்டுப்படுத்தும் ஆதிக்கமும், பணத்தால் பெறக்கூடிய வேறு சுதந்திரங்களும் அவர்களுக்கு உண்டு. இக்காரணத்தால் அரசாங்கத்தையும் அவர்கள் இஷ்டம்போல ஆட்டிவைக்க முடியும். அடுத்த வர்க்கத்தாருக்கோ உணவு, உடை, இருப்பிடம் முதலிய இன்றியமையாத வசதிகள் கூடக் கிடையாது. வேலை செய்யும் சக்தியும், போராடிப்பெற்ற சில அரசியல் உரிமைகளுமே அவர்களுக்குச் சொந்தமானவை.

இவ்விரு வர்க்கத்தாரின் நலன்களும் நேர் முரணானவை. என்றைக்காவது ஒருநாள் அடக்கியாளப்படும் வர்க்கம் அடக்கி ஆளும் வர்க்கத்தை எதிர்த்துத் தனது நலன்களைப் பாதுகாக்கப் போராடியே தீரும். இந்தப் போராட்டம் நியாயமானது. அறிவுக்கும் பொருத்தமாகவே இருக்கிறது. சுரண்டப்படும் வர்க்கம் வலுப்பெற்றவுடன் கிளர்ச்சி செய்து அரசியல் ஆதிக்கத்தைக் கைப்பற்றும். அரசாங்க அமைப்பு உடனே மாறும். இவ்வாறுதான், சரித்திரத்தில் எத்தனையோ அரசியல் அமைப்புகள் தோன்றியிருக்கின்றன. முதலில் நிலப்பிரபுத்துவ சமூகம் (Feudal State) உண்டாயிற்று. தொழில் முன்னேற்றம் அதிகமாக அதிகமாக முதலாளித்துவமும், சோஷலிஸமும் தோன்றியிருக்கின்றன.

ஆளும் வர்க்கம் இயற்கையான மாறுதல்களை எதிர்க்கிறது. நியாயமான இம்மாறுதல்களை சுயநலப் பற்றால் எதிர்க்கும்போது போராட்டம் தவிர்க்க முடியாததாகிறது. கிளர்ச்சி செய்யும் உழைப்பாளரது வர்க்கம் தனது உரிமைகளைத்தான் கோருகிறது. அது வீண் சண்டைக்குப் போவதில்லை. மத நம்பிக்கை யுடையவர்கள் வீண் போராட்

டத்தை ஆதரிக்கக்கூடாது. ஆனால், நசுக்கப்படும் வர்க்கம் தனது நியாயமான உரிமைகளைக் கேட்கும்போது அவர்களது கோரிக்கைகளை ஆதரித்துத்தானகவேண்டும். இக் கோரிக்கைகளை உறுதிப்படுத்த ஆயுதபலம் அவசியமானல் அதனையும் உபயோகிக்கத் தயங்கக்கூடாது.

இதைப்பற்றி சந்தேகங்களே வேண்டாம். ஜெர்மனியைத் தோற்கடிப்பதற்காக இன்று இங்கிலாந்து ஆயுத பலத்தை உபயோகிக்கிறது. மதப்பற்றுள்ளவர்களும் தத்துவ ஞானிகளும் இதை அதிகமாக ஆட்சேபிப்பதில்லை. சிலர் ஆதரிக்கவும் செய்கிறார்கள், இந்த பாஸிஸ எதிர்ப்புப் போரில் லட்சக் கணக்கான உயிர்கள் பலியாவது அவர்களுக்குத் தெரியும். மார்க்ஸ் இலட்சியமாகக் காட்டியிருக்கும் சுதந்திர நிலைமையை அடைய இத்தொகையில் ஒரு சிறு தொகையே தியாகத்துக்குள்ளாக நேரும். ஜெர்மனி இப்பொழுது எந்த சுதந்திரத்தை அழித்துவிடக் கச்சை கட்டிக் கொண்டிருக்கிறதோ அதைவிடச் சிறந்த சுதந்திரத்தையே மார்க்ஸ் கனவு கண்டார். அதை அடைவதற்கான முயற்சியில் ஆயுத பலத்தை உபயோகிக்கக் கூடாதென்று எப்படிச் சொல்லமுடியும்?

ஆகவே வர்க்கப் போராட்டம் நீதிக்கு முரணானதல்ல. பொருள்களை உற்பத்தி செய்யும் உழைப்பாளர்களுக்கு அப்பொருள்களில் யாதொரு உரிமையும் இன்று இல்லை. அவர்களுக்கு தங்கள் உற்பத்திப் பொருள்களில் உரிமையளிக்க வேண்டியது நியாயமென்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். அப்படியானல், உற்பத்தி ஸ்தாபனத்தின் முதலாளிகள், பொருள் ஆக்குபவனுக்கு அரைவயிற்றுக் கஞ்சியை ஊற்றிவிட்டு, அவனது உழைப்பின் பயன் முழுவதையும் பறித்துக்கொள்வது அநீதியின் சிகரம். தங்களது சுகவாழ்க்கைக்குத் தேவையான பொருள்களைப் பெறுவது, பொருள் உற்பத்திக்குக் காரணமான உழைப்பாளரது பிறப்புரிமை.

அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களைத் தங்களுக்குக் கிடைக்கவொட்டாமல் தடுக்கும் முதலாளி வகுப்பாரிடமிருந்து பெறக் கிளர்ச்சி செய்வது ஒருவிதத்திலும் தவறாகாது.

பணக்காரன், எளியவன் என்ற வித்தியாசம் இருக்கும் வரை, இப்போராட்டம் இருந்துதான் தீரும். சமூக வளர்ச்சி விதிகளை அனுசரித்து ஜனங்கள் மனம்மாறி சமூகத்தை மாற்றி அமைப்பார்களாயின், இப்போராட்டம் இரத்தம் சிந்தாமல் நடைபெற்று, இறுதியில் உழைப்பாளிக்கு வெற்றியை யளிக்கும். மனித வாழ்க்கையின்மீது மார்க்ஸ் வைத்திருந்த பிரியத்தால்தான் அவர் உழைப்பாளிகள் தங்கள் நலன்களையும் உரிமைகளையும் உணரும்படித் தூண்டினார். அதே காரணத்தால்தான் லெனினும், உழைப்பாளிகளுக்கு மார்க்ஸியத்தைப் புகட்டி, அக்கொள்கையை உருவாக்கத் தேவையான பயிற்சியையும் அளித்தார். இப்பயிற்சியின் விளைவால்தான் தொழிலாளர் புரட்சி உண்டாயிற்று. அதன் காரணமாக உற்பத்திச் சாதனங்கள் முதலாளியிடமிருந்து தொழிலாளிக்கு கைமாறிற்று. இவ்வாறு வர்க்க வேறுபாடு ஒழிக்கப்பட்டது. 6,000 வருஷங்களாக இடைவிடாது நிகழ்ந்து வந்த வர்க்கப் போராட்டம் ருஷ்யாவில் முடிவு பெற்றது.

*　*　*　*

ருஷ்யாவில் மார்க்ஸிஸத்தின் வெற்றி

மார்க்ஸியத்தின் ஸ்தூல ரூபமான ருஷ்யாவின் நிலையை வேறு நாடுகளின் நிலையோடு ஒப்பிட்டுப் பார்ப்போம்.

இன்று, ருஷ்யா ஒரு வல்லரசு. போரென்னும் அக்கினிப் பரீட்சையில் அது சாம்பலாகிவிடாமல் தேறிவிட்டது. இன்றைய உலகத்தில் எதிரிகளை விரட்டியடிக்கத்

தகுந்த சேனு பலத்தையும், அதற்குத் துணையான ஆயுத பலத்தையும் திரட்டி அமைப்பதில் மார்க்ஸீயம் பூரண வெற்றி யடைந்துவிட்டது. இந்த நிர்மாண வேலே பதினைந்து வருஷங்களுக்குள் நடந்திருக்கிறது. இடையே உள்நாட்டுக் கலகங்களும், பஞ்சமும், வறட்சியும் நாட்டின் பல பாகங்களிலும் தலேகாட்டின. இத்துன்பங்களை மதியாமல் கருமமே கண்ணுக உழைத்ததின் பயன்தான் இன்று கைமேல் கிடைக்கிறது. செம்படை வீரர்களது எண்ணிக்கையைவிட, இயந்திர சாதனங்களின் சக்திதான் இன்று உலகத்தைப் பிரமிக்கச் செய்கிறது. 15 வருஷங்களுக்கு மூன், மிகவும் பிற்போக்காயிருந்த இயந்திரசாலேகளை மாற்றி யமைத்துப் பன்மடங்காகப் பெருக்கி வழி காட்டியது மார்க்ஸீயமே. அது போலவே, விவசாயத்திலும் புராதனக் கருவியான மரக் கலப்பையை ஒழித்து இயந்திரங்களைப் புகுத்தி விளேச்சலேப் பன்மடங்காக்கியதும் மார்க்ஸீயமே.

ருஷ்யாவின் தொழில் முன்னேற்றம் திட்டமிட்டு நிகழ்ந்தது. முதலாளித்துவ சமூகத்தில் இல்லாத தீவிரமான நியாய உணர்ச்சியும் நீதி மனப்பான்மையும் மார்க்ஸீய சமூகத்தில் இயற்கையாக அமைவதால், மக்களுக்கு உழைக்க வேண்டும் என்ற ஆர்வம் உண்டாகிறது. ஏனெனில், முதலாளித்துவ பொருளாதார நிலேயில் ஏற்படும் முரண்பாட்டைக் குறித்து ஒரு மூலாதாரமான பிரச்னேயை மார்க்ஸீயம் எழுப்புகிறது. மனிதன் இயந்திரத்தைப் படைத்தான். அது எதற்காக இருக்கிறது? அதன் மூலம் செய்து குவிக்கப்படும் பொருள்கள் எந்த நோக்கத்துக்காக பயன்படுத்தப்பட வேண்டும்?

ருஷ்யா இக்கேள்விகளுக்கு நடைமுறையில் அளித்த பதில் இதுதான்: (1) பொருள் உற்பத்தியை அபரிமித

மாகப் பெருக்க இயந்திரங்களை உபயோகிக்க வேண்டும். (2) உற்பத்தியாகும் செய்பொருள்கள், நிறபேதத்தையும், ஆண், பெண் வேற்றுமையையும் கவனியாது, எல்லா மக்களுடைய தேவைகளையும் பூர்த்தி செய்வதற்காக வழங்கப்பட வேண்டும். (3) இவ்வாறு பொது நன்மைக்காகச் சேவை செய்துவரும் தொழிலாளியும், விவசாயியும் கீழ்க்கண்ட உரிமைகளைப் பெறுவான்: வேலை செய்யும் சுதந்திரம்—வேலைக்குத் தகுந்த ஊதியம்—வேலை நேரத்துக்குப் பின் ஓய்வும், ஒழிவும் பெறும் சுதந்திரம்—இலவச வைத்திய உதவி—வயதாகிவிட்டாலும், வேலை செய்ய முடியாதபடி வியாதிக்கு ஆளாகி விட்டாலும் அரசாங்கப் பாதுகாப்புப் பெறும் சுதந்திரம்—சுருங்கச் சொன்னால், சீரும் சிறப்பும் பெற்ற பண்பாடு மிகுந்த மனித வாழ்வை நடத்த ஒவ்வொரு மனிதனுக்கும் சுதந்திரம் இருத்தல் அவசியம். பொது சேவைதான் தொழிலாளியின் இலட்சியமாக இருத்தல் வேண்டும். கிறிஸ்துவ மதம் பொதுச் சேவையின் உயர்வைப் போதிக்கிறது. மார்க்ஸீயம் சுயநலத்துக்காக உழைப்பதைத் தடுத்து, பொது நலத்துக்காக ஒவ்வொருவரும் உழைக்குமாறு சமூகத்தை மாற்றியமைக்க வேண்டுமென்று கோருகிறது. இந்த நீதி யுணர்ச்சியும் விஞ்ஞான வளர்ச்சியும் சேர்ந்து, புதிய புதிய வழிகளில் உற்பத்தியைப் பெருக்கவும், அவற்றைப் பொது நலத்துக்குப் பயன்படுத்தவும் சாத்தியமாக்குகின்றன. அவைதான் சோவியத் ருஷ்யாவின் பிரமாதமான தொழில் வளர்ச்சிக்கும், சேனைபலத்துக்கும், போர் வெற்றிகளுக்கும் காரணம்.

இவ்வாறு உற்பத்தியைப் பெருக்குவதற்கு முதலடியாகப் பல வேலைகள் செய்தாக வேண்டியிருந்தது. நிலம், உலோகங்கள், உற்பத்திக்குத் தேவையான மின்சாரம் முதலிய சக்திகள் யாவும் பொதுமக்களுக்குச் சொந்தமாகவேண்

டியது அவசியமா யிருந்தது. உலகப் பரப்பில் ஆறில் ஒரு பாகமான ருஷ்ய தேசம் முழுவதுக்கும் ஒரு உற்பத்தித் திட்டம் வகுக்க வேண்டியதாயிற்று. அதற்கு நாட்டின் செல்வம், நிலப்பரப்பு, தொழிற்சாலைகளின் உற்பத்தியளவு இவற்றைக் குறித்துப் புள்ளி விவரங்கள் சேகரித்தாகவேண்டியிருந்தது. பின்பு எவ்வகையில் இவற்றை மிகுதிப்படுத்தலாம் என்று கணக்கிட்டார்கள். பின்பு எவை இன்றியமையாத தேவைகள், எவை பிற்காலத்தில் கவனிக்கப்பட வேண்டிய தேவைகள் என்று ஆலோசனை செய்து திட்டம் போட்டார்கள். திட்டங்களும், பொருள்களும், சக்தியும் இருந்தால் மட்டும் போதாது. திட்டங்களை நிறைவேற்றக் கல்வியறிவும் பயிற்சியும் பெற்ற மக்கள் தேவை. கல்வியறிவும் பயிற்சியும் ஆரம்பத்திலிருந்தே தொடங்கிக் கொடுத்தார்கள். இவ்வளவு காரியங்களையும் மார்க்ஸிய அமைப்புள்ள ஒரு சமூகம் தான் சாதிக்கமுடியும்.

* * * *

தொழிலிலும், விவசாயத்திலும் ருஷ்யா அடைந்திருக்கும் முன்னேற்றத்தைப் பின்னால் விவரிப்பேன். இப்போது ருஷ்யர்கள் ஆத்மீகத் துறையினால் எவ்வாறு முன்னேறியிருக்கிறார்கள் என்பதைக் குறித்து ஒரு வார்த்தை. இன்று சுயலாபத்துக்கென்று தொழில் செய்பவன் எவனும் ருஷ்யாவில் இல்லை. ருஷ்யத் தொழிலாளிகள் எல்லோரும் சமூக நன்மைக்காகவும், முன்னேற்றத்துக்காகவுமே உழைக்கிறார்கள். சுயநலத்துக்காக இல்லாமல் பொது நலத்துக்காக உழைப்பது ஆத்மீக முன்னேற்றத்தைக் குறிக்கவில்லையா? இந்தப் பொதுநல உணர்ச்சிதான் எல்லாத் துறைகளிலும் ருஷ்யர்கள் ஊக்கத்தோடு ஈடுபடுவதற்கும், அதனால் தேசம் வளர்ச்சியுறுவதற்கும் காரணம்.

உயர்ந்த ஆத்மீக வாழ்வுக்கும், பண்பாட்டிற்கும் பல

நுகர்ச்சிப் பொருள்கள் தேவை. அவை நியாயமான வழியில் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்படவேண்டும். பெண்களுக்கு வசதியான தொழிற்சாலைகள் அவசியம். ஆசிரியர்களுக்கு இடவசதியும், உபகரண வசதியுமுள்ள கல்விச் சாலைகள் வேண்டும். வைத்தியர்களுக்கு நல்ல கருவிகளும், ஆஸ்பத்திரிகளும், சுகவாசஸ்தலங்களும் இருக்கவேண்டும். பண்பாடு வளர்வதற்கும், ஆத்ம முன்னேற்றம் ஏற்படுவதற்குப் பலவகையான பொருள்களும், வாழ்க்கை வசதிகளும், கல்விப் பயிற்சியும், ஆரோக்கியத்துக்கான வசதிகளும் தேவையா யிருக்கின்றன, இவை யனைத்தையும் மார்க்ஸிய நாகரிகம் ருஷ்யர்களுக்கு அளிக்கிறது. அந்த நாகரிகத்தை நாஜிகள் அழித்துவிடாமல் பாதுகாக்க டாங்கிகளும், துப்பாக்கிகளும், விமானங்களும் ஏராளமாக வேண்டி யிருக்கின்றன.

மனித சௌகரியத்திற்கு விஞ்ஞானம்

ஆரம்பத்தில் ருஷ்யாவின் புதிய நிர்மாணத் திட்டத்தின் சிற்பிகள் நாட்டின் செல்வ நிலையை உயர்த்தப் பாடுபட்டார்கள். முதலில் நாட்டின் இயற்கைச் செல்வம் முழுவதுக்கும் ஒரு கணக்கெடுத்தார்கள். பின்பு விஞ்ஞானத்தின் துணையை நாடினார்கள். தரை நூல் வல்லவர்கள், உலோகச் சுரங்கத் தொழிலில் வல்லவர்கள், தாவர நூல் வல்லவர்கள் முதலியோரைச் சேகரித்து அவர்களுக்குத் தொழிற் பயிற்சி யளித்தார்கள். ருஷ்யத் தலைவர்களது முயற்சியின் அளவை அறிந்துகொள்ள மற்ற நாட்டுத் திட்டங்களோடு இதனை ஒப்பிடவேண்டியது அவசியம். தரை நூல் ஆராய்ச்சியில் பயிற்சியளிக்க பிரிட்டிஷ் சாம்ராஜியத்தில் ஒரு கல்லூரிகூட இல்லை. தரை இயல் சர்வே இலாகாவில் மொத்தம் 70 பேரே வேலை பார்க்கிறார்கள். இந்தியாவில் இந்த இலாகாவில் வேலை செய்வோர் 40 பேர்தான்.

பிரிட்டனில் தரை இயல் ஆராய்ச்சி நடத்தியவர்கள் யுத்த காலத்திற்கு முன் 100 விஞ்ஞானிகள். இப்பொழுது, அதை விடச் சற்று அதிகமாயிருக்கலாம். சோவியத் விஞ்ஞான அகாடமியின் ஆதிக்கத்தில் தரை இயல், உலோக ஆராய்ச்சி ஆகிய இரண்டு துறைகளில் மட்டும் பயிற்சியளிக்கவும், ஆராய்ச்சி நடத்தவும் பல ஸ்தாபனங்களும் கல்லூரிகளும் இருக்கின்றன. உலோக ஆராய்ச்சித் தலைமை ஸ்தாபனத்தில் வேலை செய்வோர் 1000 பேர். தரை இயல் ஆராய்ச்சி ஸ்தாபனத்தில் வேலை செய்வோர் 500 பேர். பலவிடங்களிலும் இத் துறையில் ஆராய்ச்சி நடத்துபவர்கள் பத்தாயிரம் பேர். இத் துறைகளில் செலவாகும் சர்க்கார் பணம் வருஷத்துக்கு 3 கோடியே 80 லட்சம் ரூபிள்கள் (5 கோடி 22 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய்). மார்க்ஸிய ருஷ்யாவைப் போல் நமது இயற்கை செல்வத்தைப் பயன்படுத்தக் கற்றுக்கொண்டோமானால், இந்தியா இவ்வளவு ஏழ்மை நிலையில் இருக்கவேண்டியிராது.

* * * *

உற்பத்திப் பெருக்கிற்கு மின்சாரம்

தேசத்தின் இயற்கை செல்வத்தை நமது தேவைக்கு வேண்டிய செய் பொருள்களாக மாற்ற அடிப்படையான இயந்திர சாதனங்கள் அவசியம். இரும்புச் சுரங்கங்கள், நிலக்கரிச் சுரங்கங்கள், இரும்பை உருக்கி எடுக்கும் உலைகள் முதலியன அத்தியாவசியமான தேவைகள். இவற்றில் உற்பத்தி தொடங்க சக்திவேண்டும். நிலக்கரி, மண்ணெய்ணெய், அல்லது அருவிகள் இவற்றில் சக்திபெறலாம். தொழிற்சாலைகளையும், சுரங்கங்களையும் மின்சாரமயமாக்க வேண்டுமென்று லெனின் விரும்பினார். இதற்கு முன்னால் ஒரு தேசமும் தொழில்களில் மிகுந்த அளவுக்கு மின் சாரத்தை உபயோகித்ததில்லை. லெனினை அச்சமயம்

பேட்டிகண்டு விவாதித்த H. G. வெல்ஸ், "பெருவாரியாக மின்சாரத்தை உபயோகிக்க வேண்டுமென்று லெனின் போட்டிருக்கும் திட்டம் உருப்படுமென்று நான் நம்ப வில்லை. ஏனெனில் ருஷ்யா மிகவும் பிற்போக்கான தேசம். ஆனால் லெனின் இது சாத்தியமாகும் என்று நம்புகிறார்," என்று எழுதியிருக்கிறார்.

லெனின் நினைத்தது இன்று சாத்தியமாகிவிட்டது. நீப்பர் அணை அதற்கு அத்தாட்சி. யுத்தம் குறுக்கிட்டிரா விட்டால் நீப்பர் திட்டத்தைவிடப் பெரிய திட்டங்கள் இதற்குள் உருவாகி முடிந்திருக்கும். ருஷ்யாவின் பெரிய நதிகள் பாசனத்துக்காகவும், மின்சாரம் பெறுவதற்காகவும் உப யோகிக்கப்படுகின்றன.

தரை இயல் ஆராய்ச்சி

சோவியத் தரை இயல் ஆராய்ச்சியாளர்கள் மிகப் பெரிய எண்ணெய்க் கிணறுகளையும், நிலக்கரிச் சுரங்கங் களையும் புதிதாகக் கண்டு பிடித்திருக்கிறார்கள். உதாரண மாக, மத்திய ருஷ்யாவிலுள்ள குஸ்னெட்ஸ் என்னும் பிரதேசத்தில் ஒரு புதிய நிலக்கரிச் சுரங்கத்தைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். அது இன்னும் 300 வருஷங்களுக்கு உலகம் முழுவதுக்கும் தேவையான நிலக்கரி சப்ளைசெய்ய முடியும் என்று மதிப்பிடுகிறார்கள். 'என்னஸி' என்னும் நதியின் குறுக்கே இப்பொழுதுதான் அணைபோடத் தொடங்கி யிருக்கிறார்கள். கட்டி முடிந்தால் உலகத்திலேயே மிகவும் சக்திவாய்ந்த மின்சாரத் திட்டமாக அது விளங்கும். விஞ்ஞானத்திற்குத் தெரிந்த சக்திகளை யெல்லாம் இயற்கை யிலிருந்து எவ்வகையில் பெற்று அடக்கியாள முடியுமோ அவ்வகையில் கையாள ருஷ்யா முயற்சி செய்கிறது.

* * * *

ருஷ்யாவில் இரும்பு—எஃகுத் தொழில் பிரம்மாண்டமான வளர்ச்சியை யடைந்திருக்கிறது. தற்காலத்தை இரும்புக்காலமென்று சொல்வதுண்டு. ஏனெனில், இன்றைய நாகரிக வாழ்க்கைக்கு இரும்பு முதலிய உலோகங்கள் இன்றியமையாதன. சோவியத் தரை இயல் ஆராய்ச்சிக்காரர்கள் 'யூரல்'மலைப் பள்ளத்தாக்குகளில் உலகத்திலேயே முதன்மையானதான ஒரு இரும்புச் சுரங்க மிருப்பதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இன்று அச் சுரங்கத்திலிருந்து இரும்புக் கனியம் எடுக்கப்பட்டு இரும்பாகவும், எஃகாகவும் மாற்றப்படுகிறது.

ருஷ்யாவில் எஃகுத் தொழில் மிக விரைவாக மின்னல் வேகத்தில் வளர்ச்சி யடைந்திருக்கிறது. 1939ம் வருஷம் ஒரே ஒரு தொழிற்சாலையில் மட்டும் உற்பத்தியான "டிராக்டர்" (இயந்திரக் கலப்பை)களின். எண்ணிக்கை 40 ஆயிரம். இங்கிலாந்தில் அதே வருஷம் மொத்தம் கையிருப்பிலிருந்த "ட்ராக்டர்கள்' ஒரு லட்சம்தான். இது தவிர யுத்த தளவாடங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளில், யுத்த காலத்தில் ஏற்பட்டிருக்கும் உற்பத்திப் பெருக்கம் அளவிட முடியாதது. ருஷ்யாவின் சிறந்த இரும்பு, நிலக்கரிச் சுரங்கங்கள் "யுக்ரெய்ன்" பிரதேசத்தில் இருக்கின்றன. அவற்றை ஜெர்மானியர் கைவசமாக்கிக் கொண்டனர். அதன் பின்பும் தளவாடங்களின் மொத்த உற்ப்த்தி முன்னைய வருஷங்களைவிடக் குறையவில்லை.

யந்திர வளர்ச்சி கலை வளர்ச்சியின் தூண்டுகோல்

சோவியத் ருஷ்யா மலிவாகச் சக்தியை உற்பத்தி செய்து தொழில்களில் பயன்படுத்துகிறது. அதோடு நின்றுவிடாமல் எல்லாத் துறைகளிலும் புதிய முறைகளையும், புதிய இயந்திரங்களையும் புகுத்தி வருகிறது. மின்

சார மண்வெட்டிகளின் உதவியால், 15 ஆயிரம் பேர் ஒரு நாளில் செய்யக்கூடிய வேலையை ஒரே யந்திரம் செய்து முடித்து விடுகிறது. இரும்பை வளைப்பது, திருகாணிகள் செய்வது போன்ற வேலைகளைச் செய்ய இயந்திர மனிதர்கள் இருக்கிறார்கள். அவர்களது கண்களுக்கு நேரே நீலமையால் செய்யவேண்டியதை எழுதிவைத்தால் உடனே வேலை முடிந்து விடுகிறது (இம் மனிதர்களுக்கு "ரோபாட்" என்று பெயர்). இவ்வாறு மனிதர்கள் செய்யவேண்டிய வேலைகளையும் இயந்திரங்கள் செய்து விடுவதால் மனித சக்தி விடுதலை பெறுகிறது. அச் சக்தியை நேரடியாகப் போர்முனையில் உபயோகிக்கலாம். இதுபோல விவசாயத் தொழிலில் "ட்ராக்டர்களும்", அறுவடை இயந்திரங்களும் 19 மனிதர்களில் 18 பேர்களை வேறு வேலைகளுக்கு விடுவிக்கின்றன.

"டைம்ஸ்" பத்திரிகையின் ராணுவ நிபுணர் "ருஷ்ய-பின்னிஷ்" போர் முடிவடையும் சமயத்தில், "ருஷ்ய என்ஜினீயர்களுக்குப் புதிய யந்திரங்கள் புனைவதில் அசாத்தியத் திறமை இருக்கிறது" என்று எழுதினார். அது உண்மைதான். அதற்குக் காரணம் என்ன? அவர்கள் புதியது புனையப் பல வசதிகள் இருக்கின்றன. அதோடு ஊக்கமும் அளிக்கப்படுகிறது. மனித உழைப்பைக் குறைக்கும் இயந்திரங்களைச் செய்வதால், தங்களுக்குக் கலைகளையும் கல்வியையும் பயிலும் நேரம் அதிகமாகும் என்பதை உணர்ந்தும், பொதுஜனங்களது நன்மையை உத்தேசித்தும் ருஷ்ய என்ஜினீயர்கள் மேலும் மேலும் புதிய இயந்திரங்களைச் செய்வதில் கண்ணும் கருத்துமாக யிருக்கிறார்கள்.

ருஷ்யாவில் லாபத்துக்காகப் பொருள்கள் உற்பத்தி செய்யப்படவில்லை. மனித வாழ்க்கையை இன்பமயமாக்குவதே பொருளாக்கத்தின் நோக்கம்.

பொதுச் செல்வமும், தனி மனிதனும்

எதிரிகளிடமிருந்து பாதுகாப்பு, ஆரோக்கியமான வாழ்க்கை, நல்ல கல்விப் பயற்சி, கலை அனுபவம் இவை எல்லோருக்கும் பொது. இவை பொதுமக்களனைவருக்கும் கிடைக்கும்படிச் செய்ய மிகுந்த பணம் அவசியம். இச் செல்வை ருஷ்ய அரசாங்கம் தனது முதற்செலவு இனமாகக் கருதுகிறது. உண்மையில் அரசாங்கப் பணம் பொது மக்களுடையதுதான். அதனை அவன் தனது இஷ்டப்படி செலவு செய்ய முடியாது. நாட்டிலுள்ள பெரும்பான்மையோரது விருப்பப்படி, அவர்களது பிரதிநிதிகளால், பொது நன்மைக்தாக அது செலவழிக்கப்படும். இது தவிர, ஒவ்வொரு மனிதனும் தான் செய்யும் வேலைக்கென்று ஊதியம் பெருகிறுன். அதை அவன் இஷ்டம் போல செலவு செய்யலாம். தொழிலில் இருந்து கிடைக்கும் வருஷ லாபத்தில் அவனுக்கு ஒரு பங்கு கிடைக்கும். அதை எப்படிச் செலவு செய்யவேண்டுமென்பதை பெரும்பான்மைத் தொழிலாளர் சேர்ந்து நிர்ணயிக்கவேண்டும்.

இதை விளக்க ஒரு உதாரணம் கொடுப்போம். சோவியத் குடியரசு தனது அடிப்படைத் தொழில்களைத் தானே நடத்தி வருகிறது. அதற்கு வேண்டிய முதல் மக்களுடையதுதான், இம்முதல் வருஷா வருஷம் அதிகமாகிக் கொண்டே வருகிறது. முதல் ஐந்து வருஷத் திட்டத்தின் போது, வருஷத்துக்கு 1200 கோடி ரூபிள் வீதம் முதல் அதிகமாகி வந்தது. மூன்ருவது ஐந்து வருஷத்து திட்டத்தின் மூன்ருவது வருஷத்தில் மொத்தம் சேர்ந்திருந்த முதல் 86,000 கோடி ரூபிள் (சுமார் 1,50,500 கோடி ரூபாய்). இந்த மூலதனம் முழுவதும் மக்களுடையது. 1937-ம் வருஷத்தில் ருஷ்யாவிலுள்ள ஒவ்வொருவருக்கும் இப் பொது முதலில் 170 பவுன் பங்குத் தொகை இருந்தது. இப்பங்குத்

தொகை வருஷா வருஷம் அதிகமாகிறது. இந்த முதலுக்காகக் கிடைக்கும் டிவிடென்ட் (லாபத்தில் பங்கு) ஒவ்வொருவருக்கும் வருஷத்துக்கு 60 பவுன். இது கூலி தவிரக் கிடைக்கும் ஊதியம். இது பணமாகக் கொடுக்கப்படுவதில்லை. இப்பணம்தான் இன்று கல்வி, வைத்திய வசதி, தளவாட உற்பத்தி, கலை வளர்ச்சி, இன்னும் இது போன்ற வாழ்க்கை வசதிகளுக்காகச் செலவிடப்படுகிறது. சோவியத் குடிமக்களது வாழ்க்கை வளப்பம் இந்த வரும்படியைத் தான் பொறுத்திருக்கிறது.

இதை யறிந்தே சோவியத் தொழிலாளி தன் வேலையைத் திறமையாகச் செய்து பொது முதலை அதிகமாக்க முயல்கிறான். அவன் சமூகத்துக்காக உழைக்கிறான். அதில் தன் நன்மையும் அடங்கி யிருப்பது அவனுக்குத் தெரியும். "தனக்காகவும், தன் குடும்பத்துக்காகவும் மட்டுமே வேலை செய்கிறேன்" என்ற சுயநல உணர்ச்சி ருஷ்யத் தொழிலாளிக்கு இராது.

* * * *

ருஷ்யாவில் வைத்திய வசதி

மக்களை ஆரோக்கிய நிலையில் வைக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு. ருஷ்யாவில் சிறந்த வைத்திய வசதிகள் இருக்கின்றன. அங்குள்ள வைத்திய இலாகா வியாதியைக் குணப்படுத்துவதைவிடத் தடுக்கும் முறைகளிலேயே அதிகக் கவனம் செலுத்துகிறது. வைத்திய உதவி இலவசமானது. பிறப்பிலிருந்து சாகும் வரை இலவச வைத்திய உதவி பெற ஒவ்வொரு ருஷ்யத் தொழிலாளிக்கும் உரிமையுண்டு. ருஷ்ய வைத்தியர்கள் வியாதிகளின் அடிப் படையான காரணங்களை உணர்ந்து அவற்றைத் தடுக்க முயற்சி செய்கின்றனர். பல ஆராய்ச்சி ஸ்தாபனங்கள் வியாதிகளோடு போராடுவதில் டாக்டர்களோடு

ஒத்துழைக்கின்றன. மனப்போக்குக்குத் தகுந்த வேலை, சரியான ஓய்வு, ஓய்வைச் செலவிட சரியான வசதிகள், ஆரோக்கிய வாழ்வுக்குச் சாதகமா யிருக்கும்படி வேலை நேரம் கூடிய மட்டும் குறைவாகவே நிர்ணயிக்கப்படுகிறது. எல்லோருக்கும் தேகப்பயிற்சி செய்ய வசதியும் ஊக்கமும் அளிக்கப்படுகிறது.

வைத்திய இலாகாவும், சுகாதார இலாகாவும் ஒரு மத்திய ஸ்தாபனத்துக்குட்பட்டு வேலை செய்கின்றன. இவற்றின் வேலை நோய்களோடு போராடி வெற்றிபெற மக்களைத் திரட்டிப் பயிற்சி யளிப்பதே. ருஷ்யாவில் நோய்களை எதிர்த்துப் போராடுபவர்கள் டாக்டர்கள் மட்டுமல்ல. அவர்கள் நோயை எதிர்த்துப் போராடுகிற வீரர்களுக்கு வழி காட்டுபவர்கள்.

அமெரிக்காவின் பிரபல டாக்டரான 'சிஜெரிஸ்ட்' என்பவர் ருஷ்ய வைத்திய இலாகாவைப்பற்றி கீழ் வருமாறு சொல்லுகிறார். "1937ல் அமெரிக்க வைத்திய இலாகாவின் கருவிச் சாதனங்கள் ருஷ்யாவைவிடச் சிறந்ததாயிருப்பினும், திறமையிலும் சேவையிலும் ருஷ்யாவை மிஞ்சாது."

1940ல் பிரிட்டனில் 1000 மக்களுக்கு ஒரு டாக்டர் இருந்தார். ருஷ்யாவிலும் அதே விகிதம் தான். ஆனால் 1941 ருஷ்யா பிரிட்டனை மிஞ்சிவிட்டது. அந்த வருஷம் பட்டம் பெற்று டாக்டர்களான மாணவர்களின் தொகை 17 ஆயிரம். இவ்வருஷம் (1944)ல் பட்டம் பெற்றவர்களின் தொகை 25 ஆயிரம். இதை இந்தியாவோடு ஒப்பிட்டால் எட்டு மடங்குக்கு மேலாகும். 1941ல் டாக்டர்களின் எண்ணிக்கை 42 ஆயிரம். அவர்களில் 211 பேர்தான் கிராமங்களில் வேலை செய்கிறார்கள். இது ஏறக்குறைய இலட்சத்துக்கு ஒரு டாக்டர் விகிதம் ஆகிறது. அங்கு எல்லோரும்

கல்விமான்கள். ஆனால் நம் நாட்டிலோ கல்வியும் அரசாங்கப் பொறுப்பில் தானிருக்கிறது. மனிதனது ஆத்மீக சக்திகளின் வளர்ச்சிக்கு கல்வி தான் உரமிட்டு நீர் பாய்ச்சுகிறது. அது எல்லோருக்கும் பொதுவான தேவை. கல்விக்காகும் செலவு அரசாங்கத்தின் முதல் செலவாக இருக்க வேண்டும். உயர்தரக் கல்வியில் சில அம்சங்களில் தவிர சோவியத் ருஷ்யாவில் கல்வி எல்லா இளைஞர்களுக்கும் இலவசமாகவும் கட்டாயமாகவும் அளிக்கப்படுகிறது.

சோவியத் கல்விமுறை விரிவானது. மார்க்ஸிய அடிப்படையில் கட்டப்பெற்றிருக்கும் சமூகத்தில் வாழ்வதற்குத் தேவையான பயிற்சியை அளிக்கிறது. அம்முறையைக் கூர்ந்து ஆராய்ந்தால், அது சிறுவர்களுக்குப் போர் வெறியை ஊட்டும் ராக்ஷஸப் பயிற்சி என்று சிலர் சொல்லும் குறை எவ்வளவு ஆதாரமற்றது என்பது விளங்கும்.

1919ல் ருஷ்யாவில் எழுத்து வாசனை யுள்ளவர்கள் நூற்றுக்கு 10 பேர் விதமே இருந்தார்கள். பிரிட்டனிலோ 100க்கு 100 பேர்களும் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள். 1919ல் ருஷ்யாவில் பள்ளிகளில் படித்துவந்த சிறுவர்களின் தொகை 78 லட்சம். 1941ல் இவர்களது தொகை 350 லட்சம். ருஷ்யாவில் இன்று எழுதப்படிக்கத் தெரியாதவரே கிடையாது.

இந்தியாவில் 1941ல் பள்ளிகளில் படித்த சிறுவர்களது தொகை 15½ லட்சம். ருஷ்யாவைவிட இந்தியாவின் ஜனத்தொகை இரண்டு மடங்கு. ருஷ்யாவில் உயர்தரக் கல்லூரிகளின் எண்ணிக்கை 716. இவற்றில் கல்வி கற்கும் மாணவர் 70 லட்சம் பேர். இந்தியாவில் உயர்தரக் கல்லூரிகளின் எண்ணிக்கை 325. படிப்போர் தொகை ஒரு லட்சத்து அறுபத்து மூவாயிரம். ருஷ்யாவில் ஜனத்தொகையில் பதினாயிரத்துக்கு 35 பேர் உயர்தரக் கல்வி பயில்

கிறார்கள். இங்கிலாந்தில் பதினாயிரத்துக்கு 13 பேர் கல்லூரி களில் பயில்கிறார்கள். இந்தியாவிலோ இருபத்தையாயிரத் துக்கு ஒருவனே கல்லூரியை எட்டிப் பார்க்கிறான்.

ருஷ்ய அரசாங்கம் 1940-ம் வருஷம் ஒவ்வொரு குழந்தைக்கும் படிப்புக்கென்று 7 பவுன், 2 ஷில்லிங் செல விட்டிருக்கிறது. இங்கிலாந்து இவ்விஷயத்தில் 1 பவுன் செலவிட்டிருக்கிறது. சோவியத் நாட்டில் கல்வித்துறையில் மிகவும் பிற்போக்கான தேசீய இனங்கள் இருக்கின்றன. அவைகளுக்கு கல்விக்காக அதிகப்பணம் ஒதுக்கப்படு கிறது. இமயமலையின் வட சாரலில் வசிக்கும் டர்க்மானி யரது குழந்தை ஒவ்வொன்றுக்கும் கல்வி யளிப்பதற்கு ருஷ்ய அரசாங்கம் 39 பவுன் செலவு செய்கிறது. இதே சமயத்தில் பிரிட்டிஷ் சர்க்கார் ஒவ்வொரு இந்தியக் குழந் தைக்குக் கல்விக்கென்று வருஷத்துக்குச் செலவு செய்வது 1 ஷில்லிங் 6 பென்ஸ்தான். டர்க்மானியரது குழந்தைகளின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்க சோவியத் சுகாதார இலாகா 5 பவுன், 10 ஷில்லிங் வருஷா வருஷம் செலவழிக்கிறது. ஆனால், பிரிட்டன் இந்தியக் குழந்தையின் சுகாதாரத்துக் காகச் செலவு செய்யும் பணம் 1 பென்ஸ்தான். கல்விக் காக ருஷ்யா, இந்திய சர்க்காரைவிட ஒரு குழந்தைக்கு 600 மடங்கு பணம் ஒதுக்குகிறது. ஒரு குழந்தையின் ஆரோக்கிய முன்னேற்றத்துக்கு இந்திய சர்க்கார் செல விடும் பணத்தைவிட ருஷ்யா செலவிடும் பணம் 1,320 மடங்கு அதிகம்.

"சில ஆயிரம் பணக்காரர்களுக்கு உயர்ந்த கல்வி வசதிகள் அளித்துவிட்டு, லட்சக் கணக்கான உழைப்பாளி களது குழந்தைகளைப் புறக்கணித்துவிடுவது மிக எளிது. முதலாளித்துவ நாடுகளின் கல்வி நிலைமை இதுதான். நாங்கள் ருஷ்யாவில் பிறந்த ஒவ்வொரு ஆண் மகனுக்கும்

பெண் மகளுக்கும் கல்வியளிக்கப் பாடுபடுகிறோம்'' என்று இலியா எஹ்ரான்பர்க் என்ற ஆசிரியர் எழுதுகிறார்.

சோவியத் கல்விப் பயிற்சியின் தன்மை மிகவும் சிறந்தது. ''உயர்ந்த கல்வியை எல்லோருக்கும் அளிக்க வேண்டியது பொதுவுடமை சமூகத்தின் பொறுப்பு'' என்று லெனின் கருதினார். அக்கொள்கை இன்று ருஷ்யக் கல்வித் திட்டத்தில் நனவாகியிருக்கிறது.

குழந்தைகளுக்குக் கல்வி

ஒரு தேசம் குழந்தைகளை எவ்வாறு பராமரிக்கிறது என்பதைக் கவனித்து அதன் நாகரிகத்தை அளவிடலாம். அந்நாடு குழந்தைகளின் உடல் வளர்ச்சி, மனோ வளர்ச்சி, உணர்ச்சிப் பண்பாடு இவற்றைக் கவனித்துக் கல்வியளிக்கிறதா? எல்லா தேசீய இனங்களைச் சேர்ந்த குழந்தைகளையும் ஒன்றுபோலப் பாவிக்கிறதா? உயர்ந்த லட்சியங்களைப் போதித்து குழந்தைகளின் உணர்ச்சிகளையும், சக்திகளையும் ஆக்க வேலைகளில் ஈடுபடுத்துகிறதா? இவைகளை நடைமுறையில் கவனித்துப் பயிற்சி யளிக்கும் தேசம் நிச்சயமாக நாகரிக தேசம் என்று சொல்வதில் தடையென்ன?

சோவியத் மேற்கண்ட கொள்கைகளைக் கடைப்பிடித்து நடக்கிறது. குழந்தைகளுக்கு ஒரு தனி மதிப்பு ருஷ்யாவில் உண்டு. ''குழந்தைகள் நம் வருங்கால வாழ்வின் நம்பிக்கை'' என்று லெனின் அடிக்கடி சொல்வதுண்டு. குழந்தைகளுடைய பூரண வளர்ச்சிக்குக் கல்வி முறை வசதி யளிக்கிறது. இதுவே நாட்டின் நலத்துக்கும் உகந்ததாகிறது. பிறக்கு முன்பே ருஷ்ய அரசாங்கம் குழந்தையை சிரத்தையோடு கவனிக்கத் தொடங்குகிறது: கர்ப்பவதியான பெண்கள் நிறைமாதம் முழுவதும் சம்ப

லத்தோடு ஓய்வு அளிக்கப்படுகிறுர்கள். மேலும் பேறு காலம் ஆன பின்பும் ஒரு மாதத்துக்கு விடுமுறை அளிக்கப்படுகிறது. குழந்தை பிறந்ததிலிருந்து அதற்கு பத்து மாதம் நிரம்பும் வரைக்கும் வாரம் ஒரு முறை தாயையும் குழந்தையையும் டாக்டர் பரிட்சிக்கிறுர். குழந்தைக்குத் தேவையான பிரத்தியேகமான உணவு, மருந்து இவையெல்லாம் (தாய் தந்தையர்களிடம் பணமில்லாவிட்டால்) அரசாங்கமே கொடுத்து உதவுகிறது. குழந்தை பெற்றேருக்கு மட்டும் சொந்தமானது அல்ல. அது சமூகத்தின் பொதுச் சொத்து. ஆகையால் அரசாங்கம் அதன் வளர்ச்சியில் சிரத்தை காட்டவேண்டும் என்பது சோவியத் அரசாங்கத்தின் கொள்கை.

கைக் குழந்தைகளுக்கும், பள்ளிக்குச் செல்ல வயதாகாத குழந்தைகளுக்கும் தனிப் பயிற்சிசாலைகள் இருக்கின்றன. இவை தாய் தந்தையரிடமிருந்து குழந்தைகளைப் பிரிக்கும் நோக்கத்தோடு ஏற்படுத்தப்படவில்லை. சில மணி நேரம் மற்ற குழந்தைகளோடு பழகவும், விளையாடவும் இங்கே பயிற்சி கொடுக்கப்படுகிறது. குழந்தைகள் நல்ல பழக்கங்களைப் பெற இது தகுதியான இடம். தாயாருக்கும், எப்பொழுது பார்த்தாலும் குழந்தையைப்பற்றிய கவலையிராது. மற்ற குழந்தைகளோடு ஆசிரியர்களது கண்காணிப்பில் பழகி நல்ல பழக்கங்களைக் கைக்கொள்ளுவது குடும்பத்துக்கு எவ்வளவு நன்மை? அதோடு தாய் தந்தையரது சிரமத்தை இப்பயிற்சி சாலைகள் எவ்வளவுக்கு குறைத்து விடுகின்றன?

சோவியத் கல்வி முறையின் நன்மை, வருங்கால சோவியத் சமூகம் எவ்வாறிருக்கும் என்பதை ஒருவாறு சூசகமாகக் காட்டுகிறது. இளவயதிலிருந்து சுயமுயற்சி வெகுவாகத் தூண்டப்படுகிறது. அதோடு கூட்டாகப்

பொறுப்பை வகிக்கவும் தூண்டுதல் அளிக்கப்படுகிறது. குழந்தைகள் தானாகச் செய்துகொள்ளக்கூடிய எந்த காரியத்தையும், ஆசிரியர்கள் அவர்களுக்காகச் செய்து கொடுப்பதில்லை. இது குழந்தைகள் சுயமாக முயற்சி செய்ய ஊக்கம் உண்டாக்குகிறது. குழந்தைகள் விளையாடுவதற்காக நாலைந்து குழந்தைகள் சேர்ந்தால் மட்டும் நகர்த்தக்கூடிய விளையாட்டு சாமான்களைப் பள்ளிகளில் வைத்திருக்கிறார்கள். இது கூட்டுறவையும் பொதுவாகப் பொறுப்பு வகிக்கும் ஆசையையும் தூண்டுகிறது.

ஆசிரியர்—மாணக்கர் உறவு

பள்ளிகளில் அடிதடி எதுவுமில்லாமல் கட்டுப்பாடும் ஒழுங்குமுறையும் உண்டாக்கப்படுகின்றன. அடிப்பது ருஷ்யாவில் சட்ட விரோதமானது. தன்னடக்கமே பள்ளிகளில் இலட்சியமாகக் கருதப்படுகிறது. சோவியத் ஆசிரியர்கள், தங்களது மாணவர்களோடு தோழர்களாகவே பழகுகிறார்கள். அதனால் மாணவர்கள் அவர்களை உள்ளன்போடு நேசிக்கிறார்கள். தங்கள் ஆசிரியர்களிடம் தங்களது கஷ்டங்களையும் பிரச்சினைகளையும் வெளிப்படையாகச் சொல்லி, அவைகளைத் தீர்க்க வழி காட்டுமாறு வேண்டுகிறார்கள். பரஸ்பர அன்பின் மூலம் மாணவர்கள் தங்களது பண்பாட்டையும், அறிவையும் வளர்த்துக்கொள்கிறார்கள்.

சுயநலத்தை அடிப்படையாகக்கொண்ட போட்டியை சோவியத் ஆசிரியர்கள் கூடிய மட்டும் தடுக்க முயற்சிக்கிறார்கள். வகுப்புகளில் முதலாவது, இரண்டாவது, மூன்றாவது என்று மாணவர்களை வரிசைப்படுத்துவதில்லை. "மிக நன்று", "சுமார்", "மோசம்" என்றே பரீட்சைகளிலும், வகுப்புப் பயிற்சிகளிலும் மார்க்குகள் கொடுக்கிறார்கள். வகுப்பு முழுவதிலும் உயர்ந்த அம்சங்கள் இருப்பதைப் பொறுத்து அவ்வகுப்பின் தரம் நிர்ணயிக்கப்படும்.

தனிப்போட்டி ஒழிந்து விடுவதால், புத்திக் கூர்மையான மாணவர்கள் நடுத்தர மாணவர்களுக்கு உதவி செய்து அவர்களது அம்சங்களை உயர்த்தப் பாடுபடுகிறார்கள். இதனால் ஒரு வகுப்புக்கும் மற்றொரு வகுப்புக்கும் போட்டி ஏற்படுகிறது. இப்போட்டி அன்பையும் முன்னேற்றத்தையும் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது.

ஆசிரியர்கள் பெற்றோர்களை, கல்விச்சாலைகளுக்கு அழைக்கிறார்கள். பலதுறைகளில் அவர்களது ஒத்துழைப்பைப் பெற முயல்கிறார்கள். இது நடைமுறையில் எவ்வாறு பயன்படுகிறது என்பதைக் குறிக்க ஒரு உதாரணம் காட்டுவோம். ஒரு பையன் பள்ளிக்கூடத்துக்கு ஒழுங்காக வரவில்லை. அப்பள்ளித் தலைவர் அவனுடைய தகப்பனுக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் அவர் தமது பையனை அடிக்கடி வந்து பார்க்கவேண்டுமென்றும், அவன் பள்ளிக்கூடத்துக்கு ஒழுங்காக வருகிறானா என்று கவனிக்கவேண்டுமென்றும் எழுதினார். மேலும், "உங்கள் பையன் விஷயத்தில் நீங்கள் சிரத்தையெடுத்துக்கொள்ளாவிடில், இந்த முக்கியமான கடமைக்கு கொஞ்ச நேரம் ஒதுக்கும்படி உங்கள் தொழிற்சங்க நிர்வாகிகளை நாங்கள் கேட்டுக்கொள்ளுவோம்" என்று எழுதினார்.

சோவியத் கல்விச்சாலைகளைப்பற்றி ஸ்ரீமதி 'பீட்ரிஸ் கிங்', ஸ்ரீ பாட்ஸ் லோன் ஆகிய ஆசிரியர்கள் அழகிய சித்திரங்கள் தீட்டியிருக்கிறார்கள்: அவைகளிலிருந்து உண்மையான கிறிஸ்துவ மதம் ருஷ்யப் பள்ளிகளில்தான் அனுஷ்டானத்திலிருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. குழந்தைகளது வளர்ச்சியில் உண்மையான சிரத்தை அரசாங்கத்துக்கு இருக்கிறது. நற்பணியில் இன்பம் காணும் பயிற்சி சிறுவர்களுக்கு அளிக்கப்படுகிறது. ஹிம்ஸை வேரறுக்கப் பட்டுவிட்டது. அன்பு முறையில் தன்னடக்கமும், கட்டுப்பாடும் வலியுறுத்தப்படுகின்றன.

சோவியத் ஆசிரியர்களது கொள்கையென்ன என்பதை ஒரு கல்விச்சாலையின் தலைவர் கீழ்வருமாறு சொல்லியிருக்கிறார்:

"சின்னஞ்சிறு அராஜகர்களை உற்பத்தி செய்வது எங்கள் தொழில் அல்ல. பாடங்களை மட்டும் சொல்லிக் கொடுப்பதோடு நின்றுவிடாமல் நாங்கள் நல்ல பழக்கங்களை ஏற்படுத்த முயல்கிறோம். சிறுவர்களுக்கு பாடங்களில் கவனம் இருக்கவேண்டியதுதான். அதைவிட முக்கியமானது, ஆசிரியர்களோடும் தோழர்களோடும் எப்படி மரியாதையாகவும், அன்போடும் பழகவேண்டும் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டியது. "நாம் ஏன் படிக்கிறோம்" என்பது நமது சிறுவர்களுக்குத் தெரிந்தபோதிலும், அவர்கள் குழந்தைகளாதலால் அதை மறந்துவிடக் கூடும். ஆகவே நாம் அடிக்கடி அதை ஞாபகமூட்டி அவர்களுக்கு வழிகாட்ட வேண்டும்."

* * *

பொறுப்பை உணர்த்தும் கல்வி

சமூகப் பொறுப்பை உணர்ந்து வாழ்வதற்கு ஏற்ற பயிற்சியை அளிப்பதே சோவியத் கல்வி முறையின் நோக்கம். நம் நாட்டில் படிப்பிற்கும் தொழிலுக்கும் இணைக்கமுடியாத பெரிய பிளவு இருக்கிறது. படித்தவன் தொழிலை வெறுக்கிறான். தொழிலாளிக்குப் படிப்பில்லை. ருஷ்யாவில் படிப்போடு சேர்த்து உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்யவும் கற்றுக் கொடுக்கிறார்கள். படிக்கும் போதே தொழிலுக்கும் சமூக வளர்ச்சிக்கும் உள்ள தொடர்பை சிறுவர்களது மனதில் பதிய வைக்கிறார்கள்.

தொழிற் பயிற்சியில் தொழிலும், அதற்குத் தேவையான விஞ்ஞான அறிவும் கற்பிக்கப்படுகிறது. அதோடு

யில்லாமல் அத்தொழில் முன்னேற்றத்தால் சமூகம் எவ்வாறு முன்னேறும், வாழ்க்கைத் தரம் எவ்வாறு உயரும் என்பதும் சுட்டிக் காட்டப்படுகிறது. உதாரணமாக, சோவியத் ரசாயன_சாஸ்திரிகள் ஒருவாசனைச் சாமான், வெடிமருந்து, அல்லது விஷப்பொருள் தயாரிக்கப் பயிற்சி பெறுகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அவைகளைச்செய்யும் முறைகளையும், அதற்கு அடிப்படையான ரசாயன அறிவையும் அவர்களுக்குக் கற்பிப்பதோடு இப் பொருள்களின் உற்பத்தியால் சமூகத்துக்கு ஏற்படும் நன்மை தீமைகளும், அவைகளைப் பயன்பெற உபயோகிக்கும் வழிகளும் கற்பிக்கப்படும்.

குழந்தைகளது திறமைகள் அனைத்தையும் வளர்ப்பதற்கு வேண்டிய வசதிகளைக் கல்வி இலாகா செய்து கொடுக்கிறது. இதற்கென்று தனியான மாலைப் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. அவைகளுக்கு பாலர் மாளிகைகள் என்று பெயர் இங்கே. நாடக சபைகள், .இலக்கியக் கழகங்கள், விஞ்ஞான ஆராய்ச்சி சங்கங்கள், சங்கீத சபைகள், விளையாட்டு சங்கங்கள் ஆகிய பல ஸ்தாபனங்கள் இருக்கின்றன. குழந்தைகளுக்கு எதில் திறமை யிருக்கிறதோ அந்தத் துறையில் முன் வருவதற்கு இச்சங்கங்கள் உதவி செய்யும். இயற்கைப் பொருள்களில் ஆர்வமிருந்தால், மீன் காட்சி சாலை அல்லது மிருகக் காட்சி சாலைக்குச் சென்று அவற்றின் செய்கைகளைப்பற்றி நேரடியாகக் கற்கலாம். ரேடியோ, ஏரோப்ளேன்கள், கப்பல்கள் முதலியவற்றைச் செய்வதற்கும், பாலர் மாளிகையில் பொருள்கள் கிடைக்கும்.

குழந்தைகள் தங்கள் திறமையை உணர்வதற்கும், அதனை வளர்ப்பதற்கும் இம் மாளிகைகள் உதவி செய்கின்றன. இந்த விபரங்களை அறிந்து கொண்ட பின், 1937ம் வருஷத்தில் 'வார்ஸா'வில் நடந்த அகில தேச

சங்கீதப் போட்டியில் முதல் இரண்டு பரிசுகளையும் ருஷ்யக் குழந்தைகள் பெற்றதும், 'பிரஸ்ஸல்ஸ்' நகரில் நடந்த 'வயலின்' போட்டியில் முதல் ஐந்து பரிசுகளை அவர்கள் பெற்றதும் ஆச்சரியமாகத் தோன்றுது.

லயன் ப்யூட்ச் வாங்கேர் என்ற நிபுணர், "சோவியத் வாலிபனுடைய சக்தியும், மகிழ்வும் எனக்கு என்னை யறியாமலே ஆச்சரிய முண்டாக்குகிறது" என்று சொல்வதில் ஆச்சரியமில்லை.

ருஷ்யாவில் வயது வந்த சிறுவர்களுக்கு "வேலை கிடைக்காதோ" என்ற கவலை யில்லை. ஒவ்வொரு தொழிலுக்கும் ஆட்கள் தேவையா யிருக்கிறது. ஏதாவது ஒரு தொழிலில் ஆள் பஞ்சம் ஏற்பட்டால் அதற்கு சிறப்பான வசதிகள் ஏற்படுத்தி ஆட்களை இழுக்கிறர்கள். ஆனல் பொதுவாக மனதுக்குப் பிடித்த வேலையில் சேர எல்லோருக்கும் உரிமையுண்டு. சிறுவர் மாளிகைகள், மனதுக்குப் பிடித்த வேலை எது என்பதை அறிய குழந்தைகளுக்கும் அரசாங்கத்துக்கும் உதவியளிக்கிறது.

பெரிய நகரங்களில் வாழும் சிறுவர்கள் அனைவரும் பதினெட்டு வயதுவரை கல்வி கற்கிறர்கள்.

கல்வியும் அறிவும் பெருகிவிட்டபடியால், ஒரு புதிய விழிப்பும் ஆர்வமும் தேசமெங்கும் தோன்றி யிருக்கிறது. இது தேசிய வாழ்க்கையின் பல துறைகளிலும் காணப்படுகிறது. தொழிற்சாலைகள், நாடக அரங்கம், இலக்கியம், விஞ்ஞானம் ஆகியவற்றில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றத்துக்கு இவைதான் காரணம். இங்கிலாந்திலிருந்து 1934ல் ருஷ்யாவில் இயந்திர நிபுணராக வேலை பார்க்கச் சென்ற 'டஸ்டின்' என்பவர் தனது தொழிற்சாலையில் வேலை செய்யச் சேரும் இளைஞர்களைப்பற்றி, "ருஷ்ய இளைஞர்கள் வேலையில் உற்சாகமுள்ளவர்கள். கஷ்டமான வேலைகளைச்

செய்வதில் ஊக்கமும், திறமையும் உடையவர்கள்'' என்று சொல்லுகிறார்.

* * * *

இங்கும் அங்கும்

''ஆண்டை, அடிமையென்ற வேற்றுமைகளுள்ள தேசங்களில் எல்லோருக்கும் சமமான வாய்ப்புகள் கிடைப்பதில்லை. ஆனால் ருஷ்யாவில் வகுப்பு வேற்றுமையில்லாததால் மக்களனைவருக்கும் சமவசதிகள் கிடைக்கின்றன. ஒவ்வொருவனும் தனது தனிப்பண்பைப் பூரணமாக வளர்த்துக் கொள்ளுகிறான். சோவியத் ருஷ்யாவில் மனிதர்களது தனிப்பண்புக்கு எவ்வளவு மதிப்புக் கொடுக்கிறார்கள் என்பதை நான் ஆச்சரியத்தோடு கவனித்தேன். ருஷ்ய மக்கள் மட்டுமே தனிப் பண்பைப் போற்றி அதன் மூலம் இளமையின் வேகத்தைப் பூரணமாக உபயோகிக்கிறார்கள். பொது நன்மையில் ஒவ்வொருவனுக்கும் சிரத்தையிருப்பதால், அதை ஒரு கௌரவம் வாய்ந்த பொறுப்பாகவும் கடமையாகவும் நினைக்கிறான்.

ருஷ்யாவில் மக்கள் தங்களது மதிப்பை உணருகிறார்கள். இது குழந்தைப் பருவத்தில் அளிக்கப்படும் கல்வியினால் ஏற்படுவது. வாழ்க்கையில் எந்தத் துறையிலிருந்த போதிலும், அவன் சுயமதிப்பையும் பொதுநல உணர்ச்சியையும் கை விடுவதில்லை.

முதலாளித்துவ நாடுகளில் பள்ளிக்கூடத்தின் சூழ்நிலைக்கும், தொழிற்சாலை அல்லது காரியாலயத்தின் சூழ்நிலைக்கும் ஒரு பெரிய முரண்பாடு காணப்படும். பள்ளிக்கூடத்தில், ஆசிரியர்கள் அவனை ஒரு குழந்தையாகவும், வருங்காலப் பிரஜையாகவும் நோக்கி அவனுக்குக் கல்வி புகட்டுகிறார்கள். கூடியமட்டும் நல்ல பழக்கங்களையும், உயர்ந்த உணர்ச்சிகளையும் அவனுக்கு ஏற்படுத்த முயற்சி

செய்கிறார்கள். அவன் ஒரு காரியாலயத்திலோ, தொழிற் சாலையிலோ வேலைக்குப் போகும்போது அவன் நிலை என்ன? அவனை முதலாளி தனக்கு பணம் சேர்த்துக் கொடுக்கும் கருவியாக எண்ணுகிறான். உயர்ந்த லட்சியங் களுக்கு அங்கே இடமில்லை. முதலாளியின் சுயநலம் பள்ளிப்பாடங்களை பறக்கடித்துவிட்டு, இளைஞனது மனதில் சுயநலத்தையும் பொறாமையையும் புகுத்துகிறது.

ஒரு சோவியத் தொழிற்சாலையில் வேலை செய்யச் சேரும் இளைஞனது நிலைமை இதற்கு முற்றிலும் மாறானது. பள்ளியின் சூழ் நிலைக்கும், அவனது வேலையின் சூழ் நிலைக்கும் அதிக வித்தியாசம் இல்லை. ருஷ்யாவில் தொழிற் சாலையும் உண்மையில் ஒரு கல்விச்சாலைதான். அங்கே நூல் நிலையங்கள் இருக்கின்றன. கலை அபிவிருத்திக்கேற்ற வசதிகள் இருக்கின்றன. தொழிலாளரது உடல் நலத்தைக் கவனிப்பதற்கு வைத்திய இலாகா இருக்கிறது. உடல் நலமில்லாவிட்டால் வேலை போய்விடுமே என்கிற பயம் சோவியத் தொழிலாளிக்கு இல்லை. சோவியத்தில் பணமும், பொருளும்பத்தியும் முக்கியமானவை யல்ல.

உரிமைச் சாஸனம்

சோவியத் உரிமைச் சாஸனம் என்னும் பத்திரம், கீழ்க் கண்ட உரிமைகளை சோவியத் குடிமக்கள் எல்லோருக்கும் வழங்குகிறது:

(1) வேலை செய்யும் உரிமை—வேலை இல்லை என்ற கஷ்டம் ருஷ்யாவில் கிடையாது. எவரும் மனதுக்குப் பிடித்த வேலையை மேற்கொள்ளலாம். அவ்வேலையைத் திறமையாகச் செய்ய ஊக்கமும் பயிற்சியும் அளிக்கப்படு கிறது.

(2) ஓய்வும், ஒழிவும் பெறும் உரிமை-யுத்தம் தொடங்கு

முன் ருஷ்யத் தொழிற் சாலைகளில் வேலை நேரம் ஏழு மணியாக விருந்தது. உடலுழைப்பைக் குறைத்து எல்லோருக்கும் கலை வசதிகளை யளிக்கவேண்டும் என்பது ருஷ்ய அரசாங்கத்தின் கொள்கை. விவசாயத் துறையில் விஞ்ஞானத்தின் உதவியும் 19-க்கு 18 பேர்களை விடுவிக்க முடிகிறது. இவ்விடுதலை வேலையின்மைக்குக் காரணமாகாது. ஆனால் எல்லோருக்கும் ஓய்வை சம பங்காகச் செய்யும். ருஷ்யாவில் எல்லாத் தொழிலாளருக்கும் சம்பளத்தோடு விடுமுறை கிடைக்கிறது. இவ்விடுமுறைகளில் ஓய்வு விடுதிகளுக்குச் சென்று தங்கள் உடல் நலத்தைக் கவனிக்க வசதிகள் இருக்கின்றன.

(3) கல்வி பெறும் உரிமை—இதைப்பற்றி முன்னமேயே விரிவாக எழுதியுள்ளோம். ஒவ்வொரு ருஷ்யனுக்கும் அரசாங்கச் செலவில் தன் விருப்பத்துக்கேற்ப ல்விப்க பயிற்சி பெற உரிமை இருக்கிறது.

(4) வயோதிக காலத்திலும், வியாதி யுற்றிருக்கும் காலத்திலும் அரசாங்கத்திலிருந்து பாதுகாப்பு பெறும் உரிமை.

இவற்றைத் தவிர, சகல மதத்தினருக்கும் தங்கள் இஷ்டப்படி பிரார்த்தனைகள் நடத்த சுதந்திரம் உண்டு. 16 வயதுக்குக் குறைந்த சிறுவர்களுக்கு மதபோதனை செய்யக் கூடாதென்ற தடை இன்னும் அமுலிலிருக்கிறது. இதற்கு முக்கிய காரணம் மதபோதனை என்ற பெயரால் மதக் குருமார்கள் சோவியத் அரசாங்கத்துக்கு எதிர்ப்பிரசாரம் நடத்திவந்தது தான். இத்தடை இப்பொழுது சிறிதளவு தளர்த்தப்பட்டிருக்கின்றது.

பேச்சு சுதந்திரம், அச்சு சுதந்திரம், கூடும் சுதந்திரம் ஆகியவை, இப்பொழுது விரிவடைந்து வருகின்றன. 1936-ம் வருஷத்திய ஸ்டாலின் அரசியல் அமைப்புச்சட்டம்

இச்சுதந்திரங்களை அடிப்படையாகக் கொண்டது. அது ஏட்டோடு நில்லாமல், இன்று நடைமுறையிலும் வந்து விட்டது.

*   *   *   *

பெண்ணுரிமை

சோவியத்தில் பெண்களுக்கு மேற்சொன்ன எல்லா சுதந்திரங்களும் உண்டு. சட்டத்தின் முன்னிலையிலும், கல்வி பெறும் உரிமையிலும், வாக்குரிமை, வேலை செய்யும் உரிமை ஆகிய யாவற்றிலும் இருவரும் சரிசமானமானவர்களே.

குடும்பத்தில் பெண்களுக்குச் சுதந்திரம் உண்டு. அவர்களுக்கிருக்கும் பொருளாதார சுதந்திரமே இதற்கு காரணம். அவர்களுக்கு வேலை செய்யும் சுதந்திரம் இருக்கிறது. அவசியமில்லாத வேலைகளைக் குறைப்பதற்காகக் கூட்டுறவு போஜன சாலைகள், கூட்டுறவு சலவைச் சாலைகள், கிண்டர்கார்டன்கள் முதலிய ஸ்தாபனங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. பிரசவகால விடுமுறைக்குப்பின், முன்னிருந்த சம பலத்திலேயே மறுபடியும் பெண்களுக்கு தொழிற்சாலைகள் வேலை கொடுக்கின்றன.

ஒரு பெண் கலியாணம் செய்துகொள்ள இஷ்டப்படாவிட்டால் கன்னியாகவே இருக்கலாம். தன் வாழ்க்கையை நடத்துவதற்குதான் அவள் சம்பாதித்துக் கொள்ளலாமே! இந்தியாவில் இது முடியாது.

சோவியத் பொது வாழ்வில் பெண்கள் ஈடுபடாத துறையே கிடையாது. 168 நிர்வாக உத்தியோகங்களில் பெண்கள் வேலை பார்க்கிறார்கள். உயர்தரக் கல்வி கற்கும் மாணவர்களில் 43 சத விகிதம் பெண்களிருக்கிறார்கள். அடுப்பு ஊதிதான் சோறு தின்ன வேண்டும் என்ற கட்டுப்பாடு ருஷ்யப் பெண்ணுக்கு இல்லை.

பெண்களது கஷ்ட நஷ்டங்களை நன்கு உணர்ந்த கார்ல் மார்க்ஸ், அவர்களது விடுதலையைக் குறித்து கீழ்க் கண்டவாறு எழுதியிருக்கிறார்: "பெண்களுக்கு ஆண்களோடு சம உரிமைகள் அளிக்கப்படாதவரை, எந்த தேசத்திலும் ஜனநாயகமோ, பொதுவுடைமையோ உருப்பட முடியாது" இதை ஒப்புக்கொண்டு லெனினும் ஸ்டாலினும், ஸ்டாலின் அரசியல் திட்டத்தின் 122-வது விதியைப் பின் வருமாறு அமைத்தார்கள்: "சோவியத் ருஷ்யாவிலுள்ள பெண்களுக்குப் பொதுவாழ்வின் எல்லாத் துறைகளிலும் (அதாவது பொருளாதாரம், கல்வி, கலை, அரசியல் ஆகிய எல்லாத் துறைகளிலும்) ஆண்களுக்கு நிகரான உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இந்த உரிமைகளைப் பெற அவர்களுக்கு வேலைக்கேற்ற கூலி பெறவும், கல்வி வசதி பெறவும், ஓய்வு பெறவும் ஏற்பாடுகள் செய்யப்படும். அவர்களது நலன்களையும், குழந்தைகளது நலன்களையும் பாதுகாப்பதற்குப் பிரசவ ஆஸ்பத்திரிகள், குழந்தை வளர்ப்புச் சாலைகள், கிண்டர்கார்ட்டன்கள் முதலியவைகள் நாடு முழுவதும் ஸ்தாபிக்கப்படும்."

புரட்சிப் போரின் போது ருஷ்ய மாதர்கள் விடுதலை பெற்றனர். இப்போரின்போது அவ்விடுதலையால் ருஷ்யா அடைந்திருக்கும் மகத்தான முன்னேற்றத்தை உலகம் காண்கிறது. குடும்ப வாழ்க்கையில் இன்று ஆணுக்கும், பெண்ணுக்கும் கவர்ச்சியிருக்கிறது. அன்பும் சத்தியமும் இன்று இல்வாழ்க்கையைப் புனிதமாக்குகின்றன. சௌகரியத்துக்குத் தேவையான பல பொருள்களும், பண்பாட்டுக்கு அவசியமான கலை அனுபவங்களும் குடும்ப வாழ்க்கையை இன்பமயமாகச் செய்கின்றன. இன்று தாய்நாட்டின் பாதுகாப்புக்காக ஆண் மக்களனைவரும் போரில் ஈடுபட்டிருக்கின்றனர். பெண் மக்கள் அவர்களுக்குத் துணையாக நின்று, தங்கள் கணவர்கள், சகோதரர்கள், குமார

கள் ஆகியோர் செய்துவந்த தொழில்களைத் திறமையாக செய்து வருகின்றனர். அவர்கள் ஈடுபடாத வாழ்க்கைத் துறை யெதுவும் இல்லை. ஈடுபட்டவற்றில் வெற்றியடை யாதது எதுவுமில்லை.

* * * *

சுதந்திர தேசிய இனங்கள்

சோவியத் ருஷ்யா ஒரு ஏகாதிபத்தியமல்ல. சம பங்காளிகளாகச் சேர்ந்திருக்கும் பல நாடுகளின் ஐக்கியக் குடியரசு. 1918-ஆம் வருஷம் ஸ்டாலின் ருஷ்யாவிலுள்ள எல்லா தேசிய இனங்களுக்கும் சுதந்திரம் வழங்கத் திட்டம் தயாரித்தார். சமதர்ம அரசியல் சட்டம் எல்லா தேசிய இனங்களுக்கும் பூரண சுதந்திரம் அளிக்கிறது. மத்திய அரசாங்கத்தில் எல்லா தேசிய இனங்களுக்கும் பிரதிநிதித்துவம் உண்டு. மாகாணங்களுக்குள் பொருளாதார சுதந்திரமும், பாஷா சுதந்திரமும் உண்டு.

முதன் முதலில் பொருளாதாரத் துறையில்தான் சீர்திருத்தம் தொடங்கிற்று. எல்லா தேசிய இனங்களுக்கும் தேவையான செல்வம் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்பட்டது. அதன் மூலம் அவர்களது கல்வி நிலையும் பண்பாடும் உயர்ந்தது. கல்வியிலும் நாகரிகத்திலும் கீழ்த்தரமாக இருந்த தேசிய இனங்களிடையே பல தொழிற்சாலைகள் ஸ்தாபிக்கப்பட்டன. "கீழ்த்தரமாக இருந்தது அவர்களது முயற்சிக் குறைவினால் அல்ல. அவர்களை மூலப் பொருள்கள் தரும் ஊற்றுகளாகவே ஜார் ஆட்சி பாவித்து வந்தது" என்று லெனின் எழுதுகிறார்.

தேசிய இனங்களின் விடுதலை தேசிய ஒற்றுமைக்கு பலமான அஸ்திவாரமாயிற்று. யுக்ரெய்ன், எதிரியின் கை வசமானபோது இயந்திரங்களெல்லாம் புரட்சிக்குப் பின்

சுதந்திரம் பெற்ற நாடுகளுக்குக் கொண்டு வரப்பட்டன. முன்பெல்லாம் கல்விப் பயிற்சியும், தொழிற் பயிற்சியும் இல்லாதிருந்த தேசிய இனங்கள், இன்று இயந்திரங்களை ஓட்டவும், பொருளுற்பத்தியைத் தொடர்ந்து நடத்தி முன்னணிகளுக்கு ஸப்ளை அனுப்பவும் திறமை படைத்தவைகளாக இருக்கின்றன. யுத்தத்தின்போது சுதந்திரம் வேண்டும் என்று கிளர்ச்சி செய்யும் தேசிய இனம் ஒன்றுகூட ருஷ்யாவில் இல்லை.

* * * *

கவலைகள் மறைந்தன ; கலைகள் மலர்ந்தன

முதலாளி வர்க்கமும், சுரண்டலும் ருஷ்யாவில் மறைந்துவிட்டன. அவற்றோடு, வேலையின்மையும் வறுமையும் போய்விட்டன. ருஷ்ய சமூகம் செல்வமும், வலிமையும் மிகுந்ததாக வளர்ந்து வருகிறது. இப்புதிய வளர்ச்சியும் வருங்காலத்தில் நம்பிக்கையும், அதன் கலையிலும் இலக்கியத்திலும் பிரதிபலிக்கின்றன.

மேல்நாட்டு நாகரிகம் ருஷ்யாவில் விரைவாகப் பரவுகிறது. செல்வமும், ஓய்வும் பொதுமக்களது வாழ்க்கையை வளப்படுத்துகின்றன. சுயலாபம் ஒழிந்துவிட்டபடியால், செல்வம் ஓரிடத்தில் குவியாமல் பொதுமக்களது நன்மைக்குப் பயன்படுகிறது. கவலையும், துன்பமும் குறைவதால் பொதுமக்களது பண்பாடு உயர்கிறது.

ருஷ்யாவின் பண்பாடு அலாதியானது. பழமையை ருஷ்யா வெறுக்கவில்லை. பழமைச் சுரங்கத்தைத் துருவி ஆராய்ந்து பல விலையுயர்ந்த இரத்தினங்களை அவர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள். புதுமையிலும் அவர்களுக்கு ஆர்வமுண்டு. பின்வரும் புள்ளி விவரங்கள் இதனை விளக்கும்.

கலைஞர்கள் யாராயிருந்தாலும் மதிப்புண்டு

ஒரு வருஷத்தில் ருஷ்யாவில் மொத்தம் 43 ஆயிரம் புத்தகங்கள் வெளியாகி யிருக்கின்றன. அவற்றில் செலவான பிரதிகளின் எண்ணிக்கை 70,10,00,000. இதில் 12 கோடி, சிறுபான்மைத் தேசிய இனங்களின் பாஷைகளில் வெளியான புத்தகங்கள். 'டால்ஸ்டாய்', 'டர்ஜினீவ்' 'புஷ்கின்', 'டாஸ்டாய்வெஸ்கி' ஆகிய பிரபல ருஷ்ய ஆசிரியர்களின் புத்தகங்கள் கோடிக்கணக்கில் செலவழிந்திருக்கின்றன. வெளிநாட்டு ஆசிரியர்களுக்கும் ருஷ்யாவில் மதிப்பு உண்டு. இங்கிலாந்தில் ஆசிரியர் சார்லஸ் டிக்கன்ஸனது புத்தகங்கள் இதுவரை மொத்தம் எத்தனை செலவழிந்திருக்குமோ, அத்தனை, சென்ற 20 வருஷங்களில் ருஷ்யாவில் செலவழிந்திருக்கிறது. ஷேக்ஸ்பியருக்கு வேறெந்த தேசத்திலும் ருஷ்யாவிலிருப்பதைப் போன்ற மதிப்பு கிடையாது. நேற்றுவரை கல்வி வாசனையற்றிருந்த ருஷ்யாவின் பலபாகங்களிலும் ஷேக்ஸ்பியரது நூல்கள் ஆர்வத்தோடு வாசிக்கப்படுகின்றன. அவரது நூல்கள் 17 பாஷைகளில் மொழிபெயர்க்கப் பெற்றிருக்கின்றன. ஆர்க்கேஞ்சலிலும், உஸ்பெக்கிஸ்தானிலும் 'ஹாம்லெட்' நாடகம் சர்வசாதரணமாக நடிக்கப்படுகிறது 1941ல் வாரனேஷின் நகரில் 'ஹாம்லெட்' நாடகம் ஆரம்பிக்கும் இரவிற்கு முன்னரே 1200 டிக்கட்களும் விற்கப்பட்டுவிட்டன. பின்னர், ஷேக்ஸ்பியரின் உள்ளக் கிடக்கை சரியானபடி நாடகத்தில் நடித்துக் காட்டப்பட்டதா என்று நடிகர்கள், விமர்சகர்கள் முதலியோர் 600 பேர் கூடி விவாதித்தனர். ஷேக்ஸ்பியரது நாடகங்களுக்கான ஆயிரக்கணக்கான ஜனங்கள் கூடுகிறார்கள். நாடகம் ஆரம்பிப்பதற்கு வெகு நேரத்துக்கு முன்பே 'டிக்கட்டுகள்' விற்பனை முடிந்துவிடுகிறது.

ஒவ்வொரு வருஷமும் ஷேக்ஸ்பியரது பிறந்த நாளை ருஷ்யாவில் ஒருவாரம் கொண்டாடுகிறார்கள். அவ்வாரத்தில் 800 நாடக அரங்குகளில் அவர் எழுதிய நாடகங்கள் நடிக்கப்படுகின்றன. அதே சமயத்தில் ஷேக்ஸ்பியரது ஜன்ம தேசத்தில் உள்ள BBC என்ற தேசிய ரேடியோ ஸ்தாபனம் அவரைப்பற்றி ஒருவார்த்தைகூடப் பேசாமல் அவரது பிறந்த நாளன்று மௌன விரதம் அனுஷ்டித்தது.

சமதர்மம் வந்தால் பழைய கலைகள் அழிந்துபோகும் என்று சொல்லுவோருக்கு இது சரியான மறுப்பு.

புதிய நாடகசாலைகள் இப்பொழுது கட்டப்படுகின்றன. 1940ல், 95 ஆயிரத்து அறுநூறு அமெச்சூர் நாடகக் கழகங்கள் ருஷ்யாவில் இருந்தன. அவற்றுள் 45,000 சபைகள் அகில ருஷ்ய நாடகப் போட்டியில் கலந்துகொண்டன.

சோவியத் இலக்கியம் இப்புதிய எழுச்சியைப் பிரதிபலிக்கிறது. மேனாட்டு இலக்கியத்தில் காணப்படும் நம்பிக்கையின்மை, தொடர்ச்சியும் இலட்சியமுமற்ற சம்பவக் கோவை ஆகியவற்றை ருஷ்ய இலக்கியத்தில் காண முடியாது. அவர்களது வாழ்க்கையில் போலவே இலக்கியத்திலும் நம்பிக்கையும், ஆர்வமும் தொனிக்கின்றன. இலக்கியத்துறையில் இப்புதுமைக்கும், பழமைக்குமுள்ள வித்தியாசத்திற்குக் காரணம் என்ன? புதிய வாழ்க்கை நிலைக்கும், பழைய வாழ்க்கை நிலைக்குமுள்ள வித்தியாசம் தான் காரணம்.

எது சுதந்திரம்?

தனி மனிதனது சுதந்திர விஷயத்தில் ருஷ்யாவினிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியது எவ்வளவோ இருக்கின்றன. ருஷ்யா வேறு தேசங்களிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டியதும் உண்டு. பொதுமக்கள் அவை

வருக்கும் சமவசதிகளை அளித்து அவர்களுக்குப் பொருளாதார சுதந்திரம் அளித்திருக்கிறது ருஷ்யா. இதுதான் உண்மையான சுதந்திரம். குழந்தைகளுக்கு இயற்கையாக அமைந்திருக்கும் திறமைகளை வளர்த்துக் கொள்வதற்கு வேண்டிய சமமான சந்தர்ப்பங்களை ருஷ்யா அளிக்கிறது. வேறு தேசங்களில் பணக்காரர்களது குழந்தைகளுக்கே இந்த சந்தர்ப்பங்கள் கிடைக்கும். ஏழைக் குழந்தைகள் சிறுவயதிலேயே வயிற்றுப் பாட்டுக்காக வேலை செய்யப் போக வேண்டியதுதான்!

ருஷ்யாவில் மனிதன் பூரண வளர்ச்சி பெறுவதற்கு வேண்டிய சுதந்திரம் இருக்கிறது. 'சுதந்திரம்' என்ற பெயரால் ஒரு சிலர் பெரும்பான்மையோரைச் சுரண்டும் வழக்கம் அங்கில்லை.

1820ம் வருஷம் இங்கிலாந்தில், ஒரு நாளைக்கு 16 மணி நேரம் வேலை செய்யத் தொழிலாளருக்கு "சுதந்திரம்" இருந்தது. ஆறு வயதிலேயே சம்பாத்தியம் தொடங்கலாம். இந்த "சுதந்திரங்கள்" இன்று கிடையாது. ஆனால் இன்றும், வயது வந்த தொழிலாளர்களை லாபம் சம்பாதிக்கக் கருவிகளாக உபயோகிக்க முதலாளிகளுக்கு "சுதந்திரம்" இருக்கிறது. இத்தகைய சுதந்திரங்கள் ருஷ்யாவில் இல்லை. இதற்காக நாம் வருத்தப்பட வேண்டியதே இல்லை.

இந்தப் பொய்யான சுதந்திரங்கள் மறைந்துவிட்ட பிறகு எல்லோருக்கும் புதிய சுதந்திரங்கள் கிடைத்திருக்கின்றன. ஒரு தனி மனிதன் இன்றைய ருஷ்யாவில் தன் சக்திக்கும், போக்குக்கும் பொருத்தமான எந்த வேலையிலும் ஈடுபடலாம். சிறப்பாகத் தனக்கு வாய்த்திருக்கும் சக்திகளைப் பண்படுத்தி வளர்ச்சியுறச் செய்யத் தேவையான கல்விப் பயிற்சி பெற ஒவ்வொருவனுக்கும் உரிமை இருக்கிறது. சரியான வயதில் பெண்ணை மணம் செய்து

கொள்ளவும், சோற்றுக் கவலையில்லாமல் குழந்தைகளைப் பெறவும் ருஷ்யாவில் எவ்விதத் தடையும் கிடையாது. இதற்கெல்லாம் மேலாகத் தனித்து நிற்கவேண்டும் என்ற குறுகலான மனப்பான்மையினின்று மக்களுக்கு சோவியத் அமைப்பு பரிபூரண விடுதலையளிக்கிறது.

அவனவனுக்குத் தோன்றியதைச் செய்வதற்கு ருஷ்யாவில் சுதந்திரம் இல்லை. ஆனால் சமூக நன்மைக்குகந்த எந்தக் காரியத்தைச் செய்வதற்கும் தடையில்லாமல் இருப்பது மட்டுமல்ல; ஆதரவும் இருக்கும்.

பீதி ஏன் ?

இவ்வளவு விஷயங்களும் தெளிவாகிவிட்ட பின் பொதுவுடைமையைப்பற்றிய பயம் அர்த்தமற்றதாகிவிடும். பொதுவுடைமை மக்களின் சுதந்திரத்துக்கு உலைவைக்கிறதென்றும், உயர்வு தாழ்வில்லாமல் செருப்புக்குத் தகுந்தாற்போல் காலை வெட்டுகிறதென்றும் சொல்லுபவர்களின் கூற்று விஷமப் பிரச்சாரமென்பது மேற்சொல்லியவற்றால் விளங்கும்.

முதலாளித்துவ நாடுகளில் பணம் படைத்த ஒரு சில அதிருஷ்டசாலிகள், அதனால் தங்களுக்குக் கிடைக்கும் சௌகரியங்களை வெகுவாக மதிக்கிறார்கள். ஏனெனில் அது தங்களது உள்ளப் பண்பாட்டுக்கும், தங்களது குழந்தைகளது கல்விப் பயிற்சிக்கும், வேறு வசதிகளுக்கும் ஆதாரமாயிருப்பதை அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். ஆனால், தொழிலாளிகளோ இச் சௌகரியங்களைப் பெறுவதற்குப் பணம் தேடவேண்டும். பணம் தேட உழைக்க வேண்டும். உழைப்பின் கடுமை பணம் கிடைக்கும்போது இவ்வசதிகளை அனுபவிக்கும் சக்தியைப் போக்கடித்து விடுகிறது:

குடியிருக்கும் வீடு, பயிரிடும் தோட்டம், ரேடியோ, துணிமணி ஆகிய பொருள்கள் தனியுடைமையாக இருப்பதைப்பற்றி சோஷியலிஸம் எதிர்க்கவில்லை. ஆனால் அத்தகைய வாழ்க்கை வசதிகள் ஒருவர் பாக்கியில்லாமல் எல்லோருக்கும் இருக்கவேண்டுமென்று சொல்லுகிறது. முதலாளித்துவம் கட்டுப்பாடான கூட்டுறவு உழைப்பை உழைப்பாளிகளின்மீது சுமத்திவிட்டு அதிலிருந்து கிடைக்கும் நற்பயனை முதலாளிக்குப் பறித்துக் கொடுக்கிறது. முதலாளித்துவ நாடுகளில் நூறு பேர்களில் பத்து பேருக்குத்தான் பெயருக்கு சொத்து என்று ஏதாவது இருக்கும். மிகப் பெரும்பான்மையோருக்கு எவ்வித வாழ்க்கை வசதியும் கிடையாது. எல்லோருடைய வாழ்க்கை வசதிகளையும் அதிகரிக்கச் செய்வதே சோஷியலிஸத்தின் நோக்கம். சொத்துரிமையில் இரண்டு வகையுண்டு. இவற்றுள் முதலாவது பொருள் உற்பத்திச் சாதனங்களில் சொத்துரிமை. அதாவது நிலம், மில்கள், சுரங்கங்கள் முதலியவை. இவை சிலருடைய சொத்தாயிருப்பதால் அவர்களுக்குப் பிறருடைய வாழ்க்கையைக் கட்டுப்படுத்தும் சக்தி உண்டாகிவிடுகிறது. வெளிப்படையாகச் சொன்னால் இவற்றின் சொந்தக்காரர்கள் பெரும்பான்மையோரைப் பொருளாதார அடிமைகளாக்கிவிட முடியும். இத்தகைய சொத்துரிமை ஒழிய வேண்டும். இது தீமை பயக்கும் சொத்துரிமை.

இரண்டாவது, தேவைப் பொருள்களது சொத்துரிமை. ஆகாரம், உடை, இருப்பிடம், மோட்டார் கார், புஸ்தகங்கள், படங்கள், இது தவிர ஆரோக்கியத்துக்கும், மனோ வளர்ச்சிக்கும் பயன்படும் வாழ்க்கை வசதிகள் எல்லாம் இந்த வகையைச் சேர்ந்தவை. இந்த சொத்துரிமை ருஷ்யாவில் எல்லோருக்கும் உண்டு. முதலாவது வகை ருஷ்யாவில் இல்லை. ஏன் இல்லை? அது சிலருக்கு மட்டும் பண

வருவாயைக் கொடுத்து சமூகத்தில் இரண்டு வர்க்கங்களை உண்டுபண்ணுகிறது. இரண்டாவது வகையான சொத்துரிமையைச் சிலரது சிறப்புரிமை ஆக்கிவிடுகிறது. பெரும்பான்மையோருக்கு வாழ்க்கை வசதிகள் கிடைக்க வொட்டாமல் தடுக்கிறது.

* * *

அனுவசியமான ஆபீசர்கள் இல்லை

சோவியத்தில் அதிகார வர்க்கத் திமிர் அறவே கிடையாது. சோவியத் அதிகாரிகள் பொதுவுடைமை மனப்பான்மை யுடையவர்கள். பொதுநல ஊழியர்கள். முதலாளித்துவ நாடுகளில் அதிகார வர்க்கம் முதலாளிகளது கைப்பொம்மைகள். அவர்களது நலன்களையே பொது நலத்துக்கு மேலாகக் கருதுகிறது. ரயில்வேக்கள் சர்க்காரால் திறம்படவும், லாபகரமாகவும் நடத்தப்படுகிறது. ஆனால், சோவியத்தில் பொதுவாக தொழில்களில் அரசாங்க ஆதிக்கத்தைவிடப் பொது மக்களது ஆதிக்கமே அதிகம்.

சிறிய தொழில்கள் யாவும் கூட்டுறவு உற்பத்தி ஸ்தாபனங்களின் மூலம் நடத்தப்பெறுகின்றன. இவற்றில் உற்பத்தி செய்வோரனைவரும் அங்கம் வகிக்கிறார்கள். இது பிரதேசங்களுக்கு ஏற்றாற்போல மாறுபடும்.

பொதுவுடைமை முறையில் நடக்கும் உற்பத்திக்கும், விநியோகத்துக்கும், முதலாளித்துவ முறையைப்போல அவ்வளவு டைரக்டர்கள், 'மானேஜர்கள், உதவி மானேஜர்கள், விற்பனையாளர்கள், விளம்பர அதிகாரிகள், உற்பத்தி வல்லுநர்கள் ஆகிய அதிகாரிகள் தேவையில்லை. ஆகவே, இவர்களது ஊதியத்துக்கென முதலாளித்துவ நாடுகளில் செலவழியும் செல்வம், இங்கு மிச்சமாகிறது. இங்கு உருப்படியான தொழில் செய்பவர்களே அதிகம். ஆகவே பொருளுற்பத்தி அதிகமாகிறது. எல்லோருக்கும் கிடைக்

கும் பொருள் வசதியும், ஓய்வும் உயர்கிறது. "எப்பொழுது வேலை தொலைந்துவிடுமோ" என்ற ஏக்கமும், அதன் காரணமாக உண்டாகும் அடிமை மனப்பான்மையும் உழைப்பாளிகளுக்கு இருப்பதில்லை. உழைப்பாளிகளுக்கு உண்மையான சுதந்திரம் தோன்றுகிறது.

சோவியத்தில்தான் கற்பிற்குப் பங்கமில்லை

சோவியத்தில் மக்களின் கற்பு நிலைக்கு உலகில் எங்குமில்லாத மதிப்பு இருக்கிறது. ஏனெனில், அங்கு பணமும் ஸ்பரிச சுகமும் பெரிதாக மதிக்கப்பட்ட காலம் மலையேறிவிட்டது. நான் சில வருஷங்களுக்கு முன் ருஷ்யாவுக்குச் சென்றிருந்தபோது பெரிய நகரங்களிலும், கிராமங்களிலும் இரவில் தனியாகச் சுற்றி வருவதுண்டு. கடை வீதிகள், புத்தகக் கடைகள், ரயில்வே நிலையங்கள், சினிமாக் கொட்டகைகள் முதலிய ஜன நடமாட்டம் பெருத்த பலவிடங்களுக்கும் பொழுதுபோக்குக்காகச் செல்வேன். ஓரிடத்திலாவது இளம்பெண்கள் அவமானப்படத் தகுந்த எச்செயலிலும் ஈடுபட்டதை நான் காணவில்லை. ருஷ்யா ஒன்றைப்பற்றிதான் இவ்வளவு சொல்ல முடியும்.

இதற்குக் காரணங்களுண்டு. இளைஞர்களும், இளம் பெண்களும் சிருஷ்டி யின்பமளிக்கும் கல்வியிலும், தொழில்களிலும் ஈடுபட்டிருக்கின்றனர். அவர்கள் பருவமடைந்த பின்னர், வைத்திய சோதனையில் திருப்திகரமாகத் தேறினால் மணம் செய்துகொள்ளலாம். சிறு வயதிலிருந்து ஆண் குழந்தைகளுக்கும், பெண் குழந்தைகளுக்கும் ஒன்றாகவே கல்விப் பயிற்சி யளிக்கப்படுகிறது. உடலை விற்றுப் பணமாக்க வேண்டிய அவசியம் ருஷ்யாவில் மட்டும்தான் கிடையாது. ஆகவே, தன் மானத்தை விற்க ஒரு பெண்ணும் முன் வருவதில்லை.

* * *

மத சுதந்திரம் உண்டு

ருஷ்யாவில் மத சுதந்திரம் உண்டென்று முன்பே குறிப்பிட்டேன். ஜார் அரசர்கள் காலத்தில் மத ஸ்தாபனங்கள் பொது நலன்களுக்கு விரோதமாகப் பணக்காரர்களை ஆதரித்து வந்தன. ஆயினும் மதச் சடங்குகள் சட்டபூர்வமாக அடக்கப்படவில்லை. இன்று மதத்திற்கு அரசாங்கம் மதிப்புக் கொடுக்கிறது. ஸ்டாலின் அரசியல் அமைப்புச் சட்டத்தின் 124-வது பகுதி வருமாறு: "மனசாட்சிக்கு விடுதலை யளிப்பதற்காக மதம் அரசாங்க ஆதிக்கத்தினின்றும் பிரிக்கப்படும். அவ்வாறே கல்வி ஸ்தாபனங்கள் மத ஸ்தாபனங்களினின்றும் பிரிக்கப்படும். மதப் பிரச்சார உரிமையும், அதனை எதிர்த்துப் பிரச்சாரம் செய்யும் உரிமையும் சோவியத் குடிமக்களனைவருக்கும் வழங்கப்படுகிறது."

தனிப்பட்ட மத நம்பிக்கைகளிலோ, மத ஸ்தாபனங்களில் உள் விவகாரங்களிலோ அரசாங்கம் தலையிடுவதில்லை. மதக் குருமார்களுக்கு மற்ற ஜனங்களுக்குள்ள உரிமைகள் மட்டுமே உண்டு.

செயல் முறையில் மார்க்ஸியத்துக்கும், உண்மையான கிறிஸ்துவ மதத்திற்கும் விரோதம் எதுவும் இல்லை. மார்க்ஸியம் சமூகத்திற்கு ஒரு நேர்மையான அடிப்படையை நிறுவுகிறது. கிறிஸ்துவ நாடுகள் அனுமதித்திருக்கும் அநீதிகளை மார்க்ஸியம் அடியோடு தகர்த்துவிட்டது. சுயநலப் பற்றோடு ஒதுங்கி நிற்க விரும்பும் மனிதர்களுக்கு மார்க்ஸியம் இடங்கொடாது, அவர்களை சர்வ தேசிய மனப்பான்மை யுடையவர்களாக மாற்றி விடுகிறது. உலகில் ஒரு அங்கமாக நம்மாலான உழைப்பைப் பொது நலனுக்காகச் செய்து வாழ்வதுதான் உண்மையான கடவுள் நம்பிக்கையென நான் கருதுகிறேன். ஏனெனில், மார்க்ஸியம்

சுயநலப் பற்றினின்றும் பயங்களினின்றும் மனிதனை விடு விக்கிறது.

வாழ்க்கையின் சிக்கலில் ஒரு பொதுவான தத்து வததைக் காண்பதும், அதன்மூலம் வாழ்க்கையின் உண் மையையும், அழகையும் உணர்வதும், உணர்ந்த அழகைச் சிருஷ்டிப்பதும், இதற்கெல்லாம் மேலாக ஒரு வர்க்கமற்ற சமூகத்தை அமைப்பதும், உலக சகோதரத்துவத்திற்காகப் பாடுபடுவதுமே கடவுள் நம்பிக்கையின் சாரமாகும்.

ருஷ்யா இத்தகைய உயரிய மத உணர்ச்சியை நமக் குப் புகட்டுகிறது, உலகில் எங்கும் குழப்பம் தாண்டவ மாடுகிறது. வல்லரசுகள் நீதி வரம்பைமீறி சிறு நாடுகளை ஆக்கிரமிக்கின்றன. இயற்கைச் செல்வங்களும், அவற்றி லிருந்து இயந்திர சாதனங்களின் உதவியால் செய்யப்படும் செய்பொருள்களும் தனி மனிதர்களது ஏகபோக உரிமைக ளாகயுள்ளன. இதனால், மிதமிஞ்சிய உற்பத்தியும், பொரு ளாதாரக் குழப்பங்களும் உண்டாகின்றன. இக்குழப்பங் களை நிவர்த்திக்க வேண்டுமாயின் சிறுபான்மையோர் பெரும்பான்மையோரது உழைப்பிலிருந்து கொள்ளை லாபம் பெறுவதைத் தடுக்கவேண்டும். அப்படித் தடுத்துவிட்டால் எல்லோரும்உழைத்து அதன் பயனை எல்லோரும் அனுப விக்க வழியுண்டு. மதமும், பக்தர்களும் 'எல்லோரும் இன் புற்றிருக்க நினைப்பதுவே யல்லாமல் வேறொன்றறியேன்' என்றுதான் சொல்லுகிறார்கள் ஆகவே மதமும் ருஷ்யா விலிருக்கும் மார்க்ஸிய அரசியல் முறையும் அடிப்படை யில் முரணானவையல்ல.

சோஷலிஸம், கம்யூனிஸம் என்றால் என்ன?

ருஷ்யர்கள் இன்னும் இலட்சியத்தை அடைந்துவிட வில்லை மார்க்ஸிய இலட்சியம் முற்போக்கானது. இலட் சியப் பாதையில் அது விரைவாக முன்னேறி வருகிறது.

இன்று, 'சோஷலிஸ' இலட்சியத்தை ருஷ்யா எட்டிப் பிடித்து விட்டது. இதற்கடுத்தபடி "கம்யூனிஸம்". இவை யிரண்டிற்கும் ஒரே ஒரு வேறுபாடுதான். சோஷலிஸம் கிரியாம்சையில் வந்துவிட்ட சமூகத்தில் ஒவ்வொரு தனி மனிதனும் சமூகத்துக்கு தன்னுலியன்ற உழைப்பை அளிப் பான். அதற்குப் பதிலாக அவன் உழைப்பிற்குத் தருந்த பிரதி பயனை சமூகம் அவனுக்கு அளிக்கும்

கம்யூனிஸ சமூகத்தில் ஒவ்வொருவரும் தனது சக்திக் குத் தகுந்த உழைப்பை சமூகத்திற்கு அளித்துவிட்டு. தனது தேவைகளனைத்தையும் சமூகத்திலிருந்து பெறுவர்.

ருஷ்யாவில் வேலைக்குத் தகுந்த ஊதியமே அளிக்கப் படுகிறது. ஆனல் வேலைத்திறன் அதிகமாக அதிகமாக ஊதியமும் அதிகமாகும். முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளரது தொழில் திறமையை உயர்த்த ஒருவித வசதியும் அளிக்கப்படுவதில்லை. ஆனல், ருஷ்ய அரசாங்கம் தொழிலரசு; ஆகையால், இத்துறையில் அது மிகுந்த சிரத்தை காட்டுகிறது. ருஷ்யாவில் ஒரு தொழிலாளியின் கூலிக்கும், பெரிய விஞ்ஞானியின் ஊதியத்திற்கும் வித்தி யாசம் உண்டு. ஆனல், இந்த வித்தியாசம் இந்தியாவில் இருப்பதைப்போல் அவ்வளவு அதிகமாக இராது. உதா ரணமாக, இந்தியாவில் ஒரு மின்சார சப்ளைக் கம்பெனியின் தலைமை அதிகாரிக்கு சம்பளமும், கமிஷனுமாக மாதத் திற்கு ரூபாய் 30 ஆயிரம் ஊதியம் கிடைக்கிறது. சாதாரண மாகத் தொழிலாளிக்கு அதே கம்பெனியில் யுத்த காலத்தில் 25 ரூபாயும், சமாதான காலத்தில் 12 ரூபாய்தான் கிடைக் கிறது. குறைந்த ஊதியத்தைவிட அதிகமான ஊதியம் 1200 மடங்குஇருக்கிறது. ருஷ்யாவில் இந்த வித்தியாசம் 10 அல்லது 15 மடங்குக்கு மேலிராது.

ருஷ்யா இனி அடுத்தபடியாக கம்யூனிஸ இலட்சியத்

தைப் பின்பற்றும். சோஷலிஸ அமைப்பின் மூலம் தங்கள் செல்வ நிலையைப் பெருக்கிக்கொண்ட பின் அதன் விநியோகத்தை சமமாக்க ருஷ்யர்கள் முனைவார்கள். செல்வ வளப்பமுள்ள தேசத்தில்தான் கம்யூனிஸம் தழைக்க முடியும். பெர்னுட்ஷா என்ற பேராசிரியர் சொல்லுகிற படி, "கம்யூனிஸ அமைப்பில் ஒரு நாடு வாழவேண்டுமானுல் அந்நாட்டினரனைவரும் பெருந்தன்மையுள்ள சான்ருேராக இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் தங்கள் உழைப்புக்குப் பிரதியாக தேவைகளுக்குத் தகுந்த ஊதியத்தை பொதுச் செல்வத்திலிருந்து பெறுவதில் திருப்தி ஏற்படும். வேலைக்குச் சோம்புகிற எந்த ஒரு தேசமும் இந்த உயரிய இலட்சியத்தை நெருங்க முடியாது". இதை மனத்துட்கொண்டே ருஷ்ய இளைஞர்கள் உயரிய இலட்சியங்களில் பயிற்றுவிக்கப்படுகிருர்கள். மேலும் பொதுநல உணர்ச்சியும், பொதுநல சேவையில் இன்பங்காணும் பண்பும் இளமையிலிருந்தே போற்றி வளர்க்கப்படுகிறது.

ருஷ்ய மார்க்ஸிய சமூகம் அடைந்துள்ள வெற்றி மகத்தானது. ஆனுல், இனி அடையப்போகும் வெற்றியோ சொல்லி அடங்காதது. பணத்துக்காகப் பணம் சேர்க்கும் உலோப குணம் ருஷ்யாவில் அடியோடு செத்துவிட்டது. சுய லாபத்தின்மீது இருந்துவந்த மோகம் இன்று அறிவியல் ஆராய்ச்சி ஆர்வமாக மாறிவிட்டது. பொதுநலத்திற்கும், சுயநலத்திற்கும் முன்னிருந்த முரண்பாடும் போராட்டமும் இன்றில்லை. வேலையின்மையால் வரும் மனச்சோர்வு, நோய் நொடியின்போது கவனிப்பாரில்லாமல் படும் மன வேதனை, கிழடுதட்டும்போது இயற்கையாகத் தோன்றுகிற குடும்பக் கவலை, இவற்றிற்கு மேலாகப் பொருளாதார முடை, இவை யாவும் ருஷ்யாவில் இன்று கிடையா. பொய்யும், புரட்டும் சுயநலமும் நிறைந்த முதலாளித்துவ வியாபார முறை வேரோடு அழிந்து போய்விட்டது. எல்

லோருக்கும் சுதந்திரமான சிருஷ்டி வேலைகளில் உற்சாகம் பொங்குகிறது.

"எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் நிறை" என்ற கொள்கையை ருஷ்யா கடைப்பிடித்து வருகிறது. இது உள் நாட்டிலுள்ள எல்லா ஜாதியாருக்கும் விடுதலையையும், உற்சாகத்தையும், ஒற்றுமை ஆர்வத்தையும் உண்டாக்கி யிருக்கிறது. இந்த ஒற்றுமை ஆர்வமும், தோழமை உணர்ச்சியும், கம்யூனிஸ சமூகத்தைக் கட்டுவதற்கு சரியான அஸ்திவாரமாகும். கம்யூனிஸம் ஏட்டுச் சுரைக்காய் தான் என்று நினைக்கும் சந்தேகப் பிராணிகள் யாராவதிருந்தால் அவர்களை நோக்கி, "ஒடேஸா, ஸெபாஸ்டபோல், ஸ்டாலின்கிராடு ஆகிய நகரங்களின் மகத்தான சுதந்திரப் போராட்டத்தை உற்று நோக்குங்கள்" என்று நான் கூறுவேன். பல துன்பங்கள் வாட்டும் யுத்தகாலத்தில்கூட, எல்லாவிதமான எதிர்ப்புகளையும் சமாளித்துக்கொண்டு அவர்கள் கருமமமே கண்ணாக உழைத்து வருகிறார்கள். இந்த உழைப்பும், உற்சாகமும், இலட்சியப் பற்றும் கம்யூனிஸத்தை செயல்முறையில் கொண்டுவர முடியாதென்றால் வேறெதனால்தான் முடியும்? ஆனால் எனக்கு மனித சக்தியில் நம்பிக்கை யிருக்கிறது. உலகமெங்கும் தொழிலரசு ஓங்க வேண்டிய முயற்சிக்கு ஊக்கம் தருவது ருஷ்யாவின் முன் மாதிரிதான். இதில் எனக்கு எவ்வித சந்தேகமும் கிடையாது. மார்க்ஸ் மனித சமூக வளர்ச்சியை ஆராய்ந்து வடித்தெடுத்த விதிகளின் தொடர்ச்சியாக வருங்கால சமூகத்தைக் கற்பனைக் காட்சியாகக் கண்டார். அக் காட்சி இன்று உருப்பெற்று வருகிறது.

••••••••••••